கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(08.04.2018 - 08 சித்திரை 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 181, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05


### திருத்தந்தையின் இம்மாத கருத்து

தனிமைப்படுத்தப்படும் பொருளாதாரத்தை மறுக்கவும், எப்படிப் புதிய பாதையை திறப்பது என்பதை அறியவும், பொறியியலாளர்கள் துணிவு கொள்ளும்படியாக திருத்தந்தையுடன் இணைந்து செபிப்போம்.



ஏமது தமிழ், சிங்கள சகோதரர்கள் அனைவருக்கும் ஞான ஒளியின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். பிறக்கப்போகும் புத்தாண்டில் பிரிவுகள் நீங்கிட, சகோதரத்துவம் வளர்ந்திட, வறுமை நீங்கிட, வசந்தம் பொங்கிட, வளம் செழிக்கும் ஆண்டாக அமைய வாழ்த்துகின்றோம்.



# பாஸ்கா திருவிழிப்பு திருப்பலியில் திருத்தந்தை



**அன்பு சகோதரர்களே, சகோதரிகளே,**

இந்த திருவிழிப்பு கொண்டாட்டத்தை, நாம் வெளியே, இருளில், குளிரில், தொடங்கினோம். ஆண்டவரின் மரணத்தால் உண்டான ஓர் அழுத்தமான மௌனத்தை நாம் உணர்ந்தோம். இத்தகைய மௌனம், சிலுவைக்கு முன், ஒவ்வொரு சீடரின் உள்ளத்தையும் அழுத்தியிருந்தது. இயேசுவின் மரணம் உருவாக்கும் வேதனை, சீடரை பேச்சிழக்கச் செய்கிறது. அத்தருணத்தில் என்ன பேசமுடியும்? தங்கள் போதகருக்கு எதிராக சொல்லப்பட்ட பொய் சாட்சிகள், தவறான தீர்ப்பு அனைத்திற்கும் முன் சீடர்கள் ஒன்றும் சொல்லவில்லை. தங்கள் போதகருக்குப் பதிலாக தங்கள் வாழ்வை அளிக்க இயலாத நிலையை சீடர்கள் உணர்ந்தனர். இன்னும் கொடுமை என்னவெனில், அவர்கள் அவரை விட்டு ஓடி ஒளிந்துகொண்டனர் (காண்க. யோவான் 18:25-27).

மனதை உடைக்கும், வேதனை நிறைந்த இந்த இரவில், "எப்போதும் இப்படித்தான் நடக்கிறது" என்று சீடர்கள் எண்ணியதால், அவர்களது நினைவுகள் திருடப்பட்டன, நம்பிக்கை வாயடைத்துப் போனது. "உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. இனம் முழுவதும் அழிந்து போவதைவிட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என்பதை நீங்கள் உணரவில்லை" (யோவான் 11:50) என்று கயபா கூறிய சொற்களை, இதுதான் "வழக்கமாக நடப்பது" என்று சீடர்கள் நினைத்தனர்.

நம்மை ஆட்டிப்படைக்கும் இந்த மௌனத்திற்கு நடுவே, கற்கள் கத்துகின்றன (காண்க. லூக்கா 19:40)...

15

# இலங்கைக்கான வத்திக்கான் தூதரகத்தின் ஊடக வெளியீடு



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயராக, வணக்கத்துக்குரிய அருட்பணி. ஜயகொடி ஆராச்சிகே தொன் அன்தனி ஜயகொடி அவர்களை நியமித்துள்ளார் என்பதை இன்று சித்திரை மாதம் 4ம் திகதி இலங்கையின் வத்திக்கான் தூதரகம் அறிவித்துள்ளது.

அருட்தந்தை அன்தனி ஜயகொடி அவர்கள், 1958ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ம் திகதி, கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த பமுனுகம என்னும் இடத்தில் பிறந்தவர். இவர் தனது கல்வியை (1964-1974) பமுனுகம புனித யோசேப்பு பாடசாலையிலும், கொன்சால்வேஸ் பாடசாலையிலும், மேலும் கொழும்பு புனித அலோசியஸ் சிறிய குருமடத்திலும் (1975) மேற்கொண்டார். 1978ம் ஆண்டு, அம்பிட்டிய தேசிய குருமடத்தில் இணைந்த இவர் மெய்யியல், இறையியல் ஆகிய துறைகளில் கல்வியை முடித்துக் கொண்டு, 1985ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி, கொழும்பில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

கழுத்துறை இடைநிலை குருமடத்தில் தனது குருத்துவ பணியை ஆரம்பித்த இவர், பங்குத்தந்தையாக வேவல, பன்னிப்பிட்டிய, ஹல்பே, வெலிவிட்ட ஆகிய பங்குத்தளங்களில் கடமையாற்றியுள்ளார். பின்னர் உரோமையிலுள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்தில் இணைந்து மெய்யியல் துறையில் பயின்று முதுமாணிப்பட்டம் பெற்றார்.

கண்டி தேசிய குருமடத்தில் பயிற்சியாளராகவும் நிதி பொறுப்பாளராகவும் கடமையாற்றிய பின்னர் தேசிய குருமட மெய்யியல் பிரிவு நிர்வாகியாகவும் பணியாற்றினார். 2005ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டு வரை தேசிய குருமட அதிபராகவும் கடமையாற்றினார்.

2011ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கொழும்பு உயர்மறைமாவட்ட குருத்துவ உருவாக்கம், மற்றும் தேவ அழைத்தல் ஊக்குவித்தல் போன்ற பணிகளுக்கு ஆயர் பதிலாளராகவும் கொழும்பு புனித ஜோன் வியான்னி குருமட அதிபராகவும் கடமையாற்றி வந்துள்ளார்.

**2018 சித்திரை 4ம் திகதி**

**கொழும்பு**

APOSTOLIC NUNCIATURE SRI LANKA

## கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் திருத்தைலம் ஆசீர்வதித்தல்



பொரள்ளை அனைத்து புனிதர் ஆலயத்தில் 26.03.2018 அன்று திருத்தைலம் ஆசீர்வதிக்கும் திருப்பலி பேராயரின் தலைமையில் நடைபெற்றது. பல குருக்களும் இவ்வழிப்பாட்டில் கலந்து கொண்டனர்.

அன்றைய திருப்பலியில் பேராயர் தனது மறையுரையில் புனித வாரத்தில் இருக்கும் நாம் இயேசு தன்னையே அர்ப்பணித்து சிலுவையில் தன் உயிரை எமக்காக கையளித்தார். இயேசுவின் பிரதிநிதியாக இருக்கும் குருக்களும் தம் வாழ்வை அர்ப்பணித்து தொடர்ந்து தமது பணியை செய்வதே எமது கடமையாகும். குருத்துவ திருநிலைப்படுத்தலின் போது எண்ணெய் பூசி....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## மரியா, திருஅவையின் அன்னை - திருவிழா



தூய ஆவியார் பெருவிழாவுக்கு அடுத்து வருகின்ற திங்கட்கிழமை, புனித கன்னி மரியா, திருஅவையின் அன்னை என்ற விழா சிறப்பிக்கப்படும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்துள்ளார்.

பெந்தக்கோஸ்து நாளின்போது தூய ஆவியாருக்காகக் காத்திருந்ததிலிருந்து வருகின்ற, அன்னை மரியின் ஆன்மீகத் தாய்மை, இந்த உலகில் பயணம் மேற்கொள்ளும் திருஅவையை, தாய்க்குரிய அன்போடு எப்போதும் காத்து வருகின்றது என்பதற்கு முக்கியத்துவம் அளித்து, இந்த விழா உருவாக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் இந்த விதிமுறை பற்றி அறிக்கை வெளியிட்டுள்ள, திருப்பீட திருவழிபாட்டுப் பேராயம், அன்னை மரியா, லூர்து நகரில், முதன் முதல் காட்சியளித்த...

தொடர்ச்சி 13ம் பக்கம்..

## கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின் புனித வார நிகழ்வுகள்

## கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில்







### பேராயர் அவர்கள் பெரிய வியாழன் திருவழிபாட்டில்

இயேசு எவ்வாறு மனுக்குலத்திற்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தாரோ அதேபோல் குருத்துவத்தைக் கொண்டாடும் இந்நன்நாளில் அனைத்து குருக்களும் இயேசுவைப் போல் நல்லாயனாக இருந்து தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களுக்காக தம்மை அர்ப்பணித்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

எமது பெற்றோர், வீடு, சொத்துக்கள், படிப்பு இவைகளை விட்டுவிட்டு இறைமக்களுக்காக நம்மை அர்ப்பணிக்க வேண்டும். குருக்கள் தங்கள் பங்கு மக்கள் மேல் அக்கறைக் கொண்டு, அவர்களில் கவனம் செலுத்தி, அவர்கள் கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, அவர்களுக்கு உதவிக் கரம் நீட்ட வேண்டும் என்று தனது மறையுரையில் கூறினார்.

**கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்தின் மூலைக்கல் ஆயிற்று (தி.பா 118)**

# எதேர்ச்சையாக இடம்பெற்ற தனிப்பட்ட நபர்களிடத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிகரமான சம்பவத்தால், இந்நாட்டின் இனங்களுக்கிடையிலான சமாதானத்தை சீர்குலைப்பதற்கு முயற்சிப்பவர்களின் சதித்திட்டங்களுக்கு அகப்படாதீர்கள்.

"நாட்டின் பெரும்பான்மையான இனத்தவராயினும், சிறுபான்மையான இனத்தவராயினும் எல்லோரும் நாட்டின் பிரஜைகளே. இனம், மதம் எனும் ரீதியில் பாகுபாடுகளை உருவாக்கி, பிரிவினைகளுக்கு இடமளிப்பது அவசியமற்ற செயலே. தனிப்பட்ட நபர்களுக்கிடையில் எதேர்ச்சையாக இடம்பெற்ற கிளர்ச்சிகரமான சம்பவத்தால், இந்நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு முயற்சிப்பவர்களின் சதித்திட்டங்களுக்கு நாம் அகப்படகூடாது என கொழும்பு உயர்மறைமாவட்ட அதிமேதகு ஆயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கருத்து தெரிவித்தார்.



கடந்த நாட்களில் கண்டியில் இடம்பெற்ற கவலைகரமான சம்பவம் குறித்து, பௌத்த, இஸ்லாமிய, இந்து சமயத் தலைவர்கள், பொலிஸ் ஊடகத் தலைவர்கள் ஆகியோருடன் கொழும்பு உயர்மறைவாட்ட ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற ஊடவியலாளர்களுடனான சந்திப்பில் கர்தினால் அவர்கள் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், முப்பது வருட காலமாக நாட்டில் நிலவிய....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# வெள்ளவத்தையில் 2வது முறையாக பெரிய சிலுவைப்பாதை



வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் 2வது தடவையாக புனித வெள்ளியன்று (30.03.2018) பங்கு தந்தை வணக்கத்திற்குரிய அருட்பணி. மனோகுமாரன் அடிகளாரில் தலைமையில் மும்மொழிகளிலும் திறந்தவெளி சிலுவைப்பாதை காலை 7.30 மணிக்கு நடைபெற்றது. அன்றைய நிகழ்வில் சிலுவை பற்றிய மனதைத் தொடும் இறைவார்த்தைகளும், செபங்களும் அன்றைய வழிபாட்டை சிறப்புச் செய்தது. இச்சிலுவைப் பாதையில் அநேக மக்கள் கலந்து கொண்டு புனித வெள்ளி தினத்தை பக்தியுடன் அனுசரித்தார்கள்.

**தகவல் : திரு. டேவிட்.**






கொழும்பு மறைமாவட்டத்தின் பங்குகளில் இயங்கும் தமிழ் மரியாயின் சேனையின் உதவி உறுப்பினர்களுக்கும், வளர்ந்த சேனையாளர்களுக்கான தவக்கால உள்தியானம் கடந்த சனிக்கிழமை 10.03.2018 கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

"மனமாற்றத்தினுடாக மரியன்னையின் அர்ப்பணம்மிக்க பணியாளராவோம்" என்ற தொனிப்பொருளில் தியானத்தை கிளேரேசியன் சபையைச் சார்ந்த அருட்பணி ரூபன் அடிகளார் தியானத்தை வழிநடத்தினார். மரியாவின் அர்ப்பணமுள்ள வாழ்விற்கு அவரது தூய்மை, தனித்துவம், தன்னல மறுப்பு, பிறர்சிநேகம் , இறைத்திட்டத்திற்கு ஏற்புடைமையானமை என்பன மீட்புத்திட்டத்திற்கு அவரை எவ்வாறு உடன் உழைப்பாளராக்கியது என்பதை விவிலிய ஆதாரங்ளை முன்வைத்து விளக்கினார்.

மாலை 5.00 மணிவரை நடைபெற்ற இத்தியானத்தில் திருப்பலியைத் தொடர்ந்து, இடம்பெற்ற தியான உரையில் "உலகிற்கு உப்பு நீங்கள்" (மத் 5.13) உப்பின் சாரம் என்ற பதம் குறித்து நிற்கும் அதன் தனித்துவம், தூய்மை, பாதுகாப்பளிக்கும் தன்மை, ஏனைய பொருட்களுடன் இணைந்து சுவைகொடுக்கும் பண்பு என்பவை அது கரைந்து தன்னிலை இழக்கும்போதுதான் தன் நோக்கத்தை எய்துகின்றது. தியாகம் என்ற தன்னல மறுப்பு அர்ப்பணம் அற்றுப்போயின் சாரமற்ற உப்பின் இறுதி நிலை பணியாளர் வாழ்விற்கு எஞ்சுகின்றது என்பதை...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



கொழும்பு செக்கடித்தெரு பங்கின் புனித வெள்ளி அன்று திறந்தவெளி சிலுவைப்பாதை (30.03.2018) காலை 6.00 மணிக்கு நடைபெற்றது. இச்சிலுவைப்பாதையின் சிலுவைத் தியானங்கள் அருட்தந்தை கிளேரியன் பர்னாந்து அடிகளாரால் வழங்கப்பட்டது. திருச்சிலுவையை பங்குத்தந்தை, மற்றும் அருட்சகோதரிகள், இளைஞர்கள், பங்கு மக்கள் தூக்கிச் செல்வதையும், பங்குபற்றிய மக்களையும் படத்தில் காணலாம். **தகவல்:– திரு. டிக்சன் பர்னாந்து**

# மத்திய கொழும்பு மறைக்கோட்டத்தில் நடைபெற்ற ஒப்புரவுத் திருப்பலி



**சிலுவைப் பலியின் மூலம் எமது கவலைகள், துன்பங்களை வெற்றியின் சின்னங்களாக பெற்றுக்கொள்ள இயேசு கிறிஸ்து எம்மை அழைக்கின்றார்.**

மத்திய கொழும்பு மறைக்கோட்டத்தில் நடைபெற்ற ஒப்புரவுத் திருப்பலியில் / பாவமன்னிப்பு வழிபாட்டில் கர்தினால் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார். "மனிதன் இவ்வுலகில் படைக்கப்பட்ட நாள் தொடக்கம் கவலைகள் / துன்பங்கள் அவனுக்குச் சொந்தம். உடல், உள, ஆன்மீக ரீதியான துன்பங்கள், பிரச்சினைகள் எமது வாழ்வில் வரும்போதும், அக் கவலைகள் துன்பங்களை வெற்றியின் அடையாளங்களாக சிலுவைப் பலியின் மூலம் பெற இயேசு கிறிஸ்து எம்மை அழைக்கின்றார். கொழும்பு உயர்மறைமாவட்ட கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த போயாதினம், கொழும்பு மருதானை புனித ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற மத்திய கொழும்பு மறைக்கோட்ட பாவமன்னிப்பு வழிபாடு மற்றும் நற்கருணை ஆசீர்வழங்கல் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆற்றிய உரையிலேயே இவ்வாறான கருத்துக்களை முன்வைத்தார். "கிறிஸ்தவ வாழ்வு மற்றும் கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு இணங்க வாழ்தல் இலகுவான விடயமல்ல. பகைவனை அன்பு செய்தல், எமது வலது பக்க கன்னத்திற்கு அறைபவனுக்கு இடப்பக்க கன்னத்தையும் காட்டுதல், எமக்கு ஒரு கிலோ மீற்றர் பயணம் செல்ல வற்புறுத்துபவனுக்காக இரண்டு கிலோ மீற்றர் பயணம் செல்வது போன்றன எமக்கு கிடைக்கும் சிலுவைகள் ஆகும். இச் சிலுவைகளைத் தாங்கிக் கொண்டு எமக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை இறைத்திருவுளத்திற்கு ஏற்ப நிறைவேற்றி வாழ்வது என்பது கிறிஸ்தவர்களாகிய எமக்கு இருக்கும் சவால்களாகும்.

**தகவல்:– திரு. T. சுனில் பர்னாற்ந்து, ரொஷான் பிரதீப்.**

# மன்னாரில் தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை



மன்னார் மறைமாவட்டத்தின் கலையருவி அமைப்பினால் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை நிகழ்வு அண்மையில் நடாத்தப்பட்டது. மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கலையருவி அமைப்பின் இயக்குனரும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் நிறுவுனருமாகிய அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார்.

தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்திருந்த அருட்திரு. அமுதன் அடிகளார் இந்த நினைவுப் பேருரையை நிகழ்த்தினார். "தனிநாயகம் அடிகளார் கண்ட தமிழ் ஆன்மீகம்" என்ற தலைப்பில் இந்த உரை அமைந்திருந்தது. அமுதன் அடிகளாரை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்துவந்த - கனடாவில் வசிக்கும் தமிழ் ஆர்வலர் - திரு. அன்ரன் பிலிப் சின்னராசா அவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்கள் அமுதன் அடிகளாருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் திரு. பிலிப் சின்னராசா அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மன்னார் ஆயர் உட்பட பல குருக்கள், துறவியர், தமிழ் ஆர்வலகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். நிகழ்வின் நிறைவில் திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

ஞான ஒளி GNANA OLI ඥාන ඔලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
08 சித்திரை, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# இதயத்தின் இரக்கமே இறையிரக்கம்

இம்மாதத்தின் தொடக்கத்திலே இயேசுவின் உயிர்ப்பு விழாவில் பங்கெடுத்த நாம் தொடர்ந்து உயிர்ப்பின் அனுபவங்களை பெற்றுக் கொள்ளுவோம். புனித பேதுருவைப் போல, மகதலா மரியாளைப்போல, யோவானைப்போல, தோமையாரைப்போல, ஏனைய அப்போஸ்தலர்களைப்போல உயிர்த்த இயேசுவின் அனுபவத்தில் வாழ அழைக்கப்படுகின்றோம்.

இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் பல மாற்றங்கள் நடந்ததை நாங்கள் நற்செய்தி நூலில் வாசிக்கின்றோம், கேட்கின்றோம். அடையாளங்கள் மூலமாக இயேசுவை அப்போஸ்தலர்கள் கண்டுகொண்டார்கள். அதன்பின் விசுவசித்தார்கள். மாற்றம் பெற்றார்கள் என்று நாம் கண்டுகொள்கிறோம். அங்கு ஒரு ஒரு புதிய சமுதாயம் உருவாகுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

இயேசுவின் இழப்பினால் சோர்ந்து போய், ஏமாற்றத்தோடு வாழ்ந்த சீடர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியைத் தந்தது, பயத்தை நீக்கியது. ஆகவே பல்வேறு ஏமாற்றங்களால் சோர்ந்துபோய் இருக்கும் எமக்கு உயிர்த்த ஆண்டவரின் இறையாசீர் நிறைவாக கிடைக்க விசுவாசம் கொள்வோம்.

இம்மாதத்தின் 8ம் திகதி நாம் இறையிரக்கப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இதயத்தின் ஈரமே இறையிரக்கம். இயேசுவின் இதயத்தில் ஈரம் இருந்தது அதனால் தான் மானிடத்தை மீட்க தம் உயிரைத் தந்தார். இயேசு துன்புறும் மனுக்குலத்தின் துன்ப துயரங்களை தன்னிலே ஏற்றுக்கொண்டார்.


ஆகவே இறை இரக்கம் என்பது வருடத்திற்கு ஒரு முறை கொண்டாடும் கொண்டாட்டம் அல்ல, மாறாக எமது வாழ்வு முழுவதும் இதயத்தில் இரக்கம் உள்ளவர்களாக, ஈரம் உள்ளவர்களாக வாழவேண்டும். இரக்கச் செயல்களில் ஈடுபட வேண்டும், எமக்கு அடுத்திருக்கும் சகோதர சகோதரிகள் மட்டில், இரக்கச் செயல்களைச் செய்ய வேண்டும். இவற்றில் இருந்து பின்வாங்காது, சாக்குப் போக்குச் சொல்லாது இருக்க வேண்டும் என்று இறை இரக்கப் பக்திக்கு முக்கியமானவராக விளங்கும் தூய பவுஸ்தினாவின் குறிப்பேட்டில் இரக்கத்தின் குறிப்பேட்டில் ஆண்டவர் இவ்வாறு கூறினார்.

ஆகவே இறை இரக்கத்தின் நவநாளை செய்வது நல்லது. அது நம்மை இதயத்தில் இரக்கமுள்ளவர்களாக, ஈரமுள்ளவராக வாழ செய்யும். ஏழைகள், நோயாளிகள், பசித்திருப்போர், தாகமாயிருப்போர், அந்நியராய் இருப்போர், ஆடையின்றி இருப்போர், சிறையில் வாடுவோருக்கு நம் இரக்கத்தை காட்டுவோம்.

அடுத்து விசேடமாக இம்மாதம் 9ம் திகதி கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அன்னை மரியின் சிறுமொழி அதாவது "ஆம்" என்ற சொல், புதிய வாழ்வின் தொடக்கமாக இருந்தது. நாமும் இறைதிருவுளத்திற்கு சிறிய மொழியாகிய "ஆம்" என்று கூறி இறைவனுக்கு நம்பிக்கை உடையவர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம்.

எதிர்வரும் 13, 14ம் திகதிகளில் தமிழ், சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் எம் சகோதரர்களுக்கு பிறக்கவிருக்கும் புதிய ஆண்டிலே புதுமை காணவும், புத்துயிர் பெறவும், புன்னகையுடன் வாழவும் ஞான ஒளி வாழ்த்துகின்றது.

இறையாசிருடன் ஆசிரியர்



# உயிர்ப்பு அனுபவங்கள்

**உயிர்ப்பு உண்மை:-**

மனிதரின் பார்வைக்கு மாலையில் முற்றிலுமாக மறையும் கதிரவன், மறுநாள் காலையில் இயல்பாக எழுந்து புறப்படுகின்றான். ஆனால் உண்மையில் கதிரவன் மறைவதுமில்லை, தோன்றுவதுமில்லை. அது தன் வட்டப்பாதையில் தொடர்ந்து சுழன்றுக் கொண்டுதான் இருக்கிறது. "இருக்கிறவர் நாமே" எப்படி இல்லாமல் போக முடியும், இறக்கவும் முடியும். எம்மானுவேல் - கடவுள் நம்மோடு என்றவர் "எப்படி நம்மை விட்டு பிரிய முடியும், இயேசு புதுமைகள் புரிந்தார். அதைவிட கோடான கோடி புதுமைகளை அற்புதங்களை உயிர்த்த பின் புரிந்தார். எல்லாரையும் கல்வாரியில் மீட்ட இயேசு பூமியிலுள்ள கடை மனிதனும், மீட்கப்படும் வரை நம்மை விட்டு பிரியமாட்டார். அவர் எப்போதும் என்றென்றும், நம்மோடு இருக்கிறார்.

இறந்தவராகக் கருதப்பட்ட இயேசு எழுந்தார். உயிருடன் நின்ற எதிரிகள் சிதறுண்டு போனார்கள். பகைத்தவர்கள், பயத்துடன் ஓடிப் போனார்கள். இறையாட்சியை எதிர்பார்த்திருந்த மக்கள் ஆர்ப்பரிக்க இறைவன் அரியணை ஏறுகிறார். மரண பயத்தில், பாவ கலக்கத்திலிருந்த சீடர்கள் உள்ளத்தில் ஒளி வெள்ளத்தை உருவாக்கியது போல, சோகத்தில் இருந்தவர்களை இயேசுவின் உயிர்ப்பு மகிழ்ச்சியடையச் செய்தது.

### இயேசுவின் உயிர்ப்பை அனுபவித்தவர்கள்

இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தை அனுபவித்தவர்கள். யோவான், பேதுரு மகதலா மரியா.

மரியா கல்லறைக்கு வெளியே நின்று கொண்டிருந்தார். யோவான் கல்லறைக்கு உள்ளே சென்று பார்க்கிறார். பேதுரு கல்லறை வாயிலில் நின்றுகொண்டிருக்கிறார். இம்மூவரும் இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தை பெற்றார்கள். இவர்கள் மூவருக்கும் உயிர்த்த இயேசுவை அடையாளம் கண்டுகொள்ள உதவியது அன்பு ஒன்றே. யோவான் இயேசுவை மிகுதியாக அன்பு செய்தார். பாவியான மகதலா இயேசுவின் மன்னிக்கும் அன்பை அனுபவித்து இயேசுவை அன்பு செய்தார். ஆண்டவரை மூன்று முறை மறுதலித்த பேதுரு மனித பலவீனத்தால் பிழைசெய்தாலும், இயேசு பேதுருவை மிகவும் அன்பு செய்தார். ஆகவே இயேசுவை அதிகம் அன்பு செய்பவர்கள் தான் உயிர்ப்பின் அனுபவத்தை பெறுவார்கள்.

**உயிர்த்த இயேசுவின் அனுபவத்தை நாமும் பெறுவோம்.**

- இறைவார்த்தையில்
- அப்பம் பிட்குதலில் (திருப்பலியில்)
- கூடி வாழும் சமுதாயத்தில்

### இறைவார்த்தையில் இயேசு

எம்மாவுஸ் சீடர்களுடன் நடந்த உயிர்த்த இயேசு, அவர்களுடன் உரையாடுகிறார். மெசியா பாடுகள், இறப்பு, உயிர்ப்பு பற்றி விளக்குகிறார். சீடர்கள் அவர் இயேசுதான் எனப் புரிந்துக் கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது, நம் உள்ளம் பற்றி எரியவில்லையா" என்று பேசிக் கொண்டனர். இறைவார்த்தையில் உயிர்த்த இயேசு வாழ்கிறார், பிரசன்னமாயிருக்கிறார். அதனால் தான் வேதாகமத்தை வாசித்த பிறகு, "இது ஆண்டவர் தரும் அருள்வாக்கு" என்கிறோம். எனவே இறைவார்த்தையை நாம் நாள்தோறும் அர்த்தத்துடனும், நம்பிக்கையுடனும் வாசிக்கும் போது கடவுளின் உயிருள்ள வாழ்வு தரும் இறைவார்த்தையில் உயிர்த்த இயேசுவைக் காணலாம்.

### அப்பம் பிட்குதலில் இயேசு


எம்மாவுஸ் சீடர்கள் இயேசு அப்பம் பிட்கும் நிகழ்வில்தான் உயிர்த்த இயேசுவைக் கண்டு கொண்டனர் (லூக்.24:35). நாமும் திருப்பலி கொண்டாட்டத்தில் அருட்சாதனக் கொண்டாட்டங்களிலே குறிப்பாக நற்கருணையிலே உயிர்த்த இயேசுவைக் காணலாம். எனவே நாம் ஒவ்வொரு நாளும் திருப்பலி கொண்டாட்டத்தில் கலந்து நற்கருணை பெறும்போது உயிர்த்த இயேசுவின் அனுபவத்தை பெறுகிறோம்.

### கூடி வாழும் சமூகத்தில் இயேசு

சீடர்கள் ஒன்றுகூடி இருந்த பல சமயங்களில் உயிர்த்த இயேசு பிரசன்னமாகிறார். சீடர்கள் ஒரு மனப்பட்டு, செபித்தபோதும், கூடிவருபோதும், உயிர்த்த இயேசு தூய ஆவியார் வடிவில் அவர்கள் நடுவில் பிரசன்னமானார். எனவே நாமும் குடும்பங்களில், பணிபுரியும் இடங்களில், சமூகமாக கூடும் நேரங்கயில், சமூகமாக வாழும் போது உயிர்த்த இயேசுவைக் காண்கிறோம். இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தை பெறுகிறோம்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இறை இரக்கப் பெருவிழா
## சித்திரை 08




இரக்கத்தையும் அனுபவப்படுத்தி மனித நேயத்தையும் சகோதரத்துவத்தையும் சமநீதியையும் மக்களுடைய உள்ளங்களிலும் உறவுகளிலும் சமூகச் செயல்பாடுகளிலும் வளர்த்துவிடுவதே அவற்றின் பணி. ஆனால், அவற்றின் பெரும்பான்மையானச் செயல்பாடுகளைப் பார்க்கும்போது அவையும் இதயமில்லாதவையாக மாறிக் கொண்டிருக்கின்றனவோ என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், அவை கோடி கோடியாகக் கொட்டி வானுயர்ந்த கோபுரங்களையும் குவிமாடங்களையும் கொண்ட பெரிய கோயில்களைக் கட்டுதல், ஏழைகள் என்றுகூட வேறுபாடு காட்டாது எல்லாரிடமும் கட்டாய நன்கொடை பிரித்து ஆடம்பர விழாக்கள் வழிபாடுகள் கொண்டாடுதல் என்பவற்றை வாடிக்கையாக நடத்திக்கொண்டிருக்கின்றன. அதுபோல் புகழுரைகள், நட்சத்திர உணவு விடுதிப் பாணியில் அறுசுவை விருந்துகள் என்பவற்றுடன் யூபிலிகள் கொண்டாடுவது இன்றைய சமயக் கலாச்சாரம் ஆகியுள்ளது. மேலும், வாழ்வளிக்கும் இறைவனின் அனுபவம் பெற்று இவ்வுலக வாழ்வுப் பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் மனிதநேய உணர்வுகள், உறவுகள், சமூக ஈடுபாடுகள் என்பவற்றை வளர்க்கவும் ஆற்றல் அளிக்கவேண்டும். வாழ்வைத் தொடாத வரையில் அதாவது, உள்ளங்களையும் உறவுகளையும் ஈடுபாடுகளையும் பரிவிரக்கம் உள்ளவையாக மாற்றும் வரையில் இத்தகைய பக்திச் செயல்பாடுகளெல்லாம் வெறும் சொகுசு ஆன்மீகமே.

இந்நிலையில் ஏழைகளுக்குக் கல்வி, அனாதைகளுக்கு ஆதரவு, நோயாளர்களுக்கு மருத்துவ உதவி, நலிந்தோருக்குச் சமூக சேவைகள் எனும் சமயங்களின் பல்வேறு பணிகள் கூட இன்று மிகவும் நலிந்தும் மெலிந்தும் போய்க்கொண்டிருப்பதும் நாம் பரவலாகக் காணும் மெய்ம்மை.

அநீதியாகவும் பிறருக்குத் தீர்ப்பு வழங்குவதைத் தவிர்ப்பது, தவறு செய்கின்றவர், குற்றவாளிகள் மீதும் தனிப்பட்ட பரிவு காட்டுவது என்பன இறை இரக்க சமூகமாகத் திரு அவை திகழத் திருத்தந்தை முன்வைக்கும் சில பரிந்துரைகள்.

மேலும் தம் புற ஈடுபாடுகளிலும் திரு அவை எத்தகைய பரிவிரக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனத் திருத்தந்தை பட்டியல் இட்டே காட்டுகிறார். அவை "பசித்தோருக்கு உணவளிப்பது, தாகமுற்றோருக்குக் குடிக்கத் தருவது, ஆடையற்றோரை உடுத்துவது, அந்நியரை வரவேற்பது, நோயாளரை நலமாக்குவது, சிறையிலிருப்போரை சந்திப்பது, இறந்தோரை நல்லடக்கம் செய்வது" எனும் உடல்சார் அன்பிரக்கப் பணிகளுடன் உள்ளம் சார் நற்செயல்களாகிய "குழப்பத்திலிருப்போர்க்கு வழிகாட்டுவது, அறியாதவருக்கு அறிவு புகட்டுவது, பாவிகளை மனம்மாற அழைப்பது, துன்புறுவோருக்கு ஆறுதல் தருவது, குற்றங்களை மன்னிப்பது, தீங்கு செய்வோரைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வது, வாழ்வோருக்காகவும் இறந்தோருக்காகவும் மன்றாடுவது" என்பனவும் ஆகும்.

# இதயமில்லா உலகில் இதயமாக

"இதயமில்லா உலகின் இதயமே சமயம்" என்றார் கார்ல் மார்க்கசு. அவரது கூற்றை அப்படியே உண்மை என அறிவுறுதியாக நாம் ஏற்க இயலாது. இருப்பினும், "சமயம் மனிதரை வாழவைக்க உதவாது. கடவுளை வாழ்த்திக் கொண்டிருக்கும்போது, அவர்களது இவ்வுலக வாழ்வில் இழிநிலையைப் போக்கவும் அநீதிகளை எதிர்க்கவும் ஆற்றல் தராது அவற்றை அவர்கள் பொறுமையுடன் ஏற்று வாழ்ந்தால் செத்தபின் அவர்களுக்குச் சொர்க்கத்தில் பேரின்பம் கிடைக்கும் எனும் வகையில் சமயம் போதிக்கவும், செயல்படவும் செய்யும்போது அது இதயம் இற்றுப் போன, மனித நேயம் வற்றிப்போன சமூகத்தின் வெளிப்பாடும் பிரதிபலிப்புமே" என்பதே அவரது விமர்சனம். அன்று, ஏன் இன்றுகூட, பல வகைகளிலும் வேளைகளிலும் சமயங்கள் அவ்வாறுதான் பெரிதும் செயல்பட்டு வருகின்றன என்பதையும் நாம் மறுக்க இயலாது.

கார்ல்மார்க்கசு விமர்சித்தது உலக சமயங்கள் எல்லாவற்றையுமே. இருப்பினும் உடனடியாக அவர் கண்முன் தென்பட்டது 19ஆம் நூற்றாண்டுக் கிறிஸ்தவம்தான். அதன் அன்றையச் செயல்பாடு அவரது வருணனைக்கு ஏற்றதாகவே பெரிதும் அமைந்திருந்தது. உலகில் வேறு எந்த சமயத்தையும் விட அதிகமாக அன்றும் கிறிஸ்தவம் ஏழைகளுக்கு உதவுவது, நோயாளிகளைக் கவனிப்பது, அனாதைகளையும், கைவிடப்பட்டோரையும் ஆதரிப்பது எனும் பணிகளைச் செய்து கொண்டிருந்தது என்பது வரலாற்று மெய்ம்மை. இருப்பினும் அன்று வறுமைக்கும் நோய்களுக்கும் பலர் அனாதைகளாகவும் கைவிடப்பட்டவர்களாகவும் இருப்பதற்கும் முக்கிய காரணிகளாக இருந்த அன்றைய ஐரோப்பிய கொடுங்கோல் மன்னராட்சிகள், கட்டுப்பாடற்ற முதலாளியம் என்பவற்றின் கோர முகங்களை அது கண்டு கொள்ளாமலேயே இருந்தது! இல்லை, கண்டும் காணாததுபோல் நடந்துகொண்டது.

மேற்கூறப்பட்ட கொடுமைகளை எதிர்த்து ஆங்காங்கே சில ஆயர்களும், அருள்பணியாளர்களும், பொதுநிலையினரும், குழுக்களும் குரல்கொடுக்கவும் போராடவும் முனைந்ததை எவரும் மறுக்க இயலாது. இருப்பினும் திருத்தந்தை 13ஆம் லியோ புதிய மெய்ம்மைகள் எனும் சுற்றுமடல் வழியாகத் தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும்வரை அத்தகைய குரல்களும் முயற்சிகளும் அரிதாகவே இருந்தன. அதன் பின்புகூட மிகப் பெரும்பான்மையான கிறிஸ்தவ அருள்பணியாளர்களும், துறவியரும், பொதுநிலையினரும் சமூக உணர்வும் ஈடுபாடும் அதிகம் இன்றி வழிபாடு, பக்தி முயற்சிகள், மன்றாட்டு, அருள்சிந்தனை என்பவற்றை மட்டுமே ஆன்மீகச் செயல்பாடுகளாகக் கருதிக்கொண்டு, அவற்றின் வழி தங்கள் ஆன்மாக்களைக் காத்துக்கொள்ள முயன்றனர்.

## சமய மாயையா? சொகுசு ஆன்மீகமா?

மேற்கூறிய பல்வேறு வகைகளில் இதயமற்றதாகியுள்ள சமூகச் சூழமைவில் சமயங்களின் பணி என்ன? இறைவனது அன்பையும் தெய்வங்கள், புனிதர்களின் திருவுருவங்களுக்கு பல்லாயிரம் செலவில் தங்க நகைகள் அணிவிப்பதும் அவர்களை மாட்சிப்படுத்தும் செயல்களாகவே கருதப்படுகின்றன. ஏழையாய் மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, எளியவராய் வறியவரின் தோழமையில் வாழ்ந்து, இறுதியில் ஆடையின்றி சிலுவையில் இறந்த இயேசுவைப் பின்பற்றும் கிறிஸ்தவமும்கூட பல வேளைகளில் இதே பாணியில் செயல்படுவதுதான் வேதனையும் வியப்பும் தரும் மெய்ம்மை. இவையெல்லாம் உண்மையிலேயே இறைவனின் மாட்சிக்காகவா அல்லது சமயத் தலைவர்கள் அல்லது மக்களின் அல்லது ஊர் தற்பெருமைக்காகவா எனும் கேள்வியும் நாம் எழுப்பவேண்டியதே.

இவையெல்லாம் போதா என்றாற்போல் ஏழை மக்களுக்குத் தங்களையே அர்ப்பணித்துள்ளதாகக் கூறும் அருள்பணியாளர்களும் துறவியரும் அலங்கார வரவேற்புகள், வண்ண வளைவுகள், போலிப்

## பரிவிரக்கத்தின் பசுஞ்சோலையாக

முதலில் திரு அவை இதயமில்லா உலகில் தன்னையே பரிவிரக்கத்தின் பசுஞ்சோலையாக மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்குக் கிறிஸ்தவர்கள் முதலில் இறை இரக்கத்தின் கதவுகளுக்குள் நுழைந்து அதை ஆழ அனுபவிக்க வேண்டும். யூபிலிக் கதவுகள் திறக்கப்பட கோயில்களுக்குத் திருப்பயணம் செய்து அக்கதவுகளுக்குள் நுழைவதை திருத்தந்தை அதற்கு உருவகமாகவும் உதவியாகவும் காட்டுகிறார். மேலும், வாழ்வை மாற்றும் வகையில் இரக்கத்தின் இறைவார்த்தைகளைக் கேட்பது, அன்றாடமும் சிறப்பாகத் தவக்காலத் தியானம் வழியாகவும் அது பற்றி அமைதியாக அருள்சிந்தனை செய்வது, இரக்கமுள்ள மனிதர்களாக நாம் வாழ அருளும் ஆற்றலும் கேட்டு மன்றாடுவது, திருவழிப்பாட்டையும் சிறப்பாக ஒப்புரவு அருளடையாளத்தையும் உண்மையிலேயே இறை இரக்கத்தின் அனுபவக் கொண்டாட்டமாக நிகழ்த்துவது, அவசரப்பட்டும்

## இறுதியாக

நமது சூழமைவில் அதன் சமூக ஈடுபாடும் இன்றியமையாதது. இதயமற்ற சமூக - பொருளாதார - அரசியல் - பண்பாட்டு அமைப்புக்களையும் ஆதிக்கங்களையும் அது எதிர்த்தாக வேண்டும் அவையற்ற நலமான சமூகத்தை உருவாக்க அது தன் பங்களிப்பைச் செய்யவேண்டும். ஏனெனில், இதயமற்ற சமூக - பொருளாதார - அரசியல் - பண்பாட்டு - சமய அமைப்புகளே இதயமற்ற மனிதர்களையும் பெரிதும் உருவாக்குகின்றன. இறை இரக்கத்தின் திருமுகம் எனும் தன் மடலில் அதுபற்றி திருத்தந்தை அதிகம் எடுத்துரைக்கவில்லையெனினும் ஊழலைப் பற்றிப்பேசும்போது அதை நாம் துணிச்சலுடன் விட்டொழிப்பதுடன் "வெளிப்படையாகப் போரிட்டு வெல்ல வேண்டிய" கடமையையும் எடுத்துக் கூறுகிறார்.

**அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம்**

# நல்ல ஆயனா? ஆடுகளா?

**வானோக்கி வாழும்**
**உலகெலாம் மன்னவன்**
**கோனோக்கி வாழும் குடி**
**(குறள்: 542)**

**கருத்து:**

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன, அதுபோல குடிகள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.

**ஒரு வீடு உயர்வதும் தாழ்வதும் அவ்வீட்டுத் தலைவனைப் பொறுத்ததே.**

**ஓர் ஊர் உயர்வதும் தாழ்வதும் அவ்வூரின் தலைவனைப் பொறுத்ததே.**

**ஒரு சமூகம் உயர்வதும் தாழ்வதும் அச்சமூகத்தின் தலைவனைப் பொறுத்தே.**

**ஒரு நாடு உயர்வதும் தாழ்வதும் அந்நாட்டுத் தலைவனைப் பொறுத்தே.**

ஆம், நம் கிறிஸ்துவ வாழ்வு உயர்வதும், தாழ்வதும் நம் தலைவன் இயேசுவைப் பொறுத்ததே. ஆனால் நமக்குத் தெரியும் நம் தலைவன் இயேசு அரசனாக இருந்து ஆட்சி செய்ய வரவில்லை மாறாக ஆயனாக இருந்து நம்மை அன்பு செய்து அரவணைக்கவே, வழிநடத்தவே வந்தார்.

நம் தலைவன் இயேசு நமது நல்ல ஆயன். இதை அவரே சொல்லியிருக்கின்றார். "நல்ல ஆயர் நாமே" (யோவா. 10:11). ஒரு நல்ல ஆயனுக்குரிய குணங்கள், இயல்புகள், பண்புகள் என்னவென்றும் அவரே சொல்லியிருக்கின்றார்.



## 1. தன் ஆடுகளை அறிதல்

ஒரு ஆசிரியன் தன் மாணவர்களை நன்கு அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவனுக்கேற்ற முறையில் பாடங்களை எளிதில் புரிந்துக் கொள்ளும்படி சொல்லிக் கொடுக்க முடியும். ஒரு தாய் தன் குழந்தையை நன்கு அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அந்த குழந்தையை நன்கு வளர்க்க முடியும். அதுபோல ஒரு நல்ல ஆயன் தன் ஆடுகளை அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவைகளை நன்கு வழிநடத்த முடியும். அதே வேளையில் அந்த ஆயன் ஆடுகளை அடிக்கமாட்டான். அன்பு செய்து, தட்டிக் கொடுத்து, குரல் கொடுத்து வழி நடத்துவான்.

## 2. ஆடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வான்

குழந்தை அழுதால் தாய்க்குத் தெரியும் அதற்குப் பாலூட்டவேண்டும் என்று. அதேபோல நல்ல ஒரு ஆயனுக்கு நிச்சயம் அந்த ஆடுகளின் தேவைகள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஆடுகளின் தேவை என்ன? நல்ல பசுமையான புல்வெளி, தண்ணீர் தடாகம், பாதுகாப்பு, இதை தவறாமல் செய்தால் அந்த ஆடுகளும் அவன் பின் சென்று நன்கு வளர்கின்றன. இதையே திருப்பாடலாசிரியர் அழகாகப் பாடுகின்றார். "ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை. பசும் புல்வெளி மீது எனை அவர் இளைப்பாறச் செய்வார், அமைதியான நீர் நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்" (திபா. 23:1-2).

## 3. ஆடுகளின் மீது அக்கறை, பரிவு, கரிசனை

தாய் தன் குழந்தையின் தேவையை மட்டும் அறிவது கிடையாது. அந்த குழந்தைக்கு ஏதாவது நோய், உடல் நலக்கெடுதி ஏற்பட்டுவிட்டால் அக்குழந்தையின் மீது பாசம் கொண்டு அக்கறையோடு, பரிவோடு, கரிசனையோடு உண்ணாமலும், உறங்காமலும் அருகிலிருந்து பார்த்துக் கொள்கிறாள். அதுபோல நல்ல ஆயனும் தன் ஆடுகள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருப்பான். இதை இயேசுக்கிறிஸ்துவின் வார்த்தையினின்று அறியலாம். "அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப் போல இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்" (மாற். 6:34). அந்த ஆடுகள் காணாமல் போய்விட்டால் மிகுந்த ஏக்கத்தோடு தேடிக் கண்டுபிடித்து, அவற்றைத் தன் தோள்மேல் போட்டுக் கொண்டு மகிழ்ச்சி கூத்தாடுவார் (லூக். 15:1-16).

## 4. ஆடுகளுக்காகத் தன் உயிரையும் கொடுத்தல்

இறுதியாக நல்ல ஆயன் தன் ஆடுகளை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற தன் உயிரையும் பணயம் வைப்பான். அவன்தான் உண்மையான ஆயன். மற்றவன் கூலிக்கு மேய்ப்பவன். அவன் ஆபத்து என்று வந்தவுடன் ஆடுகளை விட்டு ஓடிவிடுவான்.

ஆம், மேற்சொன்ன அனைத்துப் பண்புகளும், இயேசு என்னும் நம் ஆயரிடத்தில் நிறைந்து விளங்குவதைப் பார்க்கின்றோம். காரணம், அவரே நல்ல ஆயன், கூலிக்காரன் அல்ல.

இனி நம்முடைய நிலை என்ன? நாம் அந்த நல்ல ஆயனின் மந்தையில் உள்ள நல்ல ஆடுகளாக இருக்க வேண்டும். நல்ல ஆடுகளுக்குரிய பண்புகள் என்ன?

## 1. ஆயனுடைய குரலுக்குச் செவி கொடுக்க வேண்டும்.

ஆயன் கூப்பிட்ட குரலுக்குச் செவி கொடுக்கும் ஆடுகள் தான் அவன் பின்னே செல்லும். அவன் பின்னே செல்லும் ஆடுகளுக்கு ஆபத்து இல்லை. செவி கொடுக்கவில்லை என்றால் காணாமல் போக நேரிடும், அல்லது எதிரிகளின் கையில் சிக்க நேரிடும். இன்று நம்மில் எத்தனை பேர் நம் ஆயர் ஆண்டவரின் குரலுக்குச் செவி கொடுக்கின்றோம்?

## 2. ஆயனின் ஒரே மந்தைகளாக இருக்க வேண்டும்

நல்ல ஆடுகள் அந்த ஆயன் வைத்திருக்கும் ஆட்டுப் பட்டியில் ஒன்று சேர்ந்து ஒரே மந்தைகளாக இருக்கும். தனித்தனியாகப் பிரிந்து செல்லாது. ஆனால் இன்று நாம் ஒரே திருச்சபையின் உறுப்பினர்களாக இருக்கின்றோமா? எத்தனை பிரிவுகள், பிரிவினைகள், ஏற்றத்தாழ்வுகள், வேற்றுமைகள். பவுலடியாரின் வார்த்தைகள் மறந்துவிட்டனவா? கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் அனைவரும் ஒருவரே. ஆனால் இன்று நமக்கிடையே நிறைய கருப்பு ஆடுகள் நுழைந்துவிட்டன. அவைகள் மற்ற ஆடுகளைக் குழப்பி, திசைத் திருப்புகின்றன.

## 3. ஆயனைப் பின் தொடர வேண்டும்

நல்ல ஆடுகள் ஆயனைப் பின்தொடரும். ஆயன் மீது நம்பிக்கை இருப்பதால் அவன் எங்கெங்கு அழைத்துச் செல்கின்றானோ அங்கெல்லாம் அவை பின்தொடர்ந்து செல்லும். இன்று நாமும் இயேசு ஆயன் மீது நம்பிக்கை வைத்து அவர் காட்டும் வழியில் நடந்தால் ஆபத்து ஒன்றும் வராது. அவரே சொல்லுகிறார்.

"நானே வழியும், உண்மையும், உயிரும். என் வழியாலன்றி எவரும் பரம தந்தையிடம் வருவதில்லை".

எனவே நல்ல ஆயனும் வேண்டும், நல்ல ஆடுகளும் வேண்டும். நல்ல ஆயன் ஆடுகளுக்காக உயிரைக் கொடுப்பான். நல்ல ஆடுகள் ஆயன் குரலுக்குச் செவி கொடுக்கும்.

ஒரு மனிதன் தன் நாயோடு நெடுந்தூரம் பயணம் செய்தான். வழியில் வெயிலின் கொடுமையாலும் பசி மயக்கத்தாலும் அந்த நாய் திடீரென்று இறந்து போனது. அதற்காக அந்த மனிதன் அழுதுக் கொண்டிருந்தான். அவ்வழியே போனவர் ஒருவர் அவனிடம் வந்து "ஏன் அழுகிறாய்?" என்றார். அதற்கு அவன், "என் நாய் செத்துப்போனது" என்றான். "எப்படி செத்தது?" என்று அந்த வழிப்போக்கன் கேட்டான். "பசியின் கொடுமையால்" என்றான் அவன். "கையில் என்ன வைத்திருக்கிறாய் என்று மீண்டும் கேட்டான். "என் சாப்பாடு" என்றான். "அதை ஏன் நாய்க்குப் போட்டிருக்கக் கூடாது" என்று வழிப்போக்கன் கேட்டான். "போட்டிருந்தால் எனக்குத் திரும்பக் கிடைக்காதே" என்றான் அவன். "பிறகு நீ ஏன் நாய்க்காக அழுது கொண்டிருக்கின்றாய்?" அதற்கு அவன் சொன்னான், "கண்ணீர் சும்மாதானே வருகிறது அதனால் தான்".

**சிந்தனைக்கு:**

**ஆம், இத்தகைய சுயநலவாதிகள், இருக்கும் இடத்தில் உண்மையான ஆயனைப் பார்க்க முடியாது. அவனிடத்தில் நல்ல ஆடுகளும் வாழமுடியாது. நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக உயிரையும் கொடுப்பான். நாம் எந்த ரகம்?**

### நம்மைச் சிந்திக்க வைக்கும் கேள்வி!



இயேசு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார் என்னும் செய்தி உலகம் அறிந்த செய்தியாகும். ஆனால் அந்த உயிர்த்த, இயேசுவை நாம் சந்தித்துள்ளோமா? என்பதுதான் நம்மைச் சிந்திக்க வைக்கும் கேள்வியாகும்.

உயிர்வாழும் இயேசுவைச் சந்தித்த ஒவ்வொருவரும் உயிர்வாழும் இயேசுவுக்கு சான்று பகர்கின்றனர். இதுவே சரித்திர சான்றாகும். நாமும் உயிர்வாழும் இயேசுவுக்கு சான்று பகர வேண்டும். அப்படியானால் உயிர்வாழும் இயேசுவை நாம் முதலில் சந்திக்க வேண்டும்.

# தமிழ் புத்தாண்டே வருக வருக!

தமிழ் மாதங்களில் முத்திரை பதிக்கும் மாதம் சித்திரை என்பார்கள். இந்த சித்தரை பிறக்கும் தினத்தையே தமிழ் புத்தாண்டாக தமிழர்கள் கொண்டாடி மகிழ்கின்றார்கள். ஆங்கிலத்தில் ஜனவரி, பெப்ரவரி என 12 மாதங்கள் உண்டு. அதேபோன்று சித்திரை, வைகாசி என 12 தமிழ் மாதங்கள் உண்டு. சூரியனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழ் மாதங்கள் கணிக்கப்படுகின்றன. அதனால்தான் தமிழ் மாதங்கள் “சூரிய மாதங்கள்” என்றும் அழைக்கப்படுகின்றன.

ராசி சக்கரத்தைப் பொறுத்த வரையில் சூரியன் மேஷ ராசிக்குள் நுழைந்து வெளியேறும் காலம் சித்திரை மாதமாகும். 31 நாட்களைக் கொண்ட சித்திரை மாதம் ஆங்கில மாதத்தில் ஏப்ரல் 14ம் திகதி தொடங்கி மே 14ந் திகதி வரை உள்ள நாட்களாகும். சித்திரை மாதம் தமிழ் மாதங்களில் முதல் மாதம் என்பதால் அம்மாதப் பிறப்பை தமிழ் புத்தாண்டு என கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

தமிழ் மக்களால் கொண்டாடி மகிழும் இப்புத்தாண்டை நம் நாட்டில் “தமிழ் சிங்கள புத்தாண்டு” என கொண்டாடி வருகின்றனர். பழங்காலம் தொட்டு கொண்டாடி வரும் இப்புத்தாண்டு கொண்டாட்ட முறை இலங்கையின் பழங்காலத் தமிழ்ர்களின் வழியாக இலங்கையில் தோற்றம் பெற்ற தமிழர் புத்தாண்டு முறையாகும். அதனாலேயே இதனை தமிழ், சிங்கள புத்தாண்டு என அழைக்கின்றனர். இலைதுளிர் காலத்தில் அரும்பும் இப்புத்தாண்டு தொடங்குகின்றது. இப்புத்தாண்டுக்கு சிங்களவர் கொடுக்கும் விளக்கம் “சூரியன் மேஷ ராசியில் பயணத்தை தொடங்கும் நாள்” என்பதாகும். புத்தாண்டு என்பது பூமி சூரியனை ஒரு சுற்று சுற்றி, மீண்டும் அடுத்த சுற்றில் பிரவேசிக்கும் தொடக்க நாளாகும். பல்வேறு காலங்களில் பல கணிப்பீட்டு முறைகள் தோன்றி மறைந்தாலும் இலங்கையில் தமிழ்



ஆண்டு தொடக்க நாளான புத்தாண்டு கொண்டாட்டம் தொடங்க காரணம் மறைக்கப்பட்ட நிலையில் அதேநாளில் புத்தாண்டு கொண்டாடும் வழக்கம் சிங்களவர் மத்தியில் மறையாமல் உள்ளது.

தமிழர் கொண்டாடும் இவ்விழாவினை இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் மக்களும் சித்திரை பிறப்பின் முதல் நாளினை புத்தாண்டாக கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

**சகோ. டிலோயிட்சன் பர்னாந்து.**

# புத்தாண்டு கவிதைகள்

பூக்கட்டும் புதுமலர், வீசட்டும் நம்மில்!!
இனிக்கட்டும் திருநாள்,
பிறக்கட்டும் புதுசிந்தனை!!
போகட்டும் பகைமை, இணையட்டும் உறவு!!
விலகட்டும் தாழ்வு, வாழட்டும் மனிதம்!!
தோன்றட்டும் வாய்ப்பு, அடையட்டும் இலக்கு!!
பரவட்டும் அமைதி, மாறட்டும் புதிய புத்தாண்டு!!

புத்தாண்டு புதுப்பொலிவோடு மலர்ந்திட
பூவையரும் காளையரும் ஆனந்தமாக நடனமிட
குழந்தைகள் குதூகலத்துடன்
ஆரவாரமாகக் கொண்டாடிட
வயோதிகரும் விருப்பமுடன் வேடிக்கைகள் செய்திட
பாரில் உள்ளோர் யாவரும் உல்லாசம் அனுபவித்திட
வாழ்வை செழுமையாக்க வளமுடன்
நல்லாண்டு புலர்ந்ததம்மா !!

புத்தாண்டு பூத்து , புது மணம் வீசட்டும்
புது ஒளி பிறந்து, புது உயிர்கள் தோன்றட்டும்
புத்துணர்ச்சி கொண்டு வீறுநடை போடட்டும்
பெண்மையை போற்றட்டும், ஆண்மையை மதிக்கட்டும்
ஏற்றத்தாழ்வுகள் விலகட்டும்
புது சிந்தனை பிறக்கட்டும்
வாழ்வில் வளம் பெருகட்டும்
பழைய கசப்புகள் மறக்கட்டும்
புதிய சர்க்கரை வெல்லம் நாவில் இனிக்கட்டும்
பகைகள் நிரந்தரம் இல்லாமல் போகட்டும்
உறவுகள் மேண்மை பெறட்டும்
எல்லாம் உங்கள் வழி வரட்டும்
எல்லாம் உங்கள் கை சேரட்டும்
இல்லாமை நிலை மாறட்டும்
பிரிவுகள் பறந்து போகட்டும்
பரிவுகள் மனம் முழுவதும் பரவட்டும்
இணைந்த கைகள் இனிய பாலமாகட்டும்
இறையருள் என்றும் பெருகட்டும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்...

# புத்தாண்டு வளம்பெற வேண்டிடுவோம்

வரும் புதுவருடம் வளமாக இருக்க
வயோதிகரும் வாலிபரும் வாழ்வைச் சுவைக்க
வன்முறைகள் அகிலமெங்கும் அறவே ஒழிந்திட
வரும் துயரங்கள் யாவும் பனிபோல் மறைந்திட
வறுமைகள் மறைந்து செழுமைகள் பெருகிட
எங்கும் எதிலும் எளிமைகள் மலர்ந்திட
யாவரும் நலம் பெற்று நாள் வாழ்வு வாழ்ந்திட
எல்லாம் வல்ல இறைவனை தொழுது வணங்கிடுவோம்.

வாழும் வாழ்க்கை வளம் பெற
வந்த துன்பங்கள் யாவும் மறைந்திட
வறுமைகள் தொலைந்து செழுமைகள் பெருகிட
வன்முறைகள் நீங்கி அமைதி நிலைத்திட
வையகமெங்கும் மகிழ்ச்சி மலர்ந்திட
வல்லமை படைத்த இறைவனை
இனிய புத்தாண்டுதனில் உளமுருக வேண்டிடுவோம் !!
புத்தாண்டு வளம்பெறவே.






இலங்கையில் பிரதானமான நான்கு மதங்கள் உள்ளன. மதத்தலைவர்கள் உள்ளார்கள். பலமத மக்களும் உள்ளார்கள். ஆனால், ஆன்மீகத் தலைவர்கள், ஆன்மீக மக்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். மதச் சடங்குகளையும், வழிபாடுகளையுமே ஆன்மீகம் என மக்கள் நினைக்கிறார்கள். இவைகள் ஆன்மீகத்தை வளர்க்க உதவுபவைகள். ஒருவரில் ஆன்மீகம் வளர்ந்துள்ளதா? என எவ்வாறு கண்டு-பிடிப்பது? அறிவோடும், சுதந்திரத்தோடும் அன்பு செய்கின்ற ஆற்றலே ஆன்மீகமாகும்.

## ஆன்மீகப் பெறுமதிகள் ஆறு உள்ளன.

### 1. அன்பு செய்யும் ஆற்றல்.

காதல் என்பது வேறு, அன்பு என்பது வேறு. எதிர் பாலாரில் ஒருவருக்கு ஏற்படும் காமத்தோடு கூடிய கவர்ச்சி உணர்ச்சியே காதலாகும். இது மாறக் கூடியது. அன்பு என்பது யாரிலும் வரலாம். அம்மா, அப்பா, மகன், மகள், கணவன், மனைவி, நண்பர் யாரிலும் வரலாம்.

“கடவுள் அன்பாய் இருக்கிறார்”. (1 யோவான் 4:8) இறைவனை அன்பானவர் என்கிறோம். இந்துக்கள் “அன்பே சிவம்” என்கின்றார்கள். அன்பு என்பது என்ன? குறைகளோடும், நிறைவுகளோடும் ஒருவரை நிபந்தனையில்லாமல் ஏற்றுக்கொண்டு அவரது நன்மைக்காக என்னை அர்ப்பணிப்பதே, தீர்மானம் எடுப்பதே அன்பு ஆகும். இறைவன் நாம் இருக்கின்ற நிலையில் ஏற்றுக்கொண்டு மாறாத அன்பால் அன்பு செய்பவர். இந்த அன்பை அனுபவிப்பதே செபமாகும்.

### 2. மன்னித்து மறத்தல். மீக்கா 7:18–19

“உமக்கு நிகரான இறைவன் யார்? எஞ்சியிருப்போரின் குற்றங்களைப் பொறுத்து நீர் உமது உரிமைச் சொத்தில் எஞ்சியிருப்போரின் தீச் செயலை மன்னிக்கின்றீர். உமக்கு நிகரானவர் யார்? அவர் தம் சினத்தில் என்றென்றும் நிலைத்திரார்: ஏனெனில் அவர் பேரன்பு கூர்வதில் விருப்பமுடையவர். அவர் நம்மீது இரக்கம் காட்டுவார்: நம் தீச் செயல்களை மிதித்துப் போடுவார். நம் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்து விடுவார்”. இறைவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்தினால், அவரை நம்பினால் எமது குற்றங்களை அவர் மன்னிப்பதை உணர்ந்து அனுபவிக்க முடியும். அதே போன்று மற்றவர்களையும் மன்னித்து மறக்க முடியும்.


### 3. எளிமை வாழ்வு

அவசியமானதை மட்டும் பாவிக்கப் பழக வேண்டும். உரோ 12.֯.1-2 “கடவுளுக்கு உகந்த, தூ ய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு. இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக. அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்”.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு 152



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**உயிர்ப்புக்காலம் 2வது ஞாயிறு (இறை இரக்கப் பெருவிழா) (08.04.2018)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** உயிர்ப்புக் காலத்தின் இரண்டாவது ஞாயிறு வாரத்தில் கால்பதிக்கும் இறை அன்பர்களே, இயேசுவின் இறை இரக்கத்தை சிந்திக்கும் இன்றைய நாளிலே நமக்குத் தரப்பட்டுள்ள திருப்பாடல் “ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர் என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு” என இயேசுவின் மீது மேலும் நம்பிக்கை கொள்ள அழைக்கின்றது. இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ள சான்று தேடிய தோமையாருக்கு இயேசு தன் காயத் தழும்புகளைக் காட்டி நம்பிக்கையூட்டுகிறார். இயேசு இவ்வுலகில் விட்டுச் சென்ற பணியை ஒவ்வொரு கிறிஸ்தவரும் தொடரவேண்டும். இது எவ்வாறெனில் இயேசு நம்மை அன்பு செய்ததுபோல நாமும் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும். அப்போது அன்பின் முழுவடிவான இறைவனை இவ்வுலகிற்கு அறிவிக்கின்றோம். இதன் மூலம் மற்றவர்கள் இறைவனை அறிந்து கொள்ளவும் அவருடைய அன்பையும், இரக்கத்தையும் அனுபவிக்கவும், அவரோடு உறவாடவும் உதவுகின்றோம். எனவே இறைவனின் அன்பை உய்த்துணரவும் அவரது இறை இரக்கத்தைக் கைக்கொள்ளவும் இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தி.ப 4:32-35**
ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.

**இரண்டாம் வாசகம் : 1 யோவா 5:1-6**
கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா “தோமா நீ என்னைக் கண்டதால் நம்பினாய் காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 20:19-31**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவனுடைய இரக்கத்தை நாம் உணர்ந்து கொள்ளவும், இறை ஞானத்தைத் தேடவும் எமக்கு வழிகாட்டும் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் அபரிதமான ஞானத்தை வழங்கி திருச்சபையை வழிநடத்தத் தேவையான அருள்வளங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

உலகியல் வாழ்வில் பலவிதமான தேவைகளை தினமும் தேடும் நாம், உண்மையை, நீதியை நன்மையை தேடி வாழவும், நாட்டை வழிநடத்தும் தலைவர்களும் அதிகாரிகளும் ஞானத்தைத்தேடி அதன் வழியாக மக்களையும் நாட்டையும் முன்னேற்றப் பாதையில் வழிநடத்தத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

இறை இரக்கப் பெருவிழாவைக் கொண்டாடும் நாம் கடவுளை உலக தேவைகளுக்காக மட்டும் தேடாமல் படைத்தவராக, மன்னிப்பவராக மகிழ்ச்சி தருபவராக, தேற்றுபவராக, குணமளிப்பவராக தேடவும், கடவுள் தரும் கொடைகள் நாம் மட்டும் வாழ்வதற்காக அல்ல, பிறரோடு பகிரப்படவே தரப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து வாழத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

**உயிர்ப்புக் காலம் 3வது ஞாயிறு (15.04.2018)**

**வாசக விளக்கம்:** உயிர்ப்புக் காலத்தின் மூன்றாவது வாரத்தில் கால்பதிக்கும் இறை உறவுகளே அன்பர்களே! இன்றைய வாசகங்களின் மையக் கருத்தாக மனமாற்றமும் சாட்சிய வாழ்வுமாக இருக்கின்றது. பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள் என்று நற்செய்தியும் நம் பாவங்களுக்கான கழுவாய் இயேசுவே என்று இரண்டாம் வாசகமும் மனம் மாறி இயேசுவிடம் திரும்பி வரவேண்டும் என முதல் வாசகமும் உணர்த்துகின்றன. உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்கு கூறும் இறுதி வார்த்தைகளின் படிப்பினைகள் இன்று நமக்குக் கொடுக்கப்படுவதோடு இதற்கு நீங்கள் சாட்சிகள் என்கிறார் இயேசு. எனவே இயேசுவின் உயிர்ப்பை எம் சாட்சிய வாழ்வில் நாம் காணவேண்டும். உயிர்த்த ஆண்டவரின் நற்செய்திப் பணி கதையோ கட்டுக்கதையோ அல்ல, அது சீடர்களின் வாழ்க்கை அனுபவமாக உள்ளது. ஏனெனில் அவர்களது துன்பத்திலும், சோதனைகளிலும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தது இயேசுவின் உயிர்ப்புத் தான். எனவே இயேசுவின் உயிர்ப்பை எம் சாட்சிய வாழ்வாக உறுதி செய்வோம். இதற்கு வேண்டிய அருளைப் பெற பலியில் இணைவோம்

**முதல் வாசகம் : தி.ப 3:13-15,17-19**
வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள், ஆனால் கடவுள் அவரை உயிரோடு எழுப்பினார்.

**பதிலுரைப் பாடல் :**
உமது முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும் ஆண்டவரே.

**இரண்டாம் வாசகம் : 1 யோவா 2:1-5**
நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே, அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவராகிய இயேசுவே மறைநூலை எங்களுக்கு விளக்கியருளும் நீர் எம்மோடு பேசும்போது எம் உள்ளம் பற்றி எரியச் செய்தருளும். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : லூக் 24:35-48**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நாம் மனமாற்றம் பெற என்றும் வழிகாட்டும் திருச்சபைக்காகவும் அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவருக்காகவும் திருச்சபையின் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவருக்காகவும் உமது ஆசீரைப் பொழிந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டில் காணப்படும் சமூகப் பாவங்களை அகற்றிட அனைத்து தரப்பினரும் இன, மத, மொழி வேறுபாடின்றி செயல்படவும், ஒருவர் ஒருவருடைய தவறுகளையும், பிழைகளையும் மன்னித்து மறந்து ஒப்புரவாகி ஒன்றுபட்டு வாழ்ந்திடத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

நாம் செய்யும் தவறை கடவுள் கட்டாயம் மன்னிக்கின்றார் என்பதை புரிந்து கொண்டு, மனம் திரும்பி அவரிடம் செல்லவும், சமாதானத்தைக் கொடுப்பவரும் நமக்காகப் பரிந்து பேசுகிறவருமான இயேசு நம்மோடு இருக்கிறார். எனவே நாம் அச்சமின்றிக், கலக்கமின்றி வாழ்ந்திடத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

# “இயேசுவின் வல்லமை, முன்னேற முடியாதவர்களையும் முன்னால் அனுப்பி வைக்கும்.”

## இளவாலை இறை தியான வழிபாட்டில் யாழ் - குருமுதல்வர்







“இறை திட்டம் தேடும்” இளையோர் ஆண்டினை முன்னிட்டு இளவாலைப் புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த புனித டொன்பொஸ்கோ இளையோர் மன்றத்தின் ஒழுங்கமைப்பில் தவக்கால இறைதியானத் திருவழிபாடு மாசி மாதம் 20,21,22 ஆகிய தினங்களில் மாலை 5.00 மணிமுதல் 9.30 மணிவரை புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது. இத்தியான குணமாக்கல் வழிபாட்டினை இந்தியாவிலிருந்து வருகை தந்த எம்மாவுஸ் இறைதியான இயக்குனர் அருட்பணி. அகஸ்ரின் மொண்டக்கட், அருட்பணி ரபாயேல் அடிகளாரும் இணைந்து நடாத்தினார்கள்.

இந்நிகழ்வின் இறுதிநாள் திருவழிபாட்டுத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. கலாநிதி. ப. யோ. ஜெபரட்ணம் அவர்கள் தலைமையேற்று ஒப்புக்கொடுத்து மறையுரை ஆற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில் இயேசுவின் உத்தானத்தின் பின்பு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட சீடர்களும், அவரது வல்லமையைத் தம் வாழ்வாலும், போதனையாலும் எடுத்தியம்பினர். நடக்க முடியாது சப்பாணியாக இருந்த முடவனையும் பொன்னோ வெள்ளியோ அல்ல, இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தினால் நடக்கச் செய்து, அவனுக்கிருந்த இழிநிலையைப் போக்கி அனைவருக்கும் முன்னால் முன்னோக்கிச் செல்ல வைத்தனர். அவ்வாறே இன்றும் எம்மத்தியில் ஆன்மீக, சமூக வாழ்வில் சப்பாணிகளாகப் பலர் வாழ்கின்றனர். இந்நிலைகளிலிருந்து எம் வாழ்வை விடுதலையாக்க, இறைதிட்டம் எம் மத்தியில் உணரப்பட, அருட்தந்தையர்களின் வார்த்தை வல்லமையினால் குணம்பெற நம்பிக்கையோடு ஒன்றிணைந்து செபிப்போம்.

குடும்ப, பொருளாதார, சமூக, அரசியல் பிரச்சினைகளினால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது சப்பாணிகளாக வாழ்வோருக்கு இயேசுவின் வல்லமை விடுதலை அளித்து முன்னோக்கிச் செல்ல வழிவகுப்பதாக இத்தவக்கால தியான வழிபாடு அமைந்ததிற்கு இறைவனுக்கு நன்றி கூறுவோம் எனக் குறிப்பிட்டார். இத்தியான திரிதின வழிபாடுகள் யாவும் பங்குத்தந்தை அருட்பணி ம.யேசுரட்ணம் தலைமையிலும் பங்குமக்கள் அனைவரதும் பூரண ஒத்துழைப்பிலும் சிறப்புற இடம்பெற்றது. அதிகமான மக்கள் ஒன்றிணைந்து செபித்து இறை அனுபவத்தைத் தம் வாழ்வாக்கினர்.

**தகவல் : S.M.வுளோறன்ஸ்**

# ஓய்வற்ற சேவைபுரிந்து ஓய்வுபெற்றுச்செல்லும் அதிபர்



ஓய்வற்ற சேவைபுரிந்து ஓய்வுபெற்றுச்செல்லும் அதிபர் கொழும்பு விவேகானந்தா வீதி புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர், அருட்சகோதரி மேரி மேபள் பெர்ணாண்டோபுள்ளே அவர்கள் தன் அதிபர் பணியை நிறைவு செய்து ஓய்வு பெறுகின்றார்.

கொழும்பு மாநகரத்தில் மரியன்னையின் தாய் அன்னம்மாளின் நாமம் கொண்டு இயங்கிவரும் மேற்படி பாடசாலை கல்வியிலும், கலை, கலாச்சாரத்திலும் இன்னும் பல்வேறு துறைகளிலும், சிறந்து விளங்குகின்றது என்றால் இதன் வளர்ச்சியில் அக்கறைக்கொண்டு உழைத்த அதிபர்களில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தனது அதிபர் சேவையை இப்பாடசாலையில் ஆற்றி இவ்வருடம் ஜனவரி மாதத்துடன் ஓய்வுபெற்று விலகிச்சென்ற அதிபர் அருட்சகோதரி மேரி மேபள் பெர்ணாண்டோபுள்ளே அவர்கள் மறக்க முடியாத பல பணிகள் புரிந்து முக்கிய இடத்தை எடுத்திருப்பதும் ஒரு காரணமாகும்.

இரு அருட்சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில் பிறந்து, யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்று நல்லாயன் கன்னியர் அருட்சகோதரியாகி , பாடசாலை ஆசிரியையாகி பல்வேறு தளங்களிலும் பணியாற்றி அதிபராகினார். வத்தளை றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுழைத்தவர். 2010 இல் இப்பாடசாலையின் அதிபராகி பொறுப்பேற்று பணிகளை சிறப்புற ஆற்றியுள்ளார். இவரிடமிருந்த அபரிதமான ஆற்றல்களான மும்மொழிதிறன், சுறுசுறுப்பு, அதியுச்ச இறைநம்பிக்கை,...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# புதிய தமிழ் திருப்பலி ஒழுங்குமுறை

தாய்த் திரு அவைத் தொடக்க காலம் முதல் இறைமக்களை இறைவனிடம் கொண்டுவரவும் இறைவனின் உடனிருப்பை இறைமக்களிடையே உணரச் செய்யவும் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சி திருவழிபாடுதான். ஞாயிறுக் கொண்டாட்டத்தை மையப்படுத்தியே இறைமக்கள் கூடியுள்ளனர். (டிடாக்கே - பன்னிரு திருத்தூதர்களின் படிப்பினைகள், எண் 14) கூடியிருந்த அந்தத் திருஅவைதான் நற்கருணையையும் ஏற்படுத்தியுள்ளது. (காண். 2ம் ஜோன் போல், திருச்சபையும் நற்கருணையும், எண் 26) இத்தகைய நற்கருணைக் கொண்டாட்டத்துக்குப் பெரிதும் துணையாக இருந்தது திருப்பலி நூல்தான். எனினும் திருப்பலி நூலாக உருவெடுக்கும் முன்பே, வரையறுக்கப்பட்ட மன்றாட்டுக்கள் அடங்கிய சிற்றேடுகளாக, திருப்பலிக்கான மன்றாட்டுகள், பல்லவிகள், பதிலுரைப் பாடல்கள், வாசகங்கள் என அனைத்தும் அடங்கிய வழிபாட்டு நூலாக இறுதியில் திருப்பலிக்கான மன்றாட்டுக்கள் மட்டுமே அடங்கிய நூலாக காலத்துக்கு ஏற்றவாறு திருவழிபாட்டு நூல்கள் உருமாற்றம் பெற்றன. 1474இல் தான் முதல் முதலாக உரோமைத் திருத்தூது ஆட்சிப் பீடத்தால் இலத்தீன் மொழியில் வெளியிடப்பட்டிருந்தது.

1963 வரை உலகளவில் இலத்தீன் மொழியில் திருப்பலி நடைபெற்றிருந்தாலும், 2ம் வத்திக்கான் சங்கத்துக்குப் பின்னரே அந்தந்த இடத்து மக்களின் தாய்மொழியில் திருப்பலி நடைபெறத் தொடங்கியதையும் இலத்தீன் நூல்கள் தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுத் திருவழிபாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் நாம் அறிவோம். (காண். திவ 36:3, 63அ, 101:1,2,3) அதன் அடிப்படையில் 2008இல் இலத்தீனில் வெளியான திருப்பலி நூல் இப்போது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, உரோமைத் திருத்தூது ஆட்சி பீடத்தின் ஒப்புதலோடு இப்போது நமது பயன்பாட்டுக்கு வந்திருக்கிறது. தாய்மொழியில் திருவழிபாடுதான் தாய்த் திரு அவை கொண்டு வந்த சிறப்பான மறுமலர்ச்சி ஆகும். வழிபாட்டில் இறைமக்கள் பொருளுணர்ந்து, செயல்முறையில், முழுமையாகப் பங்கேற்க வேண்டும்.(காண். திவ 14) என்பது திரு அவையின் உயர்ந்த இலக்கு ஆகும்.

எனவே இத்திருப்பலி நூல் வழியாக இறை அன்பைச் சுவைப்போம். மீட்பினைப் பெறுவோம். (காண். திவ 2) இறைமக்களின் பங்கேற்புக்காகத் **"திருப்பலி அமைப்பு முறை"** எனும் தலைப்பில் திருப்பலி நூலிலிருந்து சில பகுதிகள் தொகுக்கப்பட்ட சிற்றேட்டிலிருந்து இங்கு தரப்பட்டு இருக்கின்றது. இதை நன்முறையில் பயன்படுத்தி, திருப்பலியில் ஆர்வமுடனும், மிகுந்த ஈடுபாட்டுடனும் பங்கேற்கவும் அருள்பணியாளரோடு இறைமக்கள் அனைவரும் தங்கள் வாழ்வை பலியாக திருப்பலியில் ஒப்புக்கொடுக்கவும் அன்புடன் இதை உங்களுக்கு பகிர்ந்தளிக்கின்றோம்.

## தொடக்கச் சடங்குகள்

குரு : **தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.**

எல் : ஆமென்.

குரு : **நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.**

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

### பாவத்துயர்ச் செயல்

குரு : **சகோதர சகோதரிகளே, தூய மறைநிகழ்வுகளைக் கொண்டாட நாம் தகுதிபெறும் பொருட்டு நம் பாவங்களை ஏற்றுக்கொள்வோம். (சிறிது நேர மௌனத்திற்குப் பின்)**

எல் : எல்லாம் வல்ல இறைவனிடமும், சகோதர சகோதரிகளே உங்களிடமும் நான் பாவி என ஏற்றுக் கொள்கின்றேன். ஏனெனில் என் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும் கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன். என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே.

ஆகையால், எப்போதும் கன்னியான புனித மரியாவையும் வானதூதர், புனிதர் அனைவரையும், சகோதர சகோதரிகளே உங்களையும் நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகின்றேன்.

குரு : **எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து நம் பாவங்களை மன்னித்து, நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.**

எல : ஆமென்.

குரு : **ஆண்டவரே இரக்கமாயிரும்.**

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

குரு : **கிறிஸ்துவே இரக்கமாயிரும்.**

எல் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

குரு : **ஆண்டவரே இரக்கமாயிரும்.**

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

எல் : உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக. உலகினிலே நன்மனத்தோர்க்கு அமைதி ஆகுக. உம்மைப் புகழ்கின்றோம். உம்மை வாழ்த்துகின்றோம். உம்மை ஆராதிக்கின்றோம். உம்மை மாட்சிப்படுத்துகின்றோம். உமது மேலான மாட்சியின் பொருட்டு உமக்கு நன்றி கூறுகின்றோம். ஆண்டவராகிய இறைவா, வானுலக அரசரே, எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா, ஒரே மகனாய் உதித்த ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவே, ஆண்டவராகிய இறைவா, இறைவனின் செம்மறியே, தந்தையின் திருமகனே, உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள் மேல் இரக்கமாயிரும். உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள் மன்றாட்டை ஏற்றருளும். தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஏனெனில் இயேசு கிறிஸ்துவே, நீர் ஒருவரே தூயவர். நீர் ஒருவரே ஆண்டவர். நீர் ஒருவரே உன்னதர். தூய ஆவியாரோடு, தந்தையாகிய இறைவனின் மாட்சியில் இருப்பவர் நீரே. ஆமென்.

குரு : **மன்றாடுவோமாக.**

எல் : ஆமென்.

## வார்த்தை வழிபாடு

01ம், 02ம் வாசக முடிவில்

வாசகர் : ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

எல் : இறைவனுக்கு நன்றி.

### நற்செய்தி வாசகம்

குரு : **ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.**

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு: **(பெயர்) ....எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம்.**

எல் : ஆண்டவரே, மாட்சி உமக்கே! (நற்செய்தி வாசக முடிவில்)

குரு : **கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**

எல் : கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

### நம்பிக்கை அறிக்கை

ஒரே கடவுளை நம்புகின்றேன். விண்ணகமும் மண்ணகமும், காண்பவை காணாதவை யாவும் படைத்த எல்லாம் வல்ல தந்தை அவரே. கடவுளின் ஒரே மகனாய் உதித்த ஒரே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன். இவர் காலங்களுக்கெல்லாம் முன்பே தந்தையிடமிருந்து பிறந்தார். கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக, உண்மைக் கடவுளினின்று உண்மைக் கடவுளாக உதித்தவர். இவர் உதித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர். தந்தையோடு ஒரே பொருளானவர். இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன. மனிதர் நமக்காகவும் நம் மீட்புக்காகவும் விண்ணகம் இருந்து இறங்கினார். (".....மனிதர் ஆனார்." எனச் சொல்லும் வரை எல்லாரும் தலை வணங்கவும்) தூய ஆவியால் கன்னி மரியாவிடம் உடல் எடுத்து மனிதர் ஆனார். மேலும் நமக்காகப் பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் சிலுவையில் அறையப்பட்டுப் பாடுபட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூல்களின்படி மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்தார். விண்ணகத்துக்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையின் வலப் பக்கம் வீற்றிருக்கின்றார். வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிட மாட்சியுடன் மீண்டும் வர இருக்கின்றார். அவரது ஆட்சிக்கு முடிவு இராது. தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும் ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான தூய ஆவியாரை நம்புகின்றேன். இவர் தந்தையோடும் மகனோடும் ஒன்றாக ஆராதனையும் மாட்சியும் பெறுகின்றார். இறைவாக்கினர்கள் வாயிலாகப் பேசியவர் இவரே. ஒரே, புனித, கத்தோலிக்க, திருத்தூதர் வழிவரும் திரு அவையை நம்புகின்றேன். பாவ மன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கை ஏற்றுக் கொள்கின்றேன். இறந்தோரின் உயிர்ப்பையும் வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன். ஆமென்.

### நம்பிக்கையாளரின் மன்றாட்டு

## நற்கருணை வழிபாடு

குரு : **ஆண்டவரே அனைத்துலகின் இறைவா, ....**

எல் : இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக!

குரு : **ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, ....**

எல் : இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக!

குரு : **சகோதர சகோதரிகளே, என்னுடையதும் உங்களுடையதுமான இப்பலி எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனுக்கு ஏற்றதாகும்படி மன்றாடுங்கள்.**

எல் : ஆண்டவர் தமது பெயரின் புகழ்ச்சிக்காகவும் மாட்சிக்காகவும் நமது நன்மைக்காகவும் புனிதத் திருஅவை அனைத்தின் நலனுக்காகவும் உமது கையிலிருந்து இப்பலியை ஏற்றுக் கொள்வாராக.

எல் : ஆமென்.

### நற்கருணை மன்றாட்டு

குரு : **ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.**

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு : **இதயங்களை மேலே எழுப்புங்கள்.**

எல் : ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.

குரு : **நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.**

எல் : அது தகுதியும் நீதியும் ஆனதே. (தொடக்கவுரை முடிவில்)

எல் : தூயவர், தூயவர், தூயவர். வான்படைகளின் கடவுளாம் ஆண்டவர். விண்ணகமும் மண்ணகமும் உமது மாட்சியால் நிறைந்துள்ளன. உன்னதங்களிலே ஓசான்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசி பெற்றவர். உன்னதங்களிலே ஓசான்னா!

குரு : **ஆண்டவரே, நீர் மெய்யாகவே தூயவர், தூய்மை அனைத்திற்கும் ஊற்று.**

**ஆகவே உம்முடைய ஆவியைப் பொழிந்து, இக் காணிக்கைகளைத் தூய்மைப்படுத்த உம்மை வேண்டுகின்றோம். இவ்வாறு, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உடலும் + இரத்தமுமாக எங்களுக்கு இவை மாறுவனவாக. அவர் பாடுபட உளம் கனிந்து தம்மைக் கையளித்தபோது அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, அதைப்பிட்டு, தம் சீடர்களுக்கு அளித்துக் கூறியதாவது:**

**அனைவரும் இதிலிருந்து பெற்று உண்ணுங்கள் ஏனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்.**


**அவ்வண்ணமே, இரவு விருந்தை அருந்தியபின், கிண்ணத்தையும் எடுத்து, மீண்டும் உமக்கு நன்றி கூறி, தம் சீடர்களுக்கு அளித்து அவர் கூறியதாவது:**

**அனைவரும் இதிலிருந்து பெற்றுப் பருகுங்கள் ஏனெனில் இது புதிய, நிலையான உடன்படிக்கைக்கு உரிய என் இரத்தத்தின் கிண்ணம். இது பாவ மன்னிப்புக்கென்று உங்களுக்காகவும் பலருக்காகவும் சிந்தப்படும். இதை என் நினைவாகச் செய்யுங்கள்**

குரு : **நம்பிக்கையின் மறைபொருள்.**

எல்1 : ஆண்டவரே, நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம். உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்.

எல்2 : ஆண்டவரே, நாங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும்போதெல்லாம் நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம்.




எல்3 : உலகின் மீட்பரே, எங்களை மீட்டருளும். உமது சிலுவையினாலும் உயிர்ப்பினாலும் எங்களுக்கு விடுதலை அளித்தவர் நீரே.

### திருவிருந்துச் சடங்கு

**குரு : மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு, இறைபடிப்பினையால் பயிற்சி பெற்ற நாம் துணிந்து சொல்வோம்.**

எல் : விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறை வேறுக! எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும்.

**குரு : ஆண்டவரே, தீமை அனைத்திலிருந்தும் எங்களை விடுவித்து, எங்கள் வாழ்நாளில் அமைதியைக் கனிவுடன் அருள உம்மை மன்றாடுகின்றோம். உமது இரக்கத்தின் உதவியால் நாங்கள் பாவத்திலிருந்து எப்போதும் விடுதலைபெற்று, யாதொரு கலக்கமும் இன்றி நலமாய் இருப்போமாக. நாங்கள் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் எம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.**

எல் : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

**குரு : ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவே, "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கின்றேன்" என்று உம் திருத்தூதர்களுக்கு மொழிந்தீரே! எங்கள் பாவங்களைப் பாராமல், உமது திரு அவையின் நம்பிக்கையைக் கண்ணோக்கி, உமது திருவுளத்துக்கு ஏற்ப அதற்கு அமைதியையும் ஒற்றுமையையும் அளித்தருள்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே.**

எல் : ஆமென்.

**குரு : ஆண்டவருடைய அமைதி உங்களோடு என்றும் இருப்பதாக.**

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

**குரு : ஒருவருக்கொருவர் அமைதியைப் பகிர்ந்துகொள்வோம்.**

எல் : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே, எங்களுக்கு அமைதியை அளித்திருளும்.

**குரு : இதோ, இறைவனின் செம்மறி, இதோ, உலகின் பாவங்களைப் போக்குபவர்: செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பெற்றோர் பேறுபெற்றோர்.**

எல் : ஆண்டவரே, நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன் ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும், எனது ஆன்மா நலம் அடையும்.

### நன்றி மன்றாட்டு

**குரு : மன்றாடுவோமாக.**

எல் : ஆமென்.

### நிறைவுச் சடங்கு

**குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.**

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

**குரு : எல்லாம் வல்ல இறைவன் தந்தை, மகன் + தூய ஆவியார் உங்களுக்கு ஆசி வழங்குவாராக.**

**தகவல்:- அருட்பணி. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம்**

எல் : ஆமென்.

# திருத்தந்தையின்
# ஊர்பி எத் ஓர்பி செய்தி



அன்பு சகோதர, சகோதரிகளே, உங்கள் எல்லாருக்கும் கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள். இயேசு, இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்! இந்தச் செய்தி, "இயேசுவே ஆண்டவர். இறைத்தந்தை அவரை உயர்த்தியுள்ளார் மற்றும், அவர் நம் மத்தியில் என்றென்றும் வாழ்கிறார்" என்ற அல்லேலூயா வாழ்த்துப் பாடலுடன், திருஅவையெங்கும் எதிரொலிக்கின்றது.

கோதுமை மணியின் உருவகத்தைப் பயன்படுத்தி, இயேசு தம் மரணத்தையும், உயிர்ப்பையும் நமக்கு முன்னறிவித்தார். "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (யோவா.12,24) என இயேசு சொன்னார். இதுவே நடைபெற்றுள்ளது. இறைவனால் இப்பூமியின் உழவுகால்களில் விதைக்கப்பட்ட கோதுமை மணியாகிய இயேசு, இறந்தார், உலகின் பாவத்தால் கொல்லப்பட்டார். கல்லறையில் இரு நாள்கள் இருந்தார். ஆயினும், தம் அனைத்து வல்லமையிலும் இறைவனின் அன்பில் இருந்த அவரின் மரணம், மூன்றாம் நாளில் வெளியானது. ஆண்டவராம் கிறிஸ்துவின் உயிர்ப்பாகிய அந்த நாளை இன்று 01.04.2018 நாம் கொண்டாடுகிறோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு, ஏமாற்றாத, உலகின் உண்மையான நம்பிக்கை என, கிறிஸ்தவர்களாகிய நாம் நம்புகின்றோம் மற்றும் அறிந்துள்ளோம். அது, கோதுமை மணியின் வல்லமை, அந்த அன்பின் வல்லமை, தன்னையே தாழ்த்துகின்றது மற்றும், உலகின் முடிவுவரை தன்னையே அளிக்கின்றது. இவ்வாறு, அந்த வல்லமை, உலகை, உண்மையிலேயே புதுப்பிக்கின்றது. ஏராளமான அநீதி மற்றும், வன்முறைச் செயல்களால் குறிக்கப்பட்ட நம் வரலாற்றின் ஏர்நிலங்களில், இன்றும் தொடர்ந்து கனி கொடுத்து வருகின்றது. ஒதுக்கப்படுதலும், தனிமைப்படுத்தப்படுதலும், பசியும் வேலைவாய்ப்பின்மையும், புலம்பெயர்ந்தோரும், குடிபெயர்ந்தோரும், போதைப்பொருள் வர்த்தகம், மனித வர்த்தகம் மற்றும், அடிமைநிலையின் தற்போதைய வடிவங்கள் போன்றவை இருக்கின்ற இடங்களில், இந்த வல்லமை, நம்பிக்கை மற்றும் மாண்பின் கனிகளை வழங்குகின்றது. புலம்பெயர்ந்தோரும், குடிபெயர்ந்தோரும், இக்காலத்திய வீணாகும் கலாச்சாரத்தால் அடிக்கடி புறக்கணிக்கப்படுகின்றனர்.

நீண்ட காலமாக துன்புறும் அன்புமிக்க சிரியா நாடு தொடங்கி, உலகமனைத்திற்கும் அமைதியின் கனிகளுக்காக, இன்று செபிக்கின்றோம். சிரியா நாட்டு மக்கள், முடிவில்லாத போரினால் சிதைந்து போயுள்ளனர். இந்த உயிர்ப்புப் பெருவிழா, உயிர்த்த கிறிஸ்துவின் ஒளி, அனைத்து அரசியல் மற்றும், இராணுவத் தலைவர்களின் மனச்சாட்சிகளை ஒளிரச் செய்வதாக. இதனால், தொடர்ந்து இடம்பெற்றுவரும் போர் விரைவில் முடிவுக்குவரும். மனிதாபிமானச் சட்டம் மதிக்கப்படும். உடனடியாக உதவி தேவைப்படும் நம் சகோதர, சகோதரிகளுக்கு உதவிகள் கிடைப்பதற்கு வழி அமைக்கப்படும். அதேநேரம், புலம்பெயர்ந்தவர்கள், நாடு திரும்புவதற்கு, சரியான நிலைகள் உருவாக்கப்படும்.

புனித பூமியின் ஒப்புரவின் கனிகளுக்காகவும் நாம் இறைஞ்சுகின்றோம். இந்நாள்களில், பாதுகாப்பற்ற மக்களை விட்டுவைக்காமல், தொடர்ந்து போர் இடம்பெற்றுவரும் ஏமன் நாட்டிற்கும், மத்திய கிழக்குப் பகுதி முழுவதிற்கும், ஒப்புரவின் கனிகளுக்காகச் செபிக்கின்றோம். இதனால், உரையாடலும், ஒருவரையொருவர் மதித்தலும் இடம்பெற்று, பிரிவினையும் வன்முறையும் அகற்றப்படும். அநீதிகளுக்கும், சித்ரவதைகளுக்கும் அடிக்கடி உள்ளாக்கப்படும் கிறிஸ்துவில் நம் சகோதரர்கள், சகோதரிகள், உயிர்த்த ஆண்டவருக்கும், நன்மை, தீமையை வெற்றிகொள்ளும் என்பதற்கும், சுடர்விடும் சான்றுகளாய் இருப்பார்களாக.

எல்லாவற்றிக்கும் மேலாக, மாண்புடைய வாழ்வுக்காக ஏங்குகின்ற, ஆப்ரிக்கக் கண்டத்தில், பசியாலும், ஆண்டு முழுவதும் இடம்பெறும் மோதல்களாலும் பயங்கரவாதத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளின் மக்களுக்கு, நம்பிக்கையின் கனிகள் கிடைக்க வேண்டுமென்று, இந்நாளில் நாம் வேண்டுகின்றோம். உயிர்த்த ஆண்டவரின் அமைதி, தென் சூடான் மற்றும் காங்கோ சனநாயக குடியரசின் காயங்களைக் குணமாக்கி, உரையாடல் வழியே, ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கு இதயங்களைத் திறப்பதாக. மோதல்களில் பலியாகும் சிறாரை மறவாதிருப்போம். தங்கள் வாழ்விடங்களை விட்டு கட்டாயமாக வெளியேற்றப்பட்டு, அத்தியாவசியத் தேவைகள் இன்றி இருப்போருக்கு ஒருமைப்பாட்டுணர்வு குறைவின்றி கிடைப்பதாக.

கொரியத் தீபகற்பத்தில் உரையாடலின் கனிகளுக்காகச் செபிக்கின்றோம். தற்போது இடம்பெற்றுவரும் கலந்துரையாடல்கள், அப்பகுதியில் நல்லிணக்கமும் அமைதியும் நிலவுவதற்கு உதவுவதாக. இதற்கு நேரிடையாகப் பொறுப்பானவர்கள், கொரிய மக்களின் நலனை ஊக்குவிப்பதற்கு, ஞானத்தோடும், தேர்ந்து தெளிதலோடும், செயல்படுவார்களாக. உலகளாவிய சமுதாயத்தில் நம்பிக்கை உறவுகளைக் கட்டியெழுப்புவார்களாக.

உக்ரேய்ன் நாட்டில் அமைதியின் கனிகளும், வெனெசுவேலா மக்களுக்கு, ஆறுதலின் கனிகளும் கிடைப்பதற்காகவும் மன்றாடுகின்றோம். சொந்த நாட்டில் அந்நியர் போல் வாழ்வதாக, வெனெசுவேலா ஆயர்கள் எழுதியிருக்கின்றனர். அந்நாட்டைச் சூழ்ந்துள்ள அரசியல் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் விரைவில் களையப்பட்டு, நீதி, அமைதி மற்றும் மனிதம் நிறைந்த வழிகள் காணப்பட, உயிர்த்த இயேசுவின் வல்லமைக்காகச் செபிக்கின்றோம்.... தொடர்ச்சி 15ஆம் பக்கம்






ஜோசப் எட்றியன் ஜவன், தரம் 3T, புனித பேதுரு கல்லூரி, கொழும்பு – 04.



சஞ்சயன் ஜெயக்குமார், தரம் 3T, புனித பேதுரு கல்லூரி, கொழும்பு – 04.



V. டெபோனா, தரம் 6C, புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு – 13.

# 3. திருமறைப் பழக்கங்கள்.

### 13. திருச்செபமாலையை இவ்வாறு செபியும்

இறை அன்னையின் அன்புச் செபம் திருச்செபமாலை. அன்னையின் அரவணைப்பை நீர் இத்திருச் செபமாலை வழியாகப் பெறுகிறீர். நீர் இத்திருச் செபமாலையை உம் குடும்பத்தோடு சேர்ந்து செபிப்பது நல்லது. ஆனால் திருச்செபமாலையைச் செபிக்கும் பழக்கத்தை நீர் தனித்து செபிப்பதன் வழியாகவே பெறுகிறீர். இயேசுவின் இருபது மறைநிகழ்வுகளையும் கோர்வையாக்கித் தியானச் சுருக்கங்களாக இந்நூல் தருகிறது. நாளுக்கு ஒரு மறையுண்மையை எடுத்து, பத்துத் தியானங்களை ஒவ்வொன்றாகச் சொல்லி அருள்நிறை மரியே என்ற செபத்தை அதனோடு சேர்த்து செபித்துத் தியானிக்கும்போது நாளடைவில் செபமாலையைத் தியானித்துச் செபிக்கும் பழக்கத்தை நீர் இயல்பாகவே பெற்றுவிடுவீர். திருச்செபமாலையைத் தியானிப்பதால் அன்னை மரியா பெரிய அளவில் உமக்கு நன்மைகளைத் தருகிறார்.

### 14. திருச் சிலுவைப்பாதையை இவ்வாறு செபியும்

தவக்காலத்தில் மட்டுமே திருச்சிலுவைப் பாதையைத் தியானிக்கும் பழக்கம் நம்மிடையே இருந்து வருகிறது. ஆனால் ஆண்டவர் இறந்த நாளான வெள்ளிக்கிழமைகளில் இதைத் தியானிக்கும் பழக்கத்தை நீர் உம்மில் உருவாக்கும். சிலுவைப்பாதையை தியானிக்க ஆலயத்துக்குச் சென்று அங்குள்ள சிலுவைப் பாதைப் படங்களைப் பார்த்துத் தியானிக்க வேண்டிய அவசியமில்லை. எங்கிருந்தாலும் இச்சிலுவைப் பாதையைப் பக்தியோடு வாசிக்கும்போது, நீர் இதைத் தியானிக்கின்றீர். வெள்ளிக்கிழமைகளில் நீர் ஆண்டவரின் இறப்பை நினைவுபடுத்த, இது உமக்கு ஒரு நல்ல மறைப் பழக்கமாக இருக்கிறது.

### 15. மாதம் ஒருமுறை தவறாது பாவமன்னிப்பைப் பெறும்

நீர் முதல்நன்மை பெற்றபின், மாதம் ஒருமுறை பாவமன்னிப்புப் பெறும் பழக்கத்தை உம்மிடம் உருவாக்கிக் கொள்ளும். இது உம் வாழ்வையும், ஆன்மாவையும், தூய்மையாய் வைத்திருக்க உதவுகிறது. இதனால் நீர் வானகத் தந்தையின் இரக்கத்தையும் அருளையும் அடிக்கடி பெற்று, அவரில் வாழ்ந்து வளர்கிறீர். மாதம் ஒருமுறை பாவ மன்னிப்பைப் பெற சிறப்பான நாள் மாதத்தின் முதல் வெள்ளிக்கு முந்திய நாளாகும். ஒவ்வொரு மாதமும் இந்நாளை மறந்துவிடாது அந்நாளில் பாவமன்னிப்புப் பெறுவதை ஒரு ஆன்ம தேவையாகக் கடைப்பிடியும். இது பாவம் என்ற ஆன்மீக நோய்க்கு இயேசு உமக்குத் தரும் ஆன்மீக மருந்து என்பதை மறவாதீர்.

### 16. நாளுக்கு உரியோரை நினைவுகூரும்

| | | |
|---|---|---|
| திங்கள் | : | இறந்தோரை நினைத்து அவர்களுக்காகச் செபியும். |
| செவ்வாய் | : | புனித அந்தோனியாரை வணங்கும். |
| புதன் | : | புனித சூசையப்பரை வணங்கும் |
| வியாழன் | : | தேவநற்கருணை ஆண்டவரிடம் குருக்களுக்காக செபியும். |
| வெள்ளி | : | ஆண்டவருடைய இறப்பை நினைவுகூரும் |
| சனி | : | அன்னை மரியாவை வணங்கி மரியாதை செய்யும் |
| ஞாயிறு | : | இயேசு ஆண்டவரின் உயிர்ப்பைக் கொண்டாடும். |

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**




இஸ்ரயேலரின் முதல் அரசன் சவுல். அவருடைய மூத்த மகன் தான் யோனத்தான். சவுல் அரசராகி வெற்றிகரமாக தனது முதல் ஆண்டை முடித்திருந்தார். இப்போது அவர்களுடைய தொடர் பகைவரான பெலிஸ்தியர்கள் போருக்கு வந்தார்கள். அந்தப் போரில் முக்கியமான பங்கு வகித்தவர் யோனத்தான்.

தன்னுடன் ஆயிரம் வீரர்களை சேர்த்துக் கொண்டு சென்ற யோனத்தான் கெபா எனும் இடத்தில் காவலில் இருந்த பெலிஸ்தியர்களை வெட்டி வீழ்த்தினார். இஸ்ரயேல் மக்களிடையே யோனத்தானின் புகழ் பரவியது. யோனத்தான் ஒரு வீரனாக கொண்டாடப்பட்டார்.

காலங்கள் கடந்தன. சவுல் கடவுளை விட்டு விலகி நடக்கத் தொடங்கினார். தாவீது எனும் வீரன் சவுலின் அரசவையில் அங்கம் வகித்தார். அவர் யாழ் மீட்டுவதிலும் வல்லவர். யோனத்தான் தாவீதை தனது உயிர் நண்பனாக்கிக் கொண்டான். தான் அணிந்திருந்த மேலங்கி, வாள், வில், கச்சை, எல்லாவற்றையும் தாவீதுக்குக் கொடுத்து தனது நட்பின் ஆழத்தைப் பிரகடனப் படுத்தினார். தாவீது, சவுலின் அரசவையில் படைத் தலைவனாகி வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கினார்.

தாவீது மாபெரும் வெற்றியாளனாய் மக்கள் மத்தியில் பிரபலமானார். மக்கள் "சவுல் ஆயிரம் பேரைக் கொன்றார், தாவீதோ பதினாயிரம் பேரைக் கொன்றார்" என பாராட்டிப் பாடினார்கள். அதைக் கேட்டது முதல் சவுல் தாவீதின் மீது விரோதம் வளர்க்கத் தொடங்கினார். சவுல் மன அழுத்தத்தில் இருக்கும் போதெல்லாம் தாவீது தனது யாழை மீட்டி சவுலை அமைதிப்படுத்துவது வழக்கம். சவுல் இரண்டு முறை தாவீது யாழ் வாசித்துக் கொண்டிருக்கையில் ஈட்டியால் எறிந்து அவரைக் கொல்ல முயன்றார். தாவீது தப்பினார்.

தனது மகளை தாவீதுக்கு மணம் முடித்து கொடுத்து பெலிஸ்தியர்களின் எதிராய் தாவீதை உருவாக்க சவுல் நினைத்தார். அதுவும் நடக்கவில்லை. பெலிஸ்தியருக்கு எதிராய் தாவீதுக்கே வெற்றி. சவுலின் கோபம் இன்னும் இன்னும் அதிகரித்தது. தாவீதைக் கொல்ல வேண்டும் என எல்லாரிடமும் சொன்னார். அது தாவீதின் உயிர்நண்பனும் சவுலின் மகனுமாகிய யோனத்தானின் காதுகளிலும் விழுந்தது.

அவர் சவுலிடம் வந்து தாவீதுக்காய் பரிந்து பேசினார். தாவீதைக் கொல்ல வேண்டாம். அவர் என்றுமே உங்களுக்குத் தீமை செய்ய நினைத்ததில்லை. உங்களுக்கு மாபெரும் வெற்றிகளைத் தான் தேடித் தந்திருக்கிறார். தாவீதைக் கொன்று குற்றமற்ற இரத்தத்துக்கு எதிராகப் பாவம் செய்ய வேண்டாம் என்றான். சரி, "தாவீதைக் கொல்லமாட்டேன்" என்றார் சவுல்.

ஆனால் தாவீது மீண்டும் மீண்டும் வெற்றிகளும் செல்வாக்கும் பெறவே, சவுல் மீண்டும் தாவீதைக் கொல்ல முயன்றார். "நான் என்ன பாவம் செய்தேன். எதுக்கு உன் அப்பா என்னைக் கொல்லத் தேடுகிறார்." தாவீது யோனத்தானிடம் புலம்பினார். அதற்கு யோனத்தான், "கவலைப்படாதே. என் அப்பா என்னிடம் கேக்காமல் எதுவும் செய்ய மாட்டார். உனக்கு எதுவும் ஆகாது" என்றார். யோனத்தானுக்கும், தாவீதுக்கும் இருந்த நட்பின் ஆழம் நாளுக்கு நாள் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

ஆனால் தாவீதின் மீது சவுல் மிகுந்த கோபமாய் இருந்ததை அடுத்தடுத்த நாட்களில் அவர் அறிந்து கொண்டார். எனவே தாவீதை அவர் தப்புவித்து அனுப்பினார். பிரியும் வேளையில் இருவரும் கட்டிப் பிடித்து அழுதனர். அந்த அளவுக்கு அவர்களிடையே நட்பு மிகவும் ஆழமாக இருந்தது.

பின்னர் தாவீதைக் கொல்ல சவுல் தேடுகையில் தாவீது மறைந்து வாழ்ந்தார். அப்போதும் யோனத்தான் சென்று அவரைச் சந்தித்து, "ஆண்டவர் உன்னோடு இருப்பார். நீ வெல்வாய். இஸ்ரயேலின் அரசனாவாய். நான் உனக்கு அடுத்த இடத்தில் இருப்பேன்" என்றெல்லாம் வாழ்த்தினார். ஆனால் அந்த ஆனந்தம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. எதிரிகளான பெலிஸ்தியரின் கைகளில் சிக்கி சவுலும், அவர் மகன் யோனத்தானும் கொல்லப்பட்டனர். செய்தியைக் கேட்ட தாவீது தமது உடைகளைக் கிழித்துக் கொண்டு அழுது புலம்பினார். அவர்களுக்காக துயரம் மிகுந்த இரங்கற்பா பாடி உண்ணா நோன்பு இருந்தார்.

**"சகோதரன் யோனத்தான்! உனக்காக என் உள்ளம் உடைந்து போனது! எனக்கு உவகை அளித்தவன் நீ! என் மீது அளித்த பேரன்பை என்னென்பேன்! அது மகளிரின் காதலை மிஞ்சியது அன்றோ" என கதறினார்.**

ஆழமான நட்புக்கு அழகான உதாரணம் யோனத்தான் - தாவீது நட்பு. தாவீது தனது இருக்கைக்கு ஆபத்தாய் வந்து விடுவானோ என பயப்பட வேண்டிய யோனத்தான் தாவீதை அளவு கடந்து நேசிக்கிறார். தனது பட்டத்து உரிமையையே தாவீதுக்குக் கொடுப்பதன் முன்னறிவிப்பாய் அரச உடைகளை அவருக்கு அணிவிக்கிறார். தன் தந்தைக்கு எதிராய்ச் செயல்பட்டும் கூட நண்பனைக் காக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, எப்போதும் கடவுளை முன்னிறுத்தியே வாழ்கிறார்.

**நட்பின் இத்தகைய நல்ல செயல்களை யோனத்தானின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்வோம்.**



# நிறைவுப் படிகள்

❀ ❀ ❀

தோல்விப் படிக்கட்டுகளின்
உச்சத்தில்தான்
வெற்றிக் கொடி!

தோல்விகள்...
வெறுமைகள் அல்ல,
வெற்றியின் அங்காளி பங்காளிகள்!

வெற்றிக்கொடி. நிறைவுக் கொடி.
இதில் எது சிறந்த கொடி?

வெற்றி மனநிலைப் பயணம்கூட வெறுமை
காட்டலாம்.
நிறைவு மனநிலைப் பயணமோ வெறுமையைக்
கூட வெற்றிக்கரமாய்தான் வெளியே காட்டும்!

நிறைவே இலக்கு,
வெற்றியல்ல!

❀ ❀ ❀

# வேரோட்டம்

**வேர்கள்–**
**மரங்களுக்கு மட்டுமல்ல,**
**மனிதர்களுக்கும் முக்கியம்!**

**மரத்தின் வேரோட்டம்**
**பரந்து படரும் கிளைகளிலே!**
**மனிதத்தின் வேரோட்டம்**
**மன்னித்து மலரும் மனத்திலே!**

**வேரோட்டமான வாழ்வு**
**தேரோட்டமான திருவிழா!**






# பயனுள்ள வாழ்வு!

ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று ஓர் இளைஞர் நண்பர்களிடம் கேட்டார். சிலர் சினிமாவுக்குப் போகச் சொன்னார்கள். சிலர் நண்பர்களுடன் செலவிடச் சொன்னார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு யோசனை வந்தது. பிறகு, நேர நிர்வாகவியல் நிபுணரை அழைத்து ஆலோசனை கேட்டார் இளைஞர். புத்தகம் படி, நல்ல காரியங்கள் செய் என்றெல்லாம்தான் சொல்லப்போகிறார் என்பது இளைஞரின் எதிர்பார்ப்பு. நேர நிர்வாகவியல் நிபுணர் மிக நிதானமாகச் சொன்னார் "உன் ஓய்வு நேரத்தை மற்றவர்கள் தவறாகப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள். அதுவே பயனுள்ள நேரங்களைத் தொடங்கி வைக்கும்" என்று. எமக்குத் தரப்பட்டுள்ள வாழ்வு அருள் கொடையாகும். மறு வாழ்வுக்கான தயாரிப்பாகும். இதில் கடந்து செல்லும் நேரம் திரும்ப எமக்கு கிடைக்காத ஒரு சொத்தாகும். அதைத் திருடன் திருடாமல் காத்துக்கொள். அப்போது உன் வாழ்வு முழுவதும் பயனுள்ளதாக மாறும்.




# நம் வாழ்க்கை நம் கையில்



வாழ்வா? சாவா? புகழா? இகழா? வெற்றியா? தோல்வியா? இவையெல்லாமே நம் கையில் இருக்கிறது. பட்டாம் பூச்சியைக் கையில் ஒழித்து வைத்துக்கொண்டு உயிரோடு இருக்கிறதா? இல்லையா? என்று கேட்டவரிடம் ஜென் ஞானி "எல்லாம் உன்கையில் இருக்கிறது" என்றதைப் போன்று "வாழ்க்கை நம் கையில்" இருக்கிறது. உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறவர்கள் நீங்கள்தான். தாலந்து எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து, இரண்டு, ஒன்று என்று தாலந்து எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவரின் இந்த, தாலந்து உவமையில் தாலந்து இல்லாத மனிதர் இடம்பெறாதது சிந்திக்கத்தக்கது. அவன் மன்னன் கொடுத்த ஒரு தாலந்தை மண்ணில் புதைக்காமல் அதனைக்கொண்டு சிறிது முயற்சித்து ஒருவேளை தோற்றுப்போயிருந்தால்கூட அதனைக் கொடுத்தவர் நிச்சயம் பாராட்டியிருப்பார். தான் செய்த தவறை மறைக்க, இன்னொருவரின் நேர்மையைக் குறைகூறி, அபாண்டமாகப் பழிசுமத்தி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயலுகிறவனை யாராக இருந்தாலும் இந்த உலகம் எள்ளி நகையாடும். வாழ்வின் நிறைவைக் கடவுள் உங்களிடம்தான் தந்துள்ளார். அதை மண்ணில் புதைத்து வைத்தால் நிறைவு காணமுடியாது. அதைச் சரியாகப் பயன்படுத்தினால் நீங்கள் மேலும் நிறைவு காண்பீர்கள்.

**குற்றம் கூறுகின்றவர்களை என்ன செய்வதென்றல்ல, முதலில் நீ குற்றம் செய்யாதிருக்க என்ன செய்வது என்று பார்!**

# வாழ்க்கைத் தத்துவம்

**அழிவைத் தருவது - ஆணவம்**
**ஆபத்தைத் தருவது - கோபம்**
**இருக்க வேண்டியது - பணிவு**
**இருக்க கூடாதது - பொறாமை**
**உயர்வுக்கு வழி - உழைப்பு**

**கண்கண்ட தெய்வம் - பெற்றோர்**
**செய்ய வேண்டியது - உதவி**
**செய்யக் கூடாதது - துரோகம்**
**நம்ப கூடாதது - வதந்தி**
**நழுவ விட கூடாதது - வாய்ப்பு**

**நம்முடன் வருவது - புண்ணியம்**
**பிரியக் கூடாதது - நட்பு**
**மறக்கக் கூடாதது - நன்றி**
**மிக மிக நல்ல நாள் - இன்று**
**மிகப் பெரிய தேவை - அன்பு**

**மிகக் கொடிய நோய் - பேராசை**
**மிகவும் சுலபமானது - குற்றம் காணல்**
**மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு**
**விலக்க வேண்டியது - பழி**
**போனால் வராதது - மானம்**

# இளவயதில் சாதிக்க முடியாதா?

- புத்தர் ஞானம்பெற அரண்மனையை விட்டு வெளியேறியபோது - வயது 27
- ஜான்சி ராணி, வெள்ளையரை எதிர்த்து, வீரத்துடன் போரிட்டபோது - வயது 25
- திருப்பூர் குமரன், வெள்ளையரை எதிர்த்து இரத்தம் சிந்தியபோது - வயது 26
- அலெக்சாண்டர் பாரசீகத்தின் மீது படையெடுத்தபோது - வயது 22
- ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விதியை கண்டறிந்த போது - வயது 24
- கலிலியோ தெர்மோமீட்டர் அடிப்படைக் கூறைக் கண்டுபிடித்தபோது - வயது 20
- மார்க்கோ போலோ உலகப் பயணத்தை தொடங்கியபோது - வயது 17
- கிரஹாம்பெல் தொலைபேசியை கண்டுபிடித்தபோது - வயது 29
- பாஸ்கல் கணக்கிடும் கருவியைக் கண்டுபிடித்தபோது - வயது 19

*சாதனைகள் செய்வதற்கு வயது வரம்பு தேவையில்லை*



# வாழ்வுக்கான தேடுதலில் அச்சமின்றி செயல்படுங்கள்

விவிலிய காலத்தில் இறைவன் இளையோர் வழியாக பேசியதுபோல், இப்போதும் அவர் இளையோர் வழியாக பேசுகிறார் என்பதை தான் உறுதியாக நம்புவதாக, இத்திங்களன்று இளையோரிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இளையோரை மையப்படுத்தி, வருகிற ஐப்பசி மாதம், வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர் மாமன்றத்திற்கு தயாரிப்பாக, இவ்வாரம் உரோம் நகரில் இடம்பெறும் இளையோர் கூட்டத்திற்குச் சென்ற திருத்தந்தை அவர்கள், அங்கு இளையோருக்கு ஆற்றிய உரையில், பலவேளைகளில் இளையோரின் முக்கியத்துவத்தை ஒதுக்கி வைக்கும் இன்றைய கலாச்சாரத்தில், அவர்களின் முக்கியத்துவம் உணர-ப்பட்டு அவர்களுக்குரிய இடம் வழங்கப்படவேண்டும் என்றும் வெட்கமடையாமல், துணிவுடன் விடயங்களை எடுத்துரைக்கும் இளையோரின் கடமைகளையும் வலியுறுத்திய திருத்தந்தை, நமக்குப் பிடிக்காத எதையும் எவர் பேசினாலும் அவற்றைப் பொறுமையுடன் செவிமடுக்கும் தகுதியைப் பெறுவோம், ஏனெனில், நாம் பேசுவதை மற்றவர் செவிமடுக்கவேண்டும் என்ற உரிமையை நாம் எவ்வளவு எதிர்பார்க்கிறோமோ, அந்த அளவுக்கு, மற்றவர்கள் பேசுவதற்கு இருக்கும் உரிமையையும் நாம் மதிக்கவேண்டும் என்றார்.

இளையோர் மீது முழு நம்பிக்கை கொண்டு, அவர்களை அன்புகூரும் இறைவன், தன் முதல் சீடர்களிடம், “என்ன தேடுகிறீர்கள்“ என கேட்டதுபோல் ஒவ்வோர் இளையோரிடமும் கேட்டு, வாழ்வுக்கான தேடுதலில் தன்னுடன் நடக்குமாறு அழைப்பு விடுக்கிறார் என்றார் திருத்தந்தை.



இன்றைய உலகின் நிலைகள் குறித்து எண்ணற்ற இளையோர் தனக்கு கடிதங்கள் எழுதியுள்ளது பற்றியும் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளையோரிடையே பணிபுரிய அருள்பணியாளர்கள் அதிக அளவில் தேவை என ஓர் இளைஞர் தனக்கு அனுப்பியுள்ள செய்தியையும் சுட்டிக்காட்டினார்.

இளையோர் ஒவ்வொருவரும் விசுவாசத்திலும் தேடுதலிலும் கொள்ளவேண்டிய ஆர்வத்தை மீண்டும் பெறவேண்டும் எனபதை வலியுறுத்திய திருத்தந்தை, தோல்விகளையும் தாண்டி முன்னோக்கிச் செல்லவேண்டிய பலமும், வருங்காலத்தின் மீது நம்பிக்கை வைத்து செயல்பட வேண்டிய பலமும், தேவைப்படும் இன்றைய இளையோர், இந்நாட்களில், இக்கூட்டத்தில், திறந்த மனதுடன், எவ்வித அச்சமுமின்றி தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து-கொள்ளவேண்டும் என்ற விண்ணப்பதையும் முன்வைத்தார்.



# மனித, ஆன்மீக உருவாக்குதலில் கவனம் செலுத்த அழைப்பு

பங்குனி 17, 2018 அன்று உரோம் நகரில் பாப்பிறை இறையியல் கல்லூரிகள் மற்றும், திருஅவை நிறுவனங்களில் படிக்கும் குருத்துவ மாணவர்கள் மற்றும் அருள்பணியாளர்களுக்கு உரையாற்றினார் திருத்தந்தை.

“மண்ணில் விழுந்து மடிந்து வாழ்வளிக்கும் கோதுமை மணி போன்று, இயேசு தம்மை ஆக்கினார். அந்த அன்பால் நிறைந்த வாழ்விலிருந்து நம் நம்பிக்கை ஊற்றெடுக்கின்றது” என்றார் திருத்தந்தை.

மேலும், தூய ஆவியாருக்கு எப்போதும் திறந்த மனம் உள்ளவர்களாய், மனித மற்றும், ஆன்மீக உருவாக்குதலில், தொடர்ந்து கவனம் செலுத்துங்கள்.

ஓர் அருள்பணியாளர் தாழ்மையான சீடராகவும், அதேநேரம் மறைப்பணியாளராகவும் எவ்வாறு இருக்க முடியும் என, ஒரு ப்ரெஞ்ச் குருத்துவ மாணவர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த திருத்தந்தை, பிறர் சொல்வதற்குச் செவிசாய்ப்பவராக, மக்களைச் சந்திப்பவராக வாழ்கின்ற அருள்பணியாளர், ஒருபோதும் தனிமையை உணரமாட்டார் என்று கூறினார்.

அருள்பணியாளராகத் திருப்பொழிவு பெற்ற பின்னரும், ஒருவர் தனது இறையழைத்தலை எவ்வாறு தெளிந்து தேர்வு செய்வது என, சூடான் நாட்டு குருத்துவ மாணவர் ஒருவர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த திருத்தந்தை, எது சரி, எது தவறு என்பதைப் புரிந்துகொள்வதற்கு உதவுகின்ற, தெளிந்து தேர்தலின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

# இத்தாலியின் திரெந்தீனோ அமைப்பினரைச் சந்தித்த திருத்தந்தை

பங்குனி, 24,2018. திருப்பீடத்தின் பல்வேறு சமூகப்பணிகளில் ஒத்துழைக்கும் மற்றும் உதவிவரும் இத்தாலியின் திரெந்தீனோ (Trentino) அமைப்பு என்றழைக்கப்படும் குழுவினருக்கு தன் நன்றியை வெளியிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இத்தாலியின் வடகிழக்குப் பகுதியான திரெந்தீனோவிலிருந்து, அப்பகுதி பேராயர் லவுரோ தீசி அவர்களுடன் வத்திக்கானுக்கு வருகை தந்த 110 பேர் கொண்ட குழுவை, திருப்பீடத்தில் சந்தித்து உரை வழங்கியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த 20 ஆண்டுகளாக, இக்குழு, திருப்பீடத்திற்கு, குறிப்பாக, வத்திக்கான் நகர் நிர்வாகத்திற்கு செய்துவரும் உதவிகளுக்காக தன் நன்றியை வெளியிட்டார்.

வத்திக்கான் நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள், மற்றும் திருப்பயணிகளை வரவேற்பது உட்பட, பல்வேறு திட்டங்களுக்கு, திரெந்தீனோ அமைப்பு உதவிவருவதைப்பற்றி குறிப்பிட்டத் திருத்தந்தை, திரெந்தீனோ பகுதியில் ஆழமாக வேரூன்றியிருக்கும் கடவுள் நம்பிக்கை, கடின உழைப்பு, ஒருமைப்பாடு ஆகியவற்றின் வெளிப்பாடாக இவ்வமைப்பினர் ஆற்றிவரும் உதவிகள் விளங்குகின்றன என்று கூறினார்.



மனம் திறந்த சகோதரத்துவ வாழ்வு, பிறரை ஏற்றுக்கொள்ளும் கலாச்சாரம் ஆகியவற்றுடன் தொடர்ந்து செயல்படுமாறு அழைப்பு விடுத்தத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நற்செய்தி கற்பிக்கும் நன்னெறி மதிப்பீடுகளின் துணிச்சல் மிகுந்த சாட்சிகளாக அனைவரும் வாழவேண்டிய தேவை உள்ளது என்பதையும் தன் சந்திப்பில் வலியுறுத்தினார்.




# Regina Coeli சிறைக்கூடத்திற்கு திருத்தந்தையின் நினைவுப்பரிசு



மார்ச் 29, வியாழன் மாலை 4 மணியளவில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் நகரில் அமைந்துள்ள 'Regina Coeli' சிறைக்கூடத்திற்குச் சென்று, முதலில், அங்கு நோயுற்றிருந்த கைதிகளைச் சந்தித்தார்.

இயேசுவின் இறுதி இரவுணவை நினைவுகூரும் திருப்பலியை, மாலை 4.30 மணியளவில் நிறைவேற்றியத் திருத்தந்தை, இத்தாலி, மொராக்கோ, கொலம்பியா உட்பட, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 12 கைதிகளின் காலடிகளைக் கழுவி முத்தமிட்டார்.

தான் நிறைவேற்றிய திருப்பலியின் நினைவாக, அச்சிறைக்கூடத்தின் பீடத்தில் வைப்பதற்கு, ஒரு நினைவுப் பரிசை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.

முட்புதரில் சிக்கியிருக்கும் ஆட்டுக்-குட்டியையும், அதை மீட்கச் செல்லும் மேய்ப்பரையும் சித்தரிக்கும் ஒரு வெண்கலச் சிலையை, Fiorenzo Bacci என்ற இத்தாலிய சிற்பி உருவாக்கி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு 2016ம் ஆண்டு பரிசாக அளித்தார். பொருள் நிறைந்த இச்சிலையை, திருத்தந்தை, 'Regina Coeli' சிறைக்கூடத்திற்கு பரிசாக அளித்தார்.

திருப்பலியின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிறைக்கூடத்தில் இருந்த அனைத்து கைதிகளையும், பொறுப்பாளர்களையும் சந்தித்து உரையாடினார்.

'Regina Coeli' சிறைக்கூடத்திற்கு, 1958ம் ஆண்டு, திருத்தந்தை புனித 23ம் ஜோன், 1964ம் ஆண்டு, திருத்தந்தை, அருளாளர் 6ம் போல், மற்றும், 2000மாம் ஆண்டு, திருத்தந்தை 2ம் ஜோன்போல் ஆகியோர் சென்றுள்ளதையடுத்து, இவ்வாண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இச்சிறைக்கூடத்திற்குச் சென்றுள்ளார்.

## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“கிறிஸ்துவே! உம் சிலுவையை ஒருபோதும் அவமானமாகக் கருதாமல் இருக்க எமக்குக் கற்றுத்தாரும்”

“எவரொருவர், சிலுவையிலிருந்து விலகிச் செல்கிறாரோ, அவர், உயிர்ப்பிலிருந்தும் விலகிச் செல்கிறார்”

“இயேசு நம் பாவங்களை மன்னிப்பாகவும், அச்சங்களை நம்பிக்கையாகவும் மாற்றுகிறார். அவரின் சிலுவையில் நம் நம்பிக்கை மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கிறது”

“அறையப்பட்ட கிறிஸ்துவை நோக்குங்கள்: நிரந்தர வாழ்வின் நம்பிக்கை அவரிடம் பிறக்கின்றது”

“ஆண்டவர் உரைத்ததுபோலவே, அவர் உண்மையிலேயே, உயிர்த்தெழுந்தார். இந்த வியத்தகு அறிவிப்பை இன்று நாம் மீண்டும் சொல்கிறோம். உங்கள் எல்லாருக்கும் புனித உயிர்ப்பு நல்வாழ்த்துக்கள்!”

“நம் விசுவாசம் பிறந்துள்ளது. இயேசு உயிரோடு இருக்கின்றார்! இந்த அனுபவம், கிறிஸ்தவ செய்தியின் மையம்”




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்



கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**79. பரிசுத்த ஆவியானவர் எமது மீட்புக்கு உதவுகிறாரா?**

ஆம், பரிசுத்த ஆவி திருச்சபையில் செயலாற்றும் போது எமது ஆன்மாவை, தெய்வீக அருளினால் தூய்மைப்படுத்துகின்றார். அவர் எமக்கு ஞானம், புத்தி, ஆலோசனை, அறிவு, திடம், பக்தி, தேவபயம் என்னும் கொடைகளையும் அளிக்கின்றார்.

கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள். மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லை, மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள். அதனால் நாம், "அப்பா, தந்தையே" என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார். (உரோ 8:14-16

இவ்வாறு தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணைநிற்கிறார், ஏனெனில், எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது, தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார். உள்ளங்களைத் துருவி ஆயும் கடவுள் தூய ஆவியாரின் மனநிலையை அறிவார். தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் இறைமக்களுக்காகப் பரிந்துபேசுகிறார். (உரோ 8:26-27)

அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது, ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது. (உரோ 5:5)

நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? (1கொரி 3:16)

**80. பரிசுத்த ஆவி திருச்சபையில் எவ்வாறு செயற்படுகிறார்?**

அவர் திருச்சபையை தூய்மைப்படுத்துகிறார். வழிநடத்துகிறார், பிழைகள் அழிவுகளிலிருந்து பாதுகாக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் பெந்தக்கோஸ்தே நாள் தொடங்கி திருச்சபையில் பிரசன்னமாயிருக்கிறார். உலக முடிவு பரியந்தம் திருச்சபை தனது பணியைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு உதவுகிறார். தூய ஆவியே திருச்சபையை புனிதப்படுத்தி, காத்து வருகின்றார்.

திருச்சபையின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து தூய ஆவி செயற்படுகின்றார். அவர் ஒவ்வொருவரின் ஆன்மாவிலும், புனிதப்படுத்தும் அருள் வழியாக வாசம் செய்கின்றார்.

எமது திருமுழுக்கின் போது எம்மை இறைவனின் பிள்ளைகளாக்கி தூய்மைப்படுத்துகின்றார். விஷேட விதமாக எம்மிடத்தில் இறை புண்ணியங்களான விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பவற்றை விதைக்கின்றார்.

நாம் உறுதிபூசுதல் என்னும் திருவருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளும்போது தூய ஆவி எம்மில் வந்து, எம்மை இறைவாழ்வில் திடப்படுத்தி, எம்மை கிறிஸ்து இயேசுவின் சாட்சிகளாக, அதாவது போர்வீரர்களாக ஆக்குகின்றார்.

"நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார் தாம் கேட்பதையே பேசுவார் வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார்". (யோவா 16:12-13)

**81. புனிதப்படுத்தும் அருளுடன் சேர்த்து, பரிசுத்த ஆவியினால் வழங்கப்படும் பிரதான புண்ணியங்கள் எவை?**

புனிதப்படுத்தும் அருளுடன் பரிசுத்த ஆவி எமக்கு இறையியல் புண்ணியங்களான விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பவற்றைத் தருகின்றார். இவை எம்மை நேரடியாக இறைவனோடு இணைப்பதால் இறையியல் புண்ணியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**82. விசுவாசம் என்றால் என்ன?**

இறைவன் எமக்கு வெளிப்படுத்திய யாவற்றையும் விசுவசிப்பதற்கு இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட கொடையே விசுவாசம்.

- நாம் இறைவன் எமக்கு வெளிப்படுத்தியவற்றையெல்லாம் நம்புகின்றோம். எமக்கு அவை விளங்காவிட்டாலும், ஏனெனில் இறைவன் எல்லாம் அறிந்தவர். அவர் எவரையும் ஏமாற்றுவதில்லை.
- எமது அன்றாட வாழ்வில் மற்றவர்கள் கூறும் எதையும் நாம் விசுவசிக்கின்றோம். அவற்றைப் பற்றிய உண்மையை அறியாமலேயே நாம் அவற்றை நம்புகின்றோம். உதாரணம் நட்சத்திரங்களினதும் கிரங்களினதும் அசைவுகள்
- நாம் விசுவசிக்கும் நபர்கள் தவறு இழைத்தாலும் இறைவன் தவறமாட்டார். ஆகவே, தவறு செய்யும் மனிதர்களை நாம் நம்புவோமென்றால் தவறு செய்ய முடியாத கடவுளை ஏன் எம்மால் நம்ப முடியாது?

நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை. (எபி 11:1)

இயேசு அவரை நோக்கி, "இயலுமானாலா? நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்" என்றார். (மாற் 9:23)

**83. நம்பிக்கை என்றால் என்ன?**

நம்பிக்கை என்னும் புண்ணியமானது, இறைவன் எமக்கு முடிவில்லாத சந்தோஷத்தையும், அதை அடைவதற்கான வழிகளையும் தருவார் என்று நம்புவதே. "நம்பிக்கை" எல்லாம் வல்ல இறைவனின் சக்தியில் தங்கியுள்ளது. நாம் இறைவனை நம்புகிறோம். ஏனெனில் அவரால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. அவற்றையெல்லாம் நல்மனத்தோடு செய்கின்றார்.

ஏனெனில், என் மீட்பர் வாழ்கின்றார் என்றும் இறுதியில் மண்மேல் எழுவார் என்றும் நான் அறிவேன். என் தோல் இவ்வாறு அழிக்கப்பட்ட பின், நான் சதையோடு இருக்கும் போதே கடவுளைக் காண்பேன். நானே, அவர் என் பக்கத்தில் நிற்கக் காண்பேன் என் கண்களே காணும். வேறு கண்கள் அல்ல, என் நெஞ்சம் அதற்காக ஏங்குகின்றது. (யோபு 19:25-27)

**84. அன்பு என்றால் என்ன?**

இறைவனை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்யவும், அவருக்காக எமது அயலானையும் எம்மைப்போல் அன்பு செய்ய அளிக்கப்பட்ட கொடையே அன்பு.

நாம் இறைவனை அன்பு செய்கின்றோம். ஏனெனில் அவர் நன்மை நிறைந்தவர். அன்பு எமது பாவங்களை அகற்றுகிறது. கிறிஸ்து எமக்கு கற்பித்துள்ளார். அன்பே எல்லா கற்பனைகளுக்கும் மேலானதும் முதன்மையானது என்று

அன்பு பொறுமையுள்ளது, நன்மை செய்யும் பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது. அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும், அனைத்தையும் நம்பும், அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும், அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும். இறைவாக்கு உரைக்கும் கொடை ஒழிந்துபோகும், பரவசப்பேச்சு பேசும் கொடையும் ஓய்ந்துபோகும் அறிவும் அழிந்துபோம். ஆனால் அன்பு ஒருபோதும் அழியாது. ஆக, நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது. (1கொரி 13:4,7,8,13)

**பாடங்கள் தொடரும்...**

# அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் நினைவுச்சின்னங்களை / பாதச்சுவடுகளைத் தேடி யாழ்ப்பாணம் சென்ற பயணம்

அருட்பணி. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் பாவனை செய்யப்பட்ட பண்டங்கள் / பொருட்கள் மற்றும் அவரைப் பற்றி எழுதப்பட்ட புத்தகங்கள், அவர் பயணம் செய்த இடங்கள் பற்றி ஆராய்வதற்கும், அவரைப் பற்றிய ஆழமான தேடலை மேற்கொள்வதற்கும், போலவத்த ஆலயத்தின் அருட்பணி. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் செயற்குழுவானது, சுற்றுலாவொன்றை மேற்கொண்டனர். இச்சுற்றுலாவில் போலவத்தை ஆலயப் பங்குத் தந்தையான அருட்பணி. ஜெயந்த பெரேரா அவர்கள் பங்பேற்றார். மாசி மாதம் 16, 17 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களை தெரிவு செய்து, 22 பேர் அடங்கிய குழுவொன்று இப்பயணத்தில் ஈடுபட்டனர்.

விசேட விதமாக, அருட்பணி, கொன்சால்வேஸ் அடிகளார் பற்றி தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் புனித மாடீன் கனிஷ்ட குருமட இயக்குனர் அருட்பணி பிலேன்திரன் அவர்களை சந்தித்தல் இப்பயணத்தில் முக்கியமான நோக்கமாக அமைந்தது. அருட்தந்தை பிலேந்திரன் அவர்களால் அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளார் பற்றி எழுதப்பட்ட புத்தகங்கள் சிலவற்ரைப் போலவத்-தையில் அமைந்திருக்கும் அடிகளாரின் நூதனசாலையில் / பொருட்காட்சியகத்தில் வைப்பதற்காக பரிசிலிக்கப்பட்டது. அருட்பணி. பிலேந்திரன் அடிகளாரால், அங்கு சென்றிருந்த குழுவினருக்கு அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளாரின் குணாதிசயங்கள் சிறப்பம்சங்கள் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. அதில் அடிகளாரிடத்தில் விளங்கிய ஞாபகத்திறன் பற்றி விசேடமாக கருத்துத் தெரிவிக்கப்பட்டது. 1705 வைகாசி மாதம் கோவாவில் இருந்து இலங்கைக்கு



வர ஆயத்தமாகி ஆவனி மாதம் 31 இலங்கை வரும் காலகட்டதினுள் அடிகளார் மிகச் சிறப்பாக தமிழ் மொழியை கற்றார். மூன்று மாத காலத்துக்குள் ஓர் மொழியை நன்றாகக் கற்றுக்கொள்ளும் அளவுக்கு மிகவும் திறமைசாலியாக அடிகளார் விளங்கினார்.

அடிகளாரினால் யாழ் மக்களுக்கு வழங்கப்பட்ட மறைச்சேவைகள், அருளடையாளங்களை இன்று காணக்கூடியதாக இருக்கின்றது என புனித வாரத்தில் நிகழ்வுகளுள் அடிகளாரினால் எழுதப்பட்ட பாடுகள் பற்றியதான 9 மறையுரைகளை பாடல்களை பாடுதல், இன்றும் யாழ் ஆலயங்களில் காணக்கூடியதாக உள்ளன. மேலும், பெரிய வெள்ளிக்கிழமை இயேசுவின் பாடுகள், மற்றும் மரணம் பற்றியதான மறையுரை 9 பற்றி உச்சாரணம் செய்வது முக்கியமான விடயம் என அருட்பணி பிலேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

**தகவல் டேவிட் பெட்ரிக்**

**அருட்பணி. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் இயக்கம் / ஆணைக்குழு**

# பேராசை வேண்டாம்

**வாழ்வில் விரும்புவது வரவில்லையா? வருந்த வேண்டாம்**
**வருவதை விரும்புவோம் வாழ்க்கை வசந்தமாகும்.**

**சோதனைகளும் சாதனைகளாகும்**
**தடைக்கற்களும் படிக்கற்களாகும்**
**மலைச்சுமைகளும் மாலைச் சுமைகளாகும்**
**வாழ்க்கை வசந்தமாகும் – அந்த வசந்தம் சுகந்தமாக**
**நறுமணம் பரப்பும் – ஏனெனில் வாழ்க்கை வாழ்வதற்கே**
**வருத்தப்பட அல்ல**

**பென்ஜமின் சோமநாதர், தெஹிவளை**

## 01 மரியா, திருஅவையின்...

நிகழ்வின் 160ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, மாசி 11ம் திகதியன்று, திருத்தந்தையின் இந்த விதிமுறை கையெழுத்திடப்பட்டது என்று கூறியுள்ளது.

தூய ஆவியார் பெருவிழாவுக்கு அடுத்து வருகின்ற திங்கட்கிழமை, புனித கன்னி மரியா, திருஅவையின் அன்னை என்ற விழா, இலத்தீன் வழிபாட்டுமுறை திருவழிபாட்டில் கட்டாயமாகச் சிறப்பிக்கப்பட வேண்டும் என்ற திருத்தந்தையின் விதிமுறையை, திருவழிபாட்டுப் பேராயம் வெளியிட்டுள்ளது.

இந்தப் பக்திமுயற்சி, திருஅவையின் தாய்மை உணர்வை வளர்க்க உதவும் என்றும் கூறப்பட்டுள்ளது. அருளாளர் திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், மரியா, திருஅவையின் அன்னை என அறிவித்தார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**



# இம்மாத புனிதர்கள்





## புனித ரிச்சர்ட் சித்திரை 03

புனிதர்கள் பலரைப் போல இவரும் இளமையிலிருந்தே புண்ணிய வாழ்வை நாடினார். பிறருக்கு சேவை செய்வது இவருக்கு பேரானந்தம். இவர் கல்வி கற்கும் போதே உற்ற நண்பர் இருவரோடு தவ வாழ்வு நடத்தி வந்தார். இவர் குருப்பட்டம் பெற்று ஆயரானார். இவருக்கு அநேக தொல்லைகள் ஏற்பட்டன. சிறிது அமைதி ஏற்பட்டதும், மக்களை புண்ணியவான்களாக்குவதில் முனைந்து நின்றார். திருச்சபையில் கட்டுப்பாட்டைக் காத்தார். ஏழைகள் மீது மிகுந்த அன்புள்ளவர். இயேசு வாழ்ந்த புண்ணிய பூமியை மீட்கும்படி ஒரு போர் தொடங்க வேண்டியிருந்தது. அதைப் பற்றி ஊர் ஊராகப்போய்ப் பிரசங்கிக்கும்படி திருத்தந்தை இவருக்கு கட்டளையிட்டார். அந்த வேலையைச் செய்யும்போது இவர் இறந்தார்.

## புனித செலஸ்தீன் சித்திரை 06

உரோமைக் குருக்கள் மத்தியில் இவர் பெரும் புகழுடன் வாழ்ந்து வந்தார். திருத்தந்தையான முதல் பொனிபாஸ் இறந்ததும் இவர் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அச்சமயத்தில் புசலா நகரில் ஆயராக இருந்தவர் அந்தோனி என்பவர். கொடுங்கோல் ஆட்சிபுரிந்து மக்களை நிர்ப்பந்தித்து வந்தார். இந்த குற்றங்கள் எண்பிக்கப்பட்டிருந்தது. திருத்தந்தை விசாரித்த பின் சில ஊழல்களைத் திருத்தும்படி கட்டளையிட்டார். “கிறிஸ்துநாதர் எங்கெல்லாம் வணங்கப்படுகிறாரோ அந்த இடங்களிலெல்லாம் நான் விழிப்பாய் இருக்க வேண்டும்” என்பார். இங்கிலாந்தில் பரவியிருந்த ஒரு பதிதக் கொள்கையை எதிர்த்துப் போராடும்படி புனித ஜெர்மான்ஸ் என்பவரை இவர் அனுப்பினார்.

## புனித ஜூலியஸ் சித்திரை 12

உரோமையில் பிறந்த இவர் 337ல் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் காலத்தில் திருச்சபைக்கு சங்கடங்கள் ஏராளம் வந்தன. ஆரிய பதிதர்கள் ஓயாது தொல்லை கொடுத்து வந்தார்கள். அலெக்சாந்திரியா நகர் ஆயரான புனித அத்தனாசியுஸ் என்பவரை நெடுங்காலமாக துன்புறுத்தி அவர் மீது பழிசுமத்தினர். அத்தனாசியுஸ் குற்றமற்றவர் என்று உரோமையில் கூடிய சங்கம் தீர்ப்புக் கூறியது. கிழக்கத்திய நாடுகளில் இருந்த பதித ஆயர்களுக்கு திருத்தந்தை ஒரு கடிதம் அனுப்பினார். “அப்போஸ்தலர் காலத்திலிருந்தே உரோமைப் பேராயர் அனைத்திலும் கலந்து ஆலோசிக்கப்பட்டு வந்திருந்தார். கிழக்கத்திய ஆயர்களும் இந்த உரிமைகளை அங்கீகரித்திருக்கின்றார்கள் என்றாலும் நாளடைவில் தங்கள் நடத்தையால் இந்த உரிமையை அவமதித்திருக்கின்றார்கள்” என்று திருத்தந்தை கடிதத்தில் எழுதியிருந்தார்.

## புனித மார்ட்டின் சித்திரை 13

இவர் 649ல் திருத்தந்தை ஆனார். அப்போது “நம் ஆண்டவராகிய இயேசுவிடம் தேவ மனது மட்டுமே உண்டு. மானிட மனது கிடையாது” என்ற பதிதக் கொள்கை பரவியிருந்தது. இதை இவர் கடிந்தமையால் இவரைக் கொல்லும்படி பேரரசன் கட்டளையிட்டான். கொல்லும் படி சென்றவனுடைய கண்கள் இரண்டும் குருடாயிற்று. இன்னொருவனை அனுப்பி திருத்தந்தையை இழுத்து வரச்செய்து அவரை சிறையில் அடைத்தான். அங்கு அவரை ஓராண்டு காலமாக நிந்தித்து உபாதைப் படுத்தினார். இன்னோர் இடத்திற்குக் கொண்டுபோய் மூன்று மாதமாக அவரை ஓர் இருண்ட சிறையில் அடைத்து வைத்திருந்தனர். தம்மை உபாதிப்பவர்களுக்காக அவர் உருக்கமாக செபித்து வந்தார். பின்னர் வேறொர் இடத்திற்கு இவர் கடத்தப்பட்டார். அங்கு ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. இவருடைய தேவ எஜமானரைப் போல இவரும் எல்லோராலும் கைவிடப்பட்டார். நண்பர்கள் இவரை மறந்தார்கள். சிலர் அவருக்கு உதவி செய்ய பயந்தார்கள். இவர் மிகுந்த உபாதைப்பட்டு இறந்தார்.

# ஆன்மாவைத் தேடுவோம்!

இன்று நமது மத்தியிலிருந்து காணாமல் போனவை மற்றும் காணமல் போய்க்கொண்டிருப்பவை

- தபால் நிலையம் (போஸ்ட் ஒவ்பிஸ்)
- காசோலை (செக்)
- செய்தித்தாள் (நியூஸ் பேப்பர்)
- புத்தகங்கள் (புக்ஸ்)
- நிலையான தொலைபேசி (லேண்ட் லைன்)
- தொலைக்காட்சி பெட்டி (டெலிபோன்)
- நமக்குச் சொந்தமான பொருட்கள் (திங்ஸ் வீ ஓன்)
- நம் தனிமை (அவ பிரைவஸ்ட்)

இன்று இந்தப் பட்டியலில் நமது ஆன்மாவையும் சேர்த்துக்கொள்ளலாம். யாரும் அதனைப் பற்றி கவலைப்படுவதில்லை. தேடுவதும் கிடையாது. அதுகாணாமலே போய்க்கொண்டிருக்கிறது. “ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் ஆன்மாவையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? (மாற். 8:36) எனும் இறைவார்த்தையின் ஒளியில் இன்று நமது வாழ்வை சற்று உள்நோக்கிய பயணம் மேற்கொண்டு சிந்தித்தால் இதன் உண்மைத் தன்மை நமக்கு புலப்படும். ஆன்மா என்பது கவனிக்கப்பட வேண்டியது நாம் பெற்றுள்ள எதுவும் அதற்கு ஈடுஇணையற்றது.

சின்ன குறிப்பிடத்தில் நாம் வாசிக்கின்றோம். கடவுள் படைத்தவைகளில் முக்கியமானவை எவை? சரீரமில்லாத சம்மனசுகளும் ஆத்துமமும் சரீரமும் உள்ள மனிதர்களும் தான். மனிதர்களை ஆன்மாவோடும், உடலோடும் படைத்தார். ஆன்மா இறுதியில் விண்ணகத்தில் இறைவனிடம் சேர வேண்டும். அப்படிப்பட்ட முக்கியமான நமது உடலில் உள்ள இந்த ஆன்மாவிற்கு நாம் எந்த அளவிற்கு கவனம் செலுத்துகிறோம்.



ஆன்மாவை எப்படி வளமாக்க வேண்டும்? இதற்கு ஓர் வாய்ப்பு.. நமது உள்ளுயிராக இருக்கின்ற இதனை பொருட்படுத்தி அதற்கு அக்கறை செலுத்த என்ன செய்ய வேண்டும். இதோ சில .....

1. ஆன்ம தூய்மையை பேண வேண்டும்.
2. ஆன்ம நலம் பெற அதற்கு ஞான காரியங்களில் அக்கறை காண்பிக்க வேண்டும்.
3. செபத்தில் ஈடுபட வேண்டும்.
4. இறை அறியாமையில் இருப்போருக்கு அறிவொளியூட்டுதல்.
5. பாவிகள் மனம் மாற அறிவுறுத்துவதும், செபிப்பதும் வேண்டும்.
6. துன்புறுவோருக்கு ஆறுதல் அளிக்க வேண்டும்.
7. பிறரின் தீமைகளை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.
8. நிபந்தனைகளை பொறுமையோடு ஏற்றல் வேண்டும்.
9. வாழ்வோருக்காகவும், இறந்தோருக்காகவும் மன்றாடுதல்.
10. தான தருமங்கள், பிறர் அன்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

“மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” எனப் பதிலளிப்பார் (மத். 25:45).

அதோடு நமது இந்த உள்ளரங்க வாழ்வு மாற்றம் காண முயல வேண்டும். நமது பொருந்தாத தகாத செயல்கள் அனைத்தும் இந்த ஆன்மா எனும் விளைநிலத்தில் வேர் விட்டு நின்று கொண்டிருக்கும். இப்போது நாம் அவற்றைப் பிடுங்கியெறிகிற முயற்சியில் ஈடுபட வேண்டும்.

அரசன் ஒருவன்: அனைவரும் அவனை விரும்பினர். அவன்பால் மரியாதையும் கொண்டனர். புறம் பேசும் ஒருவன் அரசனைப் பற்றி அவதூறு பேசினான், அரசனும் பொறுத்தான். ஒருநாள் அரசன் பெரிய மனம் கொண்டு அவனுக்கு ஒரு மூட்டை மாவு, ஒரு பை நிறைய சோப்பு, ஒரு பாக்கெட் சர்க்கரை கொடுத்து அனுப்பினான். பெருமையும், சந்தோஷமும் கொண்டான். புறம்பேசும் புண்ணியவான் மிகவும் இறுமாப்புடன் குரு ஒருவரிடம் சென்று “என் ஆதரவைப் பெற அரசன் இந்த பரிசுப் பொருட்களை அனுப்பியிருக்கிறான்” என்று பெருமையடித்துக் கொண்டான்.

குரு சொன்னார்: “முட்டாளே, அரசன் செயலை குறைவாக மதிப்பிடாதே “மாவு” பசிக்கும் உன் வயிற்றுக்கு.. “சோப்பு” உன் அழுக்கடைந்த உடலுக்கு.. “சர்க்கரை” புறம் பேசும் உன் கசப்பு நாவிற்கு.. என்று பதில் கூறினார். அந்த புறம்பேசும் புண்ணியவான் அன்றிலிருந்து தன் நடத்தையை நினைத்து மிகவும் வெட்கப்பட்டான்.

உடலின் மீது எவ்வாறு அக்கறை கொண்டிருக்கிறோம். அதே போல் ஆன்மாவின் மீதும் அக்கறை காண்பிக்க வேண்டும்.

## 02 எதேர்ச்சையாக...

பயங்கரமான யுத்த சூழ்நிலையால் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்த நாம், மீண்டும் அவ்வாறான ஓர் கவலைக்கரமான சூழ்நிலையை உருவாக்க எத்தனிப்பது மதிகெட்ட செயலாகும் எனவும் கூறினார். மேலும் நாட்டின் ஒரு பிரதேசத்தில் ஏற்பட்ட கவலைக்கரமான சம்பவத்தினை இனங்களுக்கிடையிலான சச்சரவாக உருமாற்றி, இந்நாட்டை அரசியல் ரீதியாகவும் வெட்கத்துக்குள்ளாக்க முயற்சிக்கும் நபர்களின் திட்டங்களுக்கு ஆளாகாமல், நாட்டின் மதங்களின் கொள்கைகளுக்கிணங்க, வாழ்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். இவ் சந்திப்பில், ஓய்வுபெற்ற மேதகு ஆயர் ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை உள்ளிட்ட, மதிப்பிற்குரிய தேரர் இத்தேபானே தம்மாலோக அவர்கள், பௌத்த, இந்து, இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**தகவல்:- திரு. T. சுனில் பர்னாந்து, ஷரோஷான் பிரதீப்.**

## 01 பாஸ்கா திருவிழிப்பு...

அவை விலகி நின்று, "அவர் இங்கே இல்லை அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார" (மத்தேயு 28:6) என்று, வரலாறு கேட்டிராத மிகப் பெரிய செய்தியைக் கூறுகின்றன. கல்லறையை மூடியிருந்த கல், புதிய வழியை அனைவருக்கும் பறைசாற்றியது. மகிழ்வில் துள்ளி குதித்த அந்தக் கல், நம்மையும் அந்த மகிழ்வில், நம்பிக்கையில், இணைய அழைக்கிறது.

"ஊடுருவக் குத்தியவரை" (காண்க. யோ. 19:36) ஆழ்ந்து சிந்தித்த பெண்களுடன் நேற்று நாமும் இணைந்தது போல், இன்று அவர்களுடன் இணைந்து, காலியான கல்லறையையும், வானதூதர் கூறிய "நீங்கள் அஞ்சாதீர்கள் அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார்" (மத். 28:5-6) என்ற செய்தியை ஆழ்ந்து தியானிக்கவும், நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

வானதூதரின் இச்சொற்கள், நம் வாழ்வை, குறிப்பாக, நாம் பிறருடன் கொண்டுள்ள உறவை சிந்திக்க சவால் விடுகின்றன. எந்த ஒரு சூழலிலும் இறைவன் செயலாற்ற முடியும், அவரது ஒளி, மிகவும் இருளடைந்த பகுதிகளில் ஒளியேற்ற முடியும் என்பதை காலியான கல்லறை நமக்கு உணர்த்துகிறது. மரணத்திற்குப் பின் ஒன்றுமில்லை என்று எண்ணவைக்கும் அந்த இடத்திலிருந்து அவர் உயிர்த்தெழுந்து, அங்கு நமக்காகக் காத்திருக்கிறார்.

அவர் இங்கே இல்லை... அவர் உயிர்த்துவிட்டார்! இந்தச் செய்தியே நம் நம்பிக்கையை உயர்த்திப்பிடித்து, அதை, பிறரன்புப் பணிகளாக வெளிப்படுத்துகிறது. நம் பலமற்ற நிலையை இந்த அனுபவம் அர்ச்சிக்க வேண்டும். குறுகிப்போன நம் கண்ணோட்டங்களை இச்செய்தி புதுப்பிக்கவேண்டும்.

நம் தனிப்பட்ட வரலாறுகளில் இறைவன் எப்போதும் குறுக்கிடுகிறார் என்பதை நம்புவதே, உயிர்ப்பைக் கொண்டாடுவதாகும். நம் நம்பிக்கைகளைப் புதைத்துவிடும் அச்சத்தின் மீது இயேசு வெற்றிகொண்டுள்ளார் என்பதை உணர்வதே, உயிர்ப்பைக் கொண்டாடுவதாகும்.

கல்லறையை மூடியிருந்த கல், இந்தக் கொண்டாட்டத்தை பகிர்ந்துகொண்டது, நற்செய்தியில் கூறப்பட்டுள்ள பெண்கள், இந்தக் கொண்டாட்டத்தைப் பகிர்ந்துகொண்டனர் இப்போது, இந்த அழைப்பு, உங்களுக்கும் எனக்கும் விடுக்கப்பட்டுள்ளது. நம் வாழ்வை, நாம் எடுக்கும் முடிவுகளை, மாற்றியமைக்க விடுக்கப்பட்டுள்ள அழைப்பு. இந்த அழைப்பை ஏற்கப்போகிறோமா? அல்லது, நம் பழைய வாழ்விலேயே தங்கி, நமக்கு முன் நிகழும் அனைத்தையும் கண்டு, மௌனம் காக்கப்போகிறோமா?

அவர் இங்கே இல்லை... அவர் உயிர்த்துவிட்டார்! அவர் உங்களுக்காக கலிலேயாவில் காத்திருக்கிறார். அவர் உங்களை முதல் முறை சந்தித்து, "அஞ்சாதே, என்னைப் பின் தொடர்வாய்" என்று கூறிய இடத்திற்கு மீண்டும் உங்களை அழைக்கிறார்.

## 09 திருத்தந்தையின்...

போர்கள் மற்றும் பசியால் வாடுகின்ற சிறாருக்கு, நம்பிக்கையின்றி, கல்வி வசதி மற்றும் நலவாழ்வு வசதியின்றி உள்ள சிறாருக்கு, உயிர்த்த கிறிஸ்து, புதுவாழ்வை அளிப்பாராக. தன்னலக் கலாச்சாரத்தால் ஒதுக்கப்படும் வயது முதிர்ந்தவர்களுக்காகவும் செபிக்கின்றோம். நம் உலகில் அரசியலுக்குப் பொறுப்பானவர்கள், எப்போதும் மனித மாண்பை மதித்து, பொதுநலனுக்குத் தங்களை அர்ப்பணித்து, தங்கள் குடிமக்களுக்கு வளர்ச்சியும் பாதுகாப்பும் தருபவர்களாக வாழ, அவர்கள் ஞானத்தின் கனிகளைப் பெறுவதற்காகச் செபிப்போம். உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? (லூக்.24,5-6) என, கல்லறையில் பெண்கள் கேட்ட வார்த்தைகள், நம்மிடமும் சொல்லப்படுகின்றன. மரணம், தனிமை, அச்சம் ஆகியவை கடைசி வார்த்தைகள் அல்ல. அவற்றையும் கடந்த, கடவுள் மட்டுமே பேசக்கூடிய ஒரு சொல் உள்ளது. அதுவே உயிர்ப்பு. கடவுளின் அன்பின் வல்லமையால், அது தீமைகளை அகற்றுகின்றது, தவறுகளைக் கழுவுகின்றது, கண்ணீர் சிந்துவோருக்கு மகிழ்வைத் தருகின்றது. வெறுப்பை விரட்டுகின்றது. நல்லிணக்கத்தை வளர்க்கின்றது. வலியோரைத் தாழ்த்துகின்றது.

## 01 கொழும்பு உயர்....

நம்மை அர்ப்பணித்தோம். இயேசு குருக்களை அபிஷேகம் செய்தது அவர்கள் எனக்கு சொந்தமானவர்கள் என்பதைக் காட்டவே. இயேசு தம்மையே இழந்து பெற்றுத் தந்த இந்தக் கிறிஸ்தவத்தை குருக்களாகிய நாம் எமது வாழ்வின் மூலமாக முன்னெடுத்துச் செல்லவேண்டும். இயேசுவின் திட்டம் குருக்களாகிய எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்காகவே குருக்கள் என்ற விசேட அழைப்பை நாம் பெற்றுள்ளோம். குருக்கள் தங்களுக்கு வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும்போது, நீங்கள் இயேசுவின் அருகில் இருக்கின்றீர்கள். இயேசு தனது பாடுகள், உயிர்ப்பு வழியாக அன்பு செய்கின்றார். இன்னும் நீங்கள் அதிகம் அதிகமாக இயேசுவை நோக்கி உங்கள் பயணத்தை தொடரவேண்டும் என்று தனது மறையுரையில் கூறினார்.

## 06 ஆன்மிகத்தை...

**4. சமத்துவம் பேணல்**

சாதி, குலம், பிரதேசம், இனம் பார்த்து ஒருவரைத் தாழ்த்தியும் ஒருவரை உயர்த்தியும் கவனிப்பது தவறு. எல்லோரும் இறைவனின் மக்கள் என்பதை உண்மையாக உணர்ந்து வாழ்தல் வேண்டும்.

**5. பகிர்ந்து வாழ்தல்.**

எம்மிடம் உள்ளதை இல்லாதவர்களுடன் பகிர்ந்து வாழ வேண்டும். அது பணம், அனுபவம், அறிவு, பொருட்கள் எல்லாவற்றிற்கும் பொருந்தும்.

**6. நீதி நேர்மையுடன் வாழ்தல்.**

**மத் 5:10** - "நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது".

**மத் 5:6** - "நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்".

எமது பிள்ளைகளின் மறையாசிரியர்கள் முதலில் பெற்றோர்களே என்பதை நாம் ஒவ்வொருவரும் மனதில் கொள்ள வேண்டும். ஆன்மீகம் பெற்றோரில் தொடங்க வேண்டும். இதைப் பார்த்துப் பிள்ளைகள் வாழ்ப்பழக வேண்டும். இன்று வெறும் வழிபாடுகளையும் சடங்குகளையும் பக்தி முயற்சிகளையும் மட்டும் செய்கிறோம். அதுவே ஆன்மீகம் என்று நினைக்கிறோம். பெற்றோர்கள் வீட்டில் வாழ்வது வேறுவிதம் இறை அரசின் பெறுமதிகளைப் பிள்ளைகள் பெற்றோரில் காணவேண்டும்.

**தொடரும்**

## 07 ஓய்வற்ற சேவை...

நேரிய எண்ணம், எளிமை, கபடமற்ற அன்பு, கனிவான பேச்சு, சொன்னதை நிறைவேற்றும் திறன், திட்டமிடல், நேர முகாமைத்துவம், எதையும் சாதிக்கும் தைரியமும் திறமையும், விடாமுயற்சி, அயராத உழைப்பு, கண்டிப்பு, நிர்வாகத் திறமை, நகைச்சுவையுணர்வு, கலை கலாசார விழுமியங்களை மதிக்கும் பண்பு, மனிதநேயம், பொறுப்புணர்வு, போன்ற இன்னோரன்ன பண்பு பல அவரது பாடசாலை மட்டிலான இலட்சியங்களில் வெற்றியடைய இயல்பாகவே உதவியுள்ளன. தேவாலயம், வகுப்பறைக் கட்டடம், மலசலகூடங்கள், திருத்த வேலைகள் CCT கமரா வசதிகள் பாடசாலை பிரதான மண்டபம் என்பவற்றுடன். புதிய மின்னிணைப்புகள் பாடசாலைக்கான இசைக்கருவிகள், மதில்கள், பிரதான மண்டபம் தொழில்நுட்ப வசதிகள் என பல தேவைகளை தனது பணிக்காலத்தில் பல பணிகளை நிறைவு செய்துள்ளார். அவரது சேவையை எண்ணி நாம் மனம் மகிழ்கின்றோம். எங்கிருந்தாலும் அவரது இறைசேவை சிறப்புற நல்ல உடல் நலத்தை தொடர்ந்து இறைவன் கொடுக்க பிரார்த்திக்கின்றோம். அவரை இந்நாளில் வாழ்த்தி நிற்கின்றோம். தம் சேவையின் அறுவடையை நிறைவாக பெற்று மகிழ்வாராக.

**தகவல் – இராஜேந்திரம் தங்கராஜா செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

## XX அளம்பில் புனித...

எரிக்றொசான் அடிகளார் பொறுப்பேற்றார். இவரின் காலத்தில் பல முரண்பாடுகள் மத்தியில் மக்கள் பல துன்பங்களைப் பட்டனர். அவர் அளம்பில் கோயில் அறை வீட்டில் தங்காது சுவாமி தோட்டத்தில் தங்கியிருந்து வந்து வந்து போவார். மக்கள் தமது ஆன்மீகக் கடமைகளைச் செய்ய மிகவும் கஷ்டப்பட்டனர். அதன் பின் அருட்தந்தை றெக்னோ அடிகளார் 2016 வரை பொறுப்பேற்று பங்குப் பணிமனையில் தங்கி மந்த கதியில் இருந்த ஆன்மீக செயற்பாடுகளை மிகவும் சிறப்பாகத் தரமுயர்த்தினார். அதன் பின் 2016இல் பொறுப்பேற்ற அருட்தந்தை தயாகரன் அடிகளார் அருட்தந்தை றெக்னோ அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் சென்றுகொண்டு இருக்கிறார் என்று திரு எம். ஞானேந்திரன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் கூறியுள்ளார்.

இன்று புதிதாக அமைக்கப்படும் ஆலய கட்டிடப் பணிகள் மிகவும் விரைவாக முன்னெடுக்கப்படுகின்றன. ஏனைய மத மக்களும் வந்து புனித அந்தோனியாரின் ஆசீரைப் பெற்றுச் செல்கின்றனர். பல புதுமைகள் மக்களுக்கு நடப்பதை மக்கள் கூறுகின்றனர். ஆனி மாதம் 1ம் திகதியுடன் கொடியேறி 13ம் திகதி பெருநாள் பூசை, திருச்சுரூபப் பவனி, ஆசீர்வாதத்துடன் முடிவுறும். அளம்பில் கிராம மக்கள் மட்டுமல்ல ஏனைய கிராம மக்களும் புனித அந்தோனியாரின் ஆசீரைப் பெற்றுச் செல்கின்றனர். யாத்திரை ஸ்தலமாக இருப்பதால் கச்சேரியினரின் அனுசரணையும் கிடைப்பது சிறப்பானது எனலாம். இக் கட்டுரையை எழுத தகவல்கள் தந்துதவிய திரு அ.பி அமலதாஸ் அவர்களுக்கும் திரு. மி. ஞானேந்திரர் அவர்களுக்கும் நன்றிகள்.

## வேலைவாய்ப்பு


கொழும்பு புறக்கோட்டை பகுதியில் அமைந்துள்ள கருவாட்டுக் கடைக்கு வேலை செய்ய ஆண் ஒருவரும், சாரதி ஒருவரும், அலுவல காரியாலயத்தில் வேலை புரிய பெண் ஒருவரும் (கணனி அறிவு அவசியம்) தேவைப்படுகின்றனர்.

**மேலதிக விபரங்களுக்கு 0777359892.** (N 0067)


## 02 கொழும்பு மறைமாவட்டத்தின்...

சிறப்பாக அடிகளார் சிந்திக்க வைத்தார். அத்துடன் தியானம் சிந்திக்க மட்டுமன்றி புதிய வாழ்விற்கான மனமாற்றத்துடன் கூடிய புதிய உத்வேகத்தை தருகின்றது என்பதை கழுகின் வாழ்வுச் சரிதையில் வரும் புது வலிமை பெறும் 150 நாள் உடற்கூற்று மாற்ற நிகழ்வுகளை உவமானமாக காட்டி காணொளிக் காட்சிகளுடன் கருத்துரைகள் சிறப்பான விதத்தில் வழங்கப்பட்டன. இருநூறுக்கும் அதிகமாக சேனையாளர்கள் பங்குகொண்ட இத்தியானத்திற்கான முழு ஏற்பாடுளையும் கொழும்பு உயர்மாவட்ட தமிழ் மரியாயின் சேனையாளர்களின் மேற்சபையான பரிகார மாதாகொமிசியம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**தகவல் – இ.தங்கராஜா, செயலாளர், பரிகார மாதா கொமிசியம்**

## XVII ஆஸ்துமாவுக்கு....

தடுக்கப்பட்டு, இரத்தம் மெலிவடையும். இதனால் இதயத்தில் அடைப்புக்கள் ஏற்படுவது நீங்கி, இதய நோய்கள் வரும் அபாயம் குறையும்.

வெங்காயத்தை அடிக்கடி உணவில் பயன்படுத்தினால் பல் சொத்தை மற்றும் வாயில் தொற்றுகள் ஏற்படுவது தடுக்கப்படும். அதிலும் தினமும் பச்சை வெங்காயத்தை வாயில் போட்டு 2 நிமிடம் மெல்லுவதன் மூலம், வாயில் உள்ள பாக்டீரியாக்கள் அனைத்தும் அழிக்கப்படும்.

முகத்தில் பருக்கள் அதிகம் உள்ளதா? உங்கள் அழகு பருக்களாலேயே பாழாகிறதா? அப்படியெனில் வெங்காய சாற்றினை தேன் அல்லது ஆலிவ் ஆயிலுடன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவுங்கள். இதனால் பருக்கள் விரைவில் மறையும்.

இருமல் மற்றும் தொண்டைப்புண் இருக்கிறதா? அதிலிருந்து உடனடி நிவாரணம் கிடைக்க வேண்டுமானால், வெங்காய சாறு மற்றும் தேனை சரிசம அளவில் எடுத்து கலந்து குடியுங்கள். இதனால் வெங்காயத்தில் உள்ள பண்புகள் கிருமிகளை அழித்து விரைவில் நல்ல பலனைத் தரும். வெங்காயத்தில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் மற்றும் ஆன்டி-பாக்டீரியல் பண்புகள், வயிற்று வலி, வயிற்று உப்புசம் மற்றும் இதர வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் போக்கும். ஆகவே வெங்காயத்தைத் தவறாமல் உணவில் சேர்த்து வாருங்கள்.

புற்றுநோயின் அபாயத்தைத் தவிர்க்க வேண்டுமா? அப்படியானால் வெங்காயத்தை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். இதில் உள்ள பொருட்கள், புற்றுநோய் செல்களின் வளர்ச்சி மற்றும் பெருக்கத்தைத் தடுத்து, புற்றுநோய் தாக்குவதைத் தடுக்கும்.

சிறுநீரக பாதையில் பிரச்சினைகளைக் கொண்டவர்கள், வெங்காயம் சாப்பிடுவது நல்லது. அதிலும் 6-7 கிராம் வெங்காயத்தை நீரில் போட்டு கொதிக்க வைத்து இறக்கி, அந்நீரை குடித்து வந்தால், விரைவில் குணமாகும்.

காது வலிக்கிறதா? அப்படியானால் சில துளிகள் வெங்காய சாற்றினை காதில் விடுங்கள். இதனால் உடனே காது வலி சரியாகிவிடும். மேலும் காதுகளில் இருந்து ஏதேனும் சத்தம் வருகிறதா? இதற்கு பஞ்சுருண்டையில் வெங்காய சாற்றினை நனைத்து காதுகளில் வையுங்கள். இதனால் காதுகளில் இருந்து வரும் சத்தம் சரியாகும்.

## XIX வெள்ளவத்தையில்...

கர்நாடகா, Divene சமயத்துறை வல்லுநர் இறை ஜனோதய மறைப்பணி நடுநிலையத்தின் இயக்குனர், அருட்பணி. மத்தேயு ஜோர்ஜ் இந்திட்கோஹியல் அவர்கள், சென்னை, இறை இரக்க மறைப்பணி நடுநிலையத்தில் அருட்பணி வில்லியன் ஜோன் பொஸ்கோ அவர்கள். இந்தியாவில் வின்சன்டிக்கன் சபையின் தலைமையின் கீழ் இயங்கும், கேரளா சாலக்குடி போட்டா டிவைன் விட்றீட் அமைச்சினால் இந் ஞான ஒடுக்கம் வழிநடத்தப்பட்டது.

வெள்ளவத்தை பங்கு மக்களுக்கு இத் தவக்கால ஞான ஒடுக்கமானது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஏனெனில் விபூதிப் புதனில் ஆரம்பித்து தவக்காலத்தை சிறந்த ஆன்மீகத்துடன் ஆரம்பிப்பதற்கு வழிகாட்டியது. இந்நிகழ்ச்சிகளை செவ்வனே செய்வதற்கு எமக்கு அனுமதி வழங்கிய கொழும்பு உயர்மறைமாவட்ட கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், எம்மை நல் முறையில் வழிநடத்திய, எப்போதும் எமது பங்கு நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக இருக்கும் எமது பங்குத்தந்தை, குருமுதல்வர் அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**பெசில் மில் புனித. லோறன்ஸ் ஆலயம் பங்குமகன்.**






# ஏலக்காய்

ஏலக்காயை பாயசம், பிரியாணிக்கு எதற்காக சேர்க்கிறீர்கள்? எனக் கேட்டால் பெரும்பாலானோர் வாசனைக்காக என்றுதான் சொல்வார்கள். ஆனால் அதிலிருக்கும் மருத்துவ குணங்கள் அற்புதமானது. ஏலக்காயின் பிறப்பிடம் இந்தியாதான். இது இஞ்சி வகையை சார்ந்தது. வாசனைப் பொருட்களின் ராணியாக திகழ்கிறது. ஆயுர்வேத மருத்துவத்தில் முக்கிய இடம் ஏலக்காய்க்கு உண்டு. ஜீரண உறுப்புகளின் கோளாறுகளைப் போக்குவதற்கு, வாய்ப்புண், வாய் அல்சர், மன அழுத்தம் என பல நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

ஏலக்காயை உணவில் சேர்த்துக் கொண்டால் நச்சுக்களை சிறுநீரகம் மூலமாக வெளியேற்றிவிடும். சிறுநீரகப் பை, சிறுநீரகம், சிறுநீரகக் குழாய் ஆகியவற்றை சுத்தமாக்கும். ஏலக்காய் கலந்த தேநீர் குடிப்பதால் மன அழுத்தத்திலிருந்து எளிதில் விடுபடலாம் என்று மருத்துவத் துறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏலக்காயை தொடர்ந்து உட்கொள்ளும்போது புற்றுநோய் செல்கள் உடலில் உருவாவது தடுக்கப்படுகிறது. இதயத்தில் இரத்தம் உறையும் அபாயத்தை ஏலக்காய் தடுக்கும் ஆற்றல் கொண்டுள்ளது. 3 ஏலக்காயை பொடி செய்து வெதுவெதுப்பான நீரில் கலந்து உணவு உண்பதற்கு முன் குடிப்பதால் வாய்வுத் தொல்லை ஏற்படாது. விக்கல் நிற்காமல் தொடர்ந்து கொண்டிருந்தால் 2 ஏலக்காயை பொடி செய்து அதனுடன் புதினா இலைகளை சிறிது எடுத்து, நீரில் போட்டு காய்ச்சி குடித்தால் விக்கல் நின்றுவிடும். ஜலதோஷத்தால் மூக்கடைப்பு ஏற்பட்டால் குழந்தைகள் அவதிப்படுவார்கள். அப்போது நான்கைந்து ஏலக்காயை நெருப்பில் போட்டு, அந்தப் புகையை குழந்தைகள் சுவாசித்தால் உடனடியாக மூக்கடைப்பிலிருந்து நிவாரணம் கிடைக்கும். தினமும் பாலில் ஏலக்காய் கலந்தோ அல்லது தேநீரிலோ, உணவிலோ சேர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் உடலின் ஆரோக்கியம் மேம்படும்.

## மன அழுத்தம்...!

# சிறந்த மருந்து சமையல்தானாம்!



மன அழுத்தத்தைப் போக்குவதற்கு என்ன வழி? இந்த கேள்விக்கான விடையைத் தேடித்தான் பலரும் இப்போது அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

மன அழுத்தம் போக்கும் ரகசியத்தை எங்கேயும் தேட வேண்டியதில்லை. உங்கள் வீட்டு சமையலறையிலேயே இருக்கிறது என்று கூறுகிறது உளவியல்.

அப்படி என்ன சமையலறையில் இருக்கிறது என்ற கேள்விக்கு "சமையல்தான் அந்த மருந்து" என்று இன்னும் ஆச்சரியத்தை உருவாக்குகிறார்கள். "மூர்க்கத்தனமாக செயல்படும் மூளை நரம்புகளை அமைதிப்படுத்தவும், உடைந்துபோன இதயத்தை குணப்படுத்தவும், சலிப்பு, கோபம், ஆற்றாமை, கவலை மற்றும் தூக்கமின்மையை குணப்படுத்தவும் சமையலால் முடியும்" என்கிறார் அமெரிக்க உளவியலாளரான கரோல் லிபெர்மென். சமையல் எந்தவிதத்தில் மன அழுத்தத்தைக் குறைக்கிறது என்பதை Addicted to stress என்ற தன்னுடைய புத்தகத்தில் அனுபவப்பூர்வமாகவே விவரிக்கிறார்.

"உணவுக்குத் தேவையான பொருட்களை சேகரிப்பது, விதவிதமான வடிவங்கள் மற்றும் வண்ணங்களில் இருக்கும் காய்கறிகளை வெட்டுவது, மசாலா பொருட்களை வறுப்பது, செய்த உணவை அலங்கரிப்பது என சமைக்கும்போது வழக்கமான கவலைகளில் இருந்து நம் கவனம் திசைமாறுகிறது.

சமையலுக்குப் பயன்படுத்தும் பொருட்களின் நறுமணம் நுகர்வு செல்களையும், காய்கறிகளின் வண்ணங்கள் பார்வை நரம்புகளையும், வறுப்பது, தாளிப்பது போன்ற ஒலிகள் செவிப்புலனையும், பொருட்களைப் பயன்படுத்தும்போது தொடு உணர்வையும் மற்றும் உணவை ருசிக்கும்போது சுவை உணர்வையும் சமையல் ஒருசேர தூண்டுகிறது.

இது முற்றிலும் உங்களின் மனநிலையை மேம்படுத்திவிடுகிறது. இதன்மூலம் நம் உணர்வுகளை முழுமையான கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடியும்.

கடுமையான பணி, போக்குவரத்து இரைச்சல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு, ஆழ்மனதுடன் நம்மை இணைக்கும் அமைதி சூழ் சமையலறை ஒரு தியான அறையைப்போல் இருப்பதால், அங்கே சமைப்பது ஒரு தியானத்துக்கு ஈடான பலனையும் அளிக்கிறதாம்.

அன்பானவர்களுக்காக சமைக்கும்போது அந்த ஆத்மதிருப்தியும் அமைதியைத் தந்துவிடுகிறது. புதிதான ஓர் உணவை தயாரிப்பதால் ஒரு சிசுவை உருவாக்கியதற்கு இணையான உணர்வை படைப்பாளியின் அனுபவத்தையும் சமையல் கொடுக்கிறது" என்கிறார் கரோல் லிபெர்மென்.

சமையல்கட்டையே எட்டிப் பார்க்காத ஆண்களும் இதனை ட்ரை பண்ணிப் பார்க்கத்தான் வேண்டும்...!

## வயிற்றில் பூச்சி இருந்தால்

# வேப்பம்பழம் சாப்பிடுங்க...!



வேப்ப மரத்தின் அடியில் அமர்வதாலும், அதன் காற்றை சுவாசிப்பதாலும், அதனை பார்ப்பதாலும் ஒருவிதமான மன அமைதி கிடைக்கிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை பல மடங்கு பெருக்கக் கூடியது. வயிற்று பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியது. மேலும், புற்றுநோய் வராமலும் தடுக்கிறது. கிருமிகளை அழிக்கக்கூடிய சக்தியும் வேப்ப மரத்திற்கு உண்டு.

வயிற்றில் பூச்சி இருந்தால் தினமும் வேப்பம் பழத்தை சாப்பிடலாம். வேப்பிலையை எலுமிச்சை சாற்றுடன் கலந்து அரைத்து தலைக்கு தேய்க்க பித்தத்தால் ஏற்படும் மயக்கம் சரியாகும். குமட்டல், வாந்தி, மயக்கம் போன்றவை குணமாகும்.

மேலும், மலேரியாவை குணப்படுத்தும் தன்மை வேப்பிலைக்கு இருக்கிறது. நோய் எதிர்ப்பு செல்கள் அதிகரிக்கும். வேப்பிலை கசாயம் கிருமிகளை கொன்று காய்ச்சலை குணப்படுத்தும் தன்மை கொண்டது.


தினமும் காலை நேரத்தில் 10 வேப்பங்கொழுந்து எடுத்து அதனுடன் 5 மிளகையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் மலேரியா காய்ச்சல் குணமடையும். வேப்பங்காய் தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் வைக்க முடியும்.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்று சொல்வதுண்டு. வேப்பக்குச்சியால் தினந்தோறும் பல் துலக்கினால் பற்கள் வலிமை பெறுவதோடு, ஈறுகள் பிரச்சினையும் இருக்காது.

பித்தவெடிப்புக்கு வேப்பிலை சிறந்த மருந்தாக பயன்படுகிறது. வேப்பிலை மற்றும் மஞ்சள் சேர்த்து அரைத்து பூசி வந்தால் பித்தவெடிப்பு மற்றும் கால் பாதம் எரிச்சல் போன்றவை குணமடையும்.

# ஆஸ்துமாவுக்கு குட்-பை!

## வல்லமை தரும் வெங்காயம்...!



அனைவரது சமையலறையிலும் இருக்கும் ஒரு பொதுவான உணவுப் பொருள் தான் வெங்காயம். இது உணவின் சுவையை அதிகரிக்க உதவுவது மட்டுமின்றி, ஏராளமான ஆரோக்கிய நன்மைகளையும் தன்னுள் கொண்டது.

இதற்கு வெங்காயத்தில் அடங்கியுள்ள மருத்துவ பண்புகள் தான் முக்கிய காரணம். ஆனால் வெங்காயத்தைக் கொண்டு ஆஸ்துமா பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பது தெரியுமா? வெங்காயத்தில் 2 வகைகள் உள்ளன. ஒன்று வெள்ளை, மற்றது சிவப்பு. இவற்றில் சிவப்பு வெங்காயம் தான் ஆஸ்துமாவை குணப்படுத்துவதில் சிறந்தது. ஏனெனில் இதில் ஆன்டி-ஆக்ஸிடன்டுகள் மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகள் ஏராளமான அளவில் நிறைந்துள்ளன. அது மட்டுமல்ல, சிவப்பு வெங்காயத்தில் வைட்டமின் சி, சல்பர், ஆன்டி-பாக்டீரியல் மற்றும் ஆன்டி-வைரல் பண்புகளும் அடங்கியுள்ளன. பல்வேறு ஆய்வுகளிலும் சிவப்பு வெங்காயத்தில் உள்ள தியோசல்பினேட், க்யுயர்சிடின், ஆந்தோசையனின் மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் தான் ஆஸ்துமா மற்றும் அலர்ஜியை குணப்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இப்போது ஆஸ்துமா பிரச்சினையிலிருந்து விடுபட சிவப்பு வெங்காயத்தை எப்படிப் பயன்படுத்துவது என்று பார்ப்போம்.

* சிவப்பு வெங்காயம் - 1/2 கிலோ
* தேன் - 6-8 டேபிள் ஸ்பூன்
* நாட்டுச்சர்க்கரை - 300-350 கிராம்
* எலுமிச்சை - 2
* தண்ணீர் - 5-6 டம்ளர்

### செய்முறை:

முதலில் ஒரு பாத்திரத்தில் நாட்டுச்சர்க்கரை சேர்த்து உருக வைக்க வேண்டும். பின் அதில் வெங்காயத்தை நறுக்கிப் போட வேண்டும். அடுத்து அதில் நீர் சேர்த்து கிளறி, நன்கு கொதிக்க விட வேண்டும். நீர் கொதித்து நன்கு சுண்டிய நிலையில், அடுப்பை அணைத்து கலவையை இறக்கி குளிர வைக்க வேண்டும். பின் அதில் எலுமிச்சைகளைப் பிழிந்து, தேன் சேர்த்து கலந்து, ஒரு கண்ணாடி பாட்டிலில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

உட்கொள்ளும் முறை: பெரியோருக்கு ஆஸ்துமா என்றால், ஒவ்வொரு வேளை உணவு உண்பதற்கு முன்பும் ஒரு டேபிள் ஸ்பூன் சாப்பிட வேண்டும். அதுவே குழந்தைகளுக்கு என்றால் ஒரு டீஸ்பூன் சாப்பிட வேண்டும். இதனை ஆஸ்துமாவுக்கான அறிகுறிகள் மாறும் வரை பின்பற்ற வேண்டும்.

ஏனைய நன்மைகள் வெங்காயத்தை உணவில் அதிகம் சேர்த்து வந்தால், அதனால் இரத்த செல்கள் உறைவது......

# திருத்தந்தையின் (2018) புனித வார நிகழ்வுகள்



## புனித வியாழன், அருள்பணியாளருக்கு திருத்தந்தையின் மறையுரை

பங்குனி, 29, புனித வியாழன் காலை 9.30 மணிக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில், புனித எண்ணெய் அர்ச்சிக்கும் திருப்பலியை தலைமையேற்று நடத்தினார். இத்திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் மறைமாவட்ட அருள்பணியாளருக்கும், இன்னும் உலகில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் உள்ள அருள்பணியாளருக்கும் வழங்கிய மறையுரையின் சுருக்கம்:

நாசரேத்து தொழுகைக்கூடத்தில் இயேசு மக்களுக்கு தன் முதல் செய்தியை வழங்கிய நிகழ்வை இன்றைய நற்செய்தியில் வாசித்தோம். இயேசு போதித்த வேளையில், “தொழுகைக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே உற்று நோக்கியிருந்தன” (லூக்கா 4:20) என்று கூறப்பட்டுள்ளது. அவ்வளவு திறமையுடன் இயேசு மக்களுக்குப் போதித்தார். இயேசு விரும்பியிருந்தால், அவர் மறைநூல் அறிஞராக, தொழுகைக்கூடங்களில் போதித்தபடி வாழ்ந்திருக்கலாம். ஆனால், அவரோ, மக்களுடன் நெருங்கியிருக்க விரும்பியதால், ஒரு “தெருப்போதகராக” மாறினார். மக்களுடன் நெருங்கியிருப்பதை, வெறும் பணியாக மட்டும் நோக்காமல், அதையே தன் வாழ்வாக மாற்றினார். இத்தகைய மனநிலையை அருள்பணியாளர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு “தெருப்போதகராக” எவ்வாறு வாழ்வது என்பதை, சீடரான பிலிப்பு, இயேசுவிடமிருந்து கற்றுக்கொண்டார் (காண்க திருத்தூதர்பணிகள் 8:4.5-8). ஆண்டவரின் ஆவியார் தன்னை “எடுத்துச் செல்வதற்கு” பிலிப்பு தன்னையே கையளித்தார் (தி.ப 8:36-40).

மக்களுடன் நெருங்கியிருப்பது, நற்செய்தியை அறிவிப்போருக்கு அவசியமான மனநிலை. இத்தகைய நெருக்கம் இரக்கத்தின் விளைவாக உருவாகிறது. நல்ல சமாரியரைப்போல செயல்பட வைக்கிறது.

அருள்பணியாளர்களின் தாயாகிய மரியாவை, “நெருக்கத்தின் அன்னை” என்று அழைக்கலாம். கானா திருமணத்தில், அன்னை மரியா மக்களுக்கு நெருக்கமாக இருந்ததால், அங்கு உருவான குறையை உடனே உணர்ந்தார். குறையைத் தீர்ப்பதற்கு, “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்று கூறினார். “இயேசு உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்ற சொற்களைத் தியானிக்கும்போது, “ஆன்மீக உரையாடல்”, “ஒப்புரவு அடையாளம்”, “போதித்தல்” என்ற மூன்று வழிகளில், அருள்பணியாளர்கள் மக்களுடன் நெருங்கியிருக்க முடியும் என்பதை உணரலாம்.

“ஆன்மீக உரையாடல் வழியே நெருங்கியிருத்தல்” சமாரியப் பெண்ணுடன் இயேசு உரையாடும்போது, அப்பெண், தன் தவறை உணர்வதற்கு வழி செய்கிறார். அப்பெண், பிறருக்கு நற்செய்தியை அறிவிக்கும் அளவுக்கு அவரைத் தூண்டுகிறார். அருள்பணியாளர்கள் மேற்கொள்ளவேண்டிய “ஆன்மீக உரையாடலுக்கு” இந்நிகழ்வு, ஓர் எடுத்துக்காட்டு.

“ஒப்புரவு அருளடையாளம் வழியே நெருங்கியிருத்தல்: விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை, இயேசு கனிவுடன் நெருங்கி வந்ததால், அவரது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. “நானும் தீர்ப்பளிக்கவில்லை” (யோவான் 8:11) என்று இயேசு கூறியபோது, அவர் கண்களில் தெரிந்த கனிவை, அருள்பணியாளர்கள் ஒப்புரவு அருளடையாளத்தில் வெளிப்படுத்தவேண்டும்.

“போதிப்பதன் வழியே நெருங்கியிருத்தல்”: பேதுரு வழங்கிய முதல் மறையுரையை சிந்தித்துப் பார்க்கலாம். அவரது போதனையைக் கேட்ட மக்கள் “உள்ளம் குத்தப்பட்டவர்களாய்” உணர்ந்தனர். “நாங்கள் என்ன செய்யவேண்டும்?” (தி.ப 2:37) என்று கேட்டனர்.

அருள்பணியாளர் மறையுரை வழங்கும்போது, செபத்தின் வழியே அவர் எவ்வளவு தூரம் இறைவனுடன் நெருங்கியிருக்கிறார் என்பதையும், வாழ்வின் வழியே எவ்வளவு தூரம் மக்களுடன் நெருங்கியுள்ளார் என்பதையும் உணரலாம்.

மக்களுடன் நெருங்கியிருக்கும் அருள்பணியாளர், நல்ல ஆயனைப்போல், மக்களுடன் செல்கிறார். சில வேளைகளில் முன்னே நடக்கிறார் வேறு சில வேளைகளில் உடன் நடக்கிறார், அல்லது, அவர்களுக்குப் பின்னே நடக்கிறார்.

“நெருக்கத்தின் அன்னை”யான மரியாவிடம் செபிப்போம். நாம் ஒருவர் ஒருவருடன் நெருங்கியிருக்கவும், மக்களுடன் நெருங்கியிருக்கவும், அவற்றின் வழியே, இயேசுவுடன் என்றென்றும் நெருங்கியிருக்கவும், அன்னை மரியா உதவுவாராக!

# உயிர்ப்புப் பெருவிழா



## திருத்தந்தையின் மறையுரை

சித்திரை, 1, உயிர்ப்புப் பெருவிழா ஞாயிறன்று காலை 10.30 மணிக்கு புனித பேதுரு பசிலிக்கா பேராலய வளாகத்தில் சிறப்புத் திருப்பலியை தலைமையேற்று நடத்தியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவ்வேளையில் வழங்கிய மறையுரையின் சுருக்கம்:

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, இன்றைய இறைவார்த்தையைக் கேட்கும்போது, மூன்று எண்ணங்கள் எழுகின்றன.

முதல் எண்ணம் - அறிவிப்பு. ஆண்டவர் உயிர்த்துவிட்டார் என்ற இந்த அறிவிப்பு, தொடக்க கால கிறிஸ்தவர்களிடையே ஒருவரை ஒருவர் வாழ்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இறைவனின் அறிவிப்புக்கள் எப்போதும் வியப்பைக் கொணர்ந்துள்ளன. ஆபிரகாமை அழைத்தது முதல், மீட்பு வரலாற்றில் இறைவன் தந்த அறிவிப்புக்கள் அனைத்தும் வியப்பைத் தந்துள்ளன. முதலில், அறிவிப்பு தரும் வியப்பு.

இரண்டாவது: விரைவு. உயிர்ப்பின் அறிவிப்பைக் கேட்ட பெண்கள் விரைந்து சென்றனர். பெண்கள் கூறிய செய்தியைக் கேட்ட பேதுருவும், யோவானும் கல்லறைக்கு விரைந்து சென்றனர். இயேசு பிறப்பின் அறிவிப்பைக் கேட்ட இடையர்கள், பெத்லகேமுக்கு விரைந்தனர். கிணற்றடியில் இயேசுவைச் சந்தித்த சமாரியப்பெண், ஊருக்குள் விரைந்து சென்றார். இன்றும் இது நம்மிடையே நிகழ்கின்றது. ஊருக்குள் ஏதாவது ஒன்று நடக்கும்போது, அதைக் காண விரைந்து செல்கிறோம்.

உயிர்ப்புச் செய்தியைக் கேட்ட ஒரே ஒருவர் மட்டும் தாமதித்தார். “அவரது காயங்களைக் கண்டால் நான் நம்புவேன்” என்று கூறிய தோமாவுக்காக, இறைவன் பொறுமையுடன் காத்திருந்தார்.

மூன்றாவது, கேள்வி. அறிவிப்பைக் கேட்டதும் விரைந்து செயல்படுவதை விட்டு, கேள்விகளை எழுப்புதல் நம்மிடையே உள்ளது. கேள்விகள் எழும்போது, அது, “நாளை பார்க்கலாம்” என்று, நம் செயல்பாடுகளை தள்ளிவைக்கத் தூண்டுகிறது.

2018ம் ஆண்டு உயிர்ப்பு விழா நமக்குச் சொல்வது என்ன? அறிவிப்பைக் கேட்டு விரைந்து செயலாற்றுகிறோமா? அல்லது, கேள்விகள் கேட்டு, முடிவுகளைத் தள்ளிப் போடுகிறோமா?

# சிலுவைப்பாதையின் முடிவில், திருத்தந்தை கூறிய செபம்



பங்குனி 30, புனித வெள்ளி, இரவு 9.15 மணிக்கு, உரோம் நகரின் மையத்தில் அமைந்துள்ள கொலோசெயம் என்ற திடலில் நடைபெற்ற சிலுவைப்பாதையின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறிய செபம்:

ஆண்டவராகிய இயேசுவே, வெட்கம், மனவருத்தம், நம்பிக்கை ஆகியவற்றால் நிறைந்துள்ள எம் பார்வை உம்மைநோக்கித் திரும்பியுள்ளது. உன்னதமான உம் அன்பிற்குமுன், எம் பாவங்களுக்காய் நீர் துன்புற்றபோது, உம்மை, தனியே விட்டுச் சென்றதற்காக நாங்கள் வெட்கப்படுகிறோம். “அனைவரும் உம்மைவிட்டு ஓடிப் போய்விட்டாலும், நான் ஓடிப்போக மாட்டேன்” என்று ஆயிரம் முறை சொன்னாலும், சோதனை வந்ததும் தப்பியோடியதால் உண்டாகும் வெட்கம் இது. உமக்குப் பதிலாக பரபாஸையும், உமக்குப் பதிலாக அதிகாரத்தையும், உமக்குப் பதிலாக வெளித்தோற்றத்தையும், உமக்குப் பதிலாக, பணம் என்ற கடவுளையும், நித்திய வாழ்வுக்குப் பதிலாக இவ்வுலக வாழ்வையும் தேர்ந்ததால் உண்டாகும் வெட்கம் இது.

ஒவ்வொருமுறையும் துன்பம் வந்ததும், “நீர் கடவுளின் மகன் என்றால், காப்பாற்றும், நாங்கள் நம்புவோம்” என்று சொன்னதால் உண்டாகும் வெட்கம் இது. உமது பணியாளர்கள் உட்பட, எத்தனையோ பேர், பேராசையாலும், வெறுமையான புகழாலும் ஏமாற்றப்பட்டதால் உண்டாகும் வெட்கம் இது. பிரிவுகளாலும், போர்களாலும் சிதைந்துபோன உலகை, தன்னலத்தால் விழுங்கப்பட்டுவரும் உலகை, இளையோர், சிறியோர், நோயுற்றோரை ஒதுக்கித்தள்ளும் உலகை, இளையோரிடம் விட்டுச்செல்லும் எம் தலைமுறையால் உண்டாகும் வெட்கம் இது. வெட்கம் என்ற உணர்வை, தொலைத்துவிட்டதால் உண்டாகும் வெட்கம் இது.

ஆண்டவராகிய இயேசுவே, புனிதமான வெட்கம் என்ற அருளை, எப்போதும் எமக்குத் தாரும். பொருள் செறிந்த உம் அமைதிக்கு முன், இரக்கத்தைக் கெஞ்சிக் கேட்கும் எம் பார்வை, மனவருத்தம் நிறைந்ததாய் உள்ளது. தீமையிலிருந்து நீர் மட்டுமே எங்களைக் காப்பாற்றமுடியும் என்ற உறுதியிலிருந்து பிறக்கும் மனவருத்தம் இது.

வெறுப்பு, தன்னலம், அகந்தை,பேராசை, பழிக்குப்பழி என்ற தொழுநோயிலிருந்து உமது அன்பு ஒன்றே எங்களைக் குணமாக்கமுடியும் பிள்ளைகளுக்குரிய மாண்பைத் தரக்கூடிய உமது அன்பு ஒன்றே, எங்களை மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்ல முடியும் என்ற உறுதியிலிருந்து பிறக்கும் மனவருத்தம் இது.

தன் அவலத்தின் ஆழத்திலிருந்தபோது, உம்மிடம் மட்டுமே தன் சக்தியை உணர்ந்த தாவீதின் மனவருத்தம் இது. உமது கண்களைச் சந்தித்த வேளையில், உம்மை மறுதலித்ததை எண்ணி அழுத்த பேதுருவின் மனவருத்தம் இது. புனிதமான மனவருத்தம் என்ற அருளை, எப்போதும் எமக்குத் தாரும். உமது உன்னத மாட்சிக்கு முன், எங்கள் விரக்தி என்ற இருளில் நம்பிக்கை பிறக்கிறது, ஏனெனில், அளவற்ற அன்பே உம் அன்பின் அளவு என்பதை உணர்கிறோம்.

நன்மை ஒன்றே தீமையை வெல்லும், மன்னிப்பு ஒன்றே பழிவாங்கும் உணர்வை வெல்லும், உடன்பிறந்த உணர்வே பகைமையை வெல்லும் என்ற உம் செய்தி, இன்றும் பலருக்குத் தூண்டுதலாக அமைவதால் உருவாகும் நம்பிக்கை இது.

விரைவில் வரும் இலாபம், எளிதில் கிடைக்கும் பணம் ஆகியவற்றால் விழுங்கப்பட்டுவரும் இவ்வுலகில், உமது தியாகம், இன்னும் பலரின் உள்ளங்களைத் தொட்டு, அவர்கள் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க தூண்டுதலாக அமைவதால் உருவாகும் நம்பிக்கை இது. உறங்கிக்கொண்டிருக்கும் உலகின் மனசாட்சிக்குச் சவால் விடுக்கும் வண்ணம், வறியோர், புலம்பெயர்ந்தோர், சுரண்டப்படுவோர், பசியுற்றோர், சிறைப்படுத்தப்பட்டோர் நடுவே, மறைப்பணியில் ஈடுபடுவோர், தொடர்ந்து உழைப்பர் என்ற நம்பிக்கை இது.

உமது திருஅவைக்கு எதிராக பல அவதூறுகள் எழுந்தாலும், தன்னலமற்ற தாராள மனதுடன், அது மனிதருக்குப் பணியாற்றி வருகிறது என்பதை அறிவதால் வரும் நம்பிக்கை இது.

வெளிவேடக்காரர் மற்றும் சட்ட அறிஞர்களின் பேராசையாலும் கோழைத்தனத்தாலும் உருவாக்கப்பட்ட உமது சிலுவை, உயிர்ப்பின் ஊற்றாக, கல்லறை இருளை அகற்றும் உதயமாக உள்ளது என்பதை அறிவதால் வரும் நம்பிக்கை இது.

புனிதமான நம்பிக்கை என்ற அருளை, எப்போதும் எமக்குத் தாரும்.

# இரத்தினபுரி மறைமாவட்டத்தின் தவக்கால நிகழ்வுகள்

## மறையாசிரியர்களுக்கான தவக்கால ஞான ஒடுக்கம்



கடந்த பங்குனி 2ம், 3ம் திகதிகளில் தவவில - புனித அன்னம்மாள் திருத்தலத்தில் நடைபெற்றது. இதனை மறைப்பணி நிலையத்தின் இயக்குனர் அருட்தந்தை என்டன் மொரிஸ் அடிகளார் ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வில் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு கிளிட்டஸ் பெரேரா (O.S.B) ஆண்டகை அவர்களும், அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். ஞான ஒடுக்கத்தின் ஒரு பகுதியான சிலுவை பாதை பயணத்தில் ஆயர் அவர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதிகள், மறையாசிரியர்கள் சிலுவை சுமந்துகொண்டு போவதையும், கலந்துகொண்டவர்களையும் படத்தில் காண்கின்றோம்.

## கலபொட பங்கில் தமிழ் பேசும் மக்களுக்காக நடாத்தப்பட்ட ஐந்தாவது சிலுவை பாதை



கடந்த 10ம் திகதி சனிக்கிழமையன்று காலை 9.00 மணிக்கு கலபொட புனித சவேரியார் ஆலய பங்கு அருட்தந்தை ரொமேஸ் அடிகளார் இவ்வருடமும் ஏற்பாடு செய்திருந்தார். ஏராளமான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். மலையக மக்களே பெருந்திரளாக திரண்டு வந்திருந்தனர். சிலுவைகளின் புலம்பல் நாடகமும், ஏழு திருவசனங்கள் தியானித்தலும், திருப்பலியும் இடம்பெற்றது. பத்துக்கும் மேற்பட்ட அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கலந்துகொண்டு மக்களை ஊக்குவித்தனர். முக்கியமான நிகழ்வுகளைப் படத்தில் காணுகின்றோம்.

## தொலஸ்வலைப்பங்கு – ஹப்புறுகல தோட்ட மக்களின் சிலுவைப்பாதை



தொலஸ்வலை பங்கின் சகோதர ஆலயமான ஹப்புறுகல புனித அந்தோனியார் ஆலய இறைமக்களின் சிலுவைப்பாதை பயணம் பங்கு அருட்தந்தை கேப்ரியல் அல்பிரட் (யேசு சபை) அடிகளாரின் அனுசரணையுடன் சிலுவைப்பாதை தியானம், வியாகுல பிரசங்கம், ஆண்டவரின் திருப்பாடுகளின் புலம்பல் நாடகமும் நடைபெற்றது. அதனை சித்தரிக்கும் படங்களை காணுகின்றோம்.

**தகவல் – படங்கள் : மேரி இருதயநாதன், பேராலயம், இரத்தினபுரி**

## எமது மறைக்கோட்ட இறைமக்களின் சிலுவைப்பாதை



கடந்த 17ம் திகதியன்று இரத்தினபுரி மறைக்கோட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திறந்தவெளி சிலுவைப்பாதை தஞ்சன் தென்ன விண்ணேற்பு மாதாவின் ஆலய வளவில் ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டவரின் திருத்துயிலின் விளக்கமும், தொடர்ந்து ஒப்புரவு அருட்சாதனம் வழங்கும் நிகழ்வும், சிலுவைப்பாதை பயணமும் இறுதியாக திருப்பலியுடன் நிறைவு பெற்றது. ஆயர் ஆண்டகை ஒப்புரவு அருட்சாதனம் வழங்குவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படத்தில் காணுகின்றோம்.

## எமது பேராலயத்தில் குருத்து ஞாயிறு



குருத்து ஞாயிரன்று இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிட்டஸ் பெரேரா (O.S.B) ஆண்டகை வருகை தந்திருந்தார். குருத்தோலை பவனியிலும் கலந்கொண்டு திருப்பலியும் நிறைவேற்றினார். குருத்தோலை பவனியில் ஆயர் ஆண்டகை கலந்துக் கொண்டதைக் காணுகின்றோம்.

## எமது பேராலய பங்கில் நடைப்பெற்ற தேசிய மகளிர் தினம்



கடந்த 11ம் திகதி ஞாயிறன்று பேராலய அன்னையர் சங்கத்தினரால் மகளிர் தின வைபவம் கரிட்டாஸ் - செத்மினி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. விசேட திருப்பலியும் ஏற்பாடு செய்யப்பட்டு மகளிர் திருப்பலியில் காணிக்கை வழங்குவதையும், தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் நான்கு மத தலைவர்களும் கலந்துகொண்டனர். ஆயர் மேதகு கிளிட்டஸ் பெரேரா (O.S.B) ஆண்டகை தலைமை தாங்கினார்.

பௌத்த மத குரு, ஆயர் ஆண்டகை அவர்கள் மங்கள விளக்கு ஏற்றுவதையும், மகளிர் வரவேற்பு நடனம் ஆடுவதையும், வைபவத்தில் கலந்துக் கொண்டவர்களையும் படத்தில் காணுகின்றோம்.

# மாணவத் தலைவர்களின் அர்ப்பணம்



கொழும்பு 13, புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா மறைப்பாடசாலையின் 2018ம் ஆண்டிற்கான மறைப்பாடசாலை மாணவர் தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டு, 18.03.2018 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணித் திருப்பலியில் தங்களது அர்ப்பணத்தை செய்துகொண்டார்கள். அர்ப்பணம் செய்த மாணவத் தலைவர்களையும், மறையாசிரியர்களையும், பங்குத்தந்தை அருட்பணி. A.F மார்சிலியார் அமதி அடிகளாரையும், திருப்பலி ஒப்புக்கொடுத்த அருட்தந்தை வசந்தன் அமதி அடிகளாரையும் படத்தில் காணலாம்.

**படம் : திரு. மைக்கல், தகவல் : திருமதி. செரோஷினி பற்றிக்**

## வெள்ளவத்தையில் வின்சன்டிக்கன் சபையினரால் நடத்தப்பட்ட தவக்கால ஞான ஒடுக்கம்



வெள்ளவத்தை புனித லோறன்ஸ் பங்கில் கடந்த மாசி மாதம் 12ம் திகதி தொடக்கம் 16ம் திகதி வரையான 5 நாள் தவக்கால ஞான ஒடுக்கம் ஒன்று தமிழ் பேசும் பங்குமக்களுக்காக வின்சன்டிக்கன் சபையின் அருட்தந்தையர்களால் வழிநடத்தப்பட்டது. அருட்தந்தையர்களின் மறையுரைகளானது, ஆன்மீகத்தை வளர்த்துக் கொள்ளக் கூடியதாகவும், தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வதற்கான சிறந்த உந்துசக்தியாகவும் இருந்தன....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# புனித அந்தோனியார் கோயில் வரலாறு

முல்லைத்தீவு மாவட்டம் கடல் வளம், வயல் வளம், காட்டு வளம், மலை வளம் எல்லாமே உள்ள பிரதேசமாகும். அதில் அளம்பில் கிராமம் இந்த வளங்களைக் கொண்ட நிலமாகும். ஆதியில் பணிக்கர்கள் தமது பரிவாரங்களுடன் அதாவது பாகன், வேலைகாரன், கிடங்கு வெட்டுபவன், சமையற் காரன், காவற்காரன் போன்றோருடன் கற்கோவளத்திலிருந்து வந்து அளம்பில் கிராமத்தில் குடியேறினர். நீர் வளம் உள்ள இடங்களில் கிடங்குகள் வெட்டி தங்களது பழகிய யானையையும் சேர்த்து கால் கயிறு போட்டு யானைகளைப் பிடித்தனர். பிடித்த யானைகளைப் பந்தியமைத்து கண்டி அரசனுக்கும், யாழ்ப்பாண அரசனுக்கும் ஒரு முழம் ஒரு பவுணுக்கு விற்று பெரும் செல்வந்தராக வாழ்ந்தனர். மேலும் விவசாயம் செய்தவாறு ஆனிரை (பசு), ஆடு, எருமை மாடு போன்றவற்றை வளர்த்ததால் பால், தயிர், மோர், நெய் போன்றவை எப்போதும் இருந்தது. கமச்செல்வம், கால் நடைச் செல்வத்துடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் முருக பக்தராக இருந்தனர். இவர்கள் சின்ன வன்னியனுக்கு உறவுக்காரராக இருந்தனர். தார்ப்பார் பங்கு கொண்ட முதன்மையானவர்கள் இவர்களாகும். பொதுவாக தார்ப்பார் கூட்டத்துக்கு ஏழு கோறளையில் இருந்து செல்லும் பணிக்கர்களில் முதன்மை பணிக்கர்களாக இருந்தனர்.

இவர்களில் வேலப்பணிக்கன் முதன்மையானவனாகும். இவருக்குப் பிள்ளைச் செல்வம் இல்லாததால் பெரும் மனக்குறையோடு வாழ்ந்தார். காரணம் (அரசு) ஆட்சியுரிமை வேறு நபருக்குக் கைமாறிவிடுமே என்ற குறையாகும். 1698ல் கால் நடையாக யாழ்ப்பாணம் சில்லாலைக் கிராமத்திலிருந்து கிறிஸ்தவத்தைப் போதிக்கவந்த குருவானவர் யோசவ் வாஸ் அடிகளார் திருகோணமலைக்குப் போகும் வழியில் அளம்பில் கிராமத்தை வந்தடைந்தார்.

கிராமத்தின் முதன்மையானவராயிருந்த வேலப்பணிக்கர் அவரை அன்னமளித்து உபசரித்தார். அப்போது பிள்ளையில்லாத தமது மனக்குறையையும் வெளிப்படுத்தினார். அதற்கு அக் குருவானவர் “மறுமுறை வருமுன் மகவுடன் நீ இருப்பாய்” என அவரை ஆசீர்வதித்துக் கூறினார். ஓராண்டு கழிந்து குருவானவர் மீண்டும் திருகோணமலைக்குப் போகும் வழியில் அளம்பிலை அடைந்தார். குருவானவரின் வருகையை அறிந்த வேலப்பணிக்கர் ஆரவாரத்துடன் கையில் மகவுடன் அவரை வணங்கி ஆசீர்வதிக்குமாறு குருவானவரின் காலடியில் பிள்ளையை வளர்த்தினார். பிள்ளையையும், பணிக்கர் குடும்பத்தினரையும் ஆசீர்வதித்துக் குழந்தைக்குத் திருமுழுக்குக் கொடுத்து அந்தோனி என்னும் பெயரையும் சூட்டினார். மேலும் அந்தோனியார் பெயரில் ஒரு கோயிலை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். பணிக்கர் அதன்படி பனை ஓலையால் வேயப்பட்ட ஒரு கொட்டிலை அமைத்து சைவ சமய முறைப்படி பொங்கலிட்டு ஆராதனை செய்து வழிபட்டனர். இதனால் ஏனைய பணிக்கர்களின் எதிர்ப்பையும் சந்திக்க நேரிட்டது. சஞ்சலங்களும், மனத் துயரங்களும் பணிக்கருக்கு ஏற்பட்டன. அன்றிலிருந்து அளம்பில் புனித அந்தோனியார் கோயில் வளர்ந்து வந்தது. இங்கே உப்பளமும், வில்போன்ற ஆழமான குளமும் இருந்ததால் அளம்வில் மருவி அளம்பில் என்ற பெயருடன் இன்றும் இக்கிராமம் வழங்கி வருகின்றது. ஆழமான வில்லுக்குளத்திலிருந்து




தமது விவசாயத்துக்கு மக்கள் நீரைப் பெற்றனர். இந்த ஆலயம் 1950-1960 காலப்பகுதியில் யாத்திரைத் தலமாக அரச வர்த்தமானியில் பதிவு பெற்று சிறப்பாக ஆனி மாதம் 13ம் திகதி பெருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது.

1960-1980 காலப்பகுதியில் மிகவும் சிறப்பாக பக்திச் சிரத்தையுடன் சோடனைகள், ஆர்ப்பரிப்புக்கள், வெடி முழக்கங்கள், மேளச்சத்தம் போன்றவற்றுடன் கிடாரங்களில் பெரு விருந்து சமைத்து வழங்கப்பட்டன. நேர்த்திப் பொருட்களாக பணிஸ், பாற்சோறு, பாண், பிஸ்கற், அப்பம் போன்றவையும் சோறு கறி, குழையல் போன்றவையும் பக்தர்களால் வழங்கப்பட்டன.

மேலும் தை மாதத்தில் புனித செபஸ்தியார் பெருநாளைக் கொண்டாடி வருகின்றனர். இதனைப் புதிர்ப் பெருநாள் என அழைத்தனர். அன்று நோய் நொடி அகற்றி ஊரைக் காப்பாற்றிய செபஸ்தியார் பெருநாளில் கோயில் மூப்பர் இல்லத்தில் பகல் புதிர் குழைக்கப்பட்டு வழங்கப்படும். அதற்கு புதுக்குடியிருப்பு, வலைஞர் மடம், முல்லைத்தீவு, கொக்கிளாய் போன்ற பல கிராமங்களிலிருந்து பக்தர்கள் வண்டில் கட்டி வந்திருந்து புதிரையும் மகிழ்வோடு உண்பர்.

1980 இன் பின் இடம்பெற்ற யுத்தம் காரணமாக கோயிலைச் சுற்றி எணிகணை, குண்டு வீச்சு, விமானக் குண்டுகளும் சரமாரியாக இடம் பெற்ற போதும் பலர் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டார்கள். 1984ல் மக்கள் அனைவரும் இடம்பெயர நேரிட்டது. பங்குத்தந்தை அந்தோனியார், செபஸ்தியார் சுரூபங்களைஎடுத்துச் சென்றார். அதன்பின் ஏவப்பட்ட எறிகணைகள், குண்டு வீச்சுக்களால் கோயிலும், வீடுகளும் அழிந்தன. மீளத்திருத்துவதும், திரும்பவும் அழிவதுமாகப் பல முறை இடம்பெற்றன. அதன் பின் அருட்தந்தை ரீ.ஏ. தவராச சிங்கம் அவர்களால் ஆலயம் புனரமைக்கப்பட்டு வழிபாடுகளும், கிறிஸ்துவின் பாடுகளும் மிகச்சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவுப் பங்கின் ஒரு பகுதியாக இருந்த அளம்பில் தனிப்பங்காகப் பிரிக்கப்பட்டு ஆயர் அவர்களினால் அருட்தந்தை. ஆர். யூட் அமலதாஸ் அடிகளார் முதலாவது பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். வீதி போக்குவரத்து, மின்சார வசதிகள் இல்லாமல் இருந்தும் பங்கு மக்களின் உதவியுடன் சிறப்பாகப் பெருநாள் கொண்டாடப்பட்டது. அதன்பின் அருட்தந்தை நேசன் அடிகளார் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். யாத்திரைத்தல பணிகளைச் சிறப்பாகச் செய்தார். 1980-1990 காலப் பகுதியில் அருட்தந்தை ஸ்ராலின் அடிகளார் புனித அந்தோனியார், புனித செபஸ்தியார் சுரூபங்களை எடுத்துச்சென்று கூழாமுறிப்பில் பாதுகாத்தார். 2008 இறுதி இடப்பெயர்வு யுத்தத்தின் போது மக்கள் அனைவரும் இடம்பெயர அருட்தந்தை நேசநாயகம் அடிகளார் அந்தோனியார் சுரூபத்தினையும் பாதுகாப்பாகத் தம்முடன் எடுத்துச் சென்று வவுனியா வேப்பங்குளம் ஆலயத்தில் வைத்துப் பாதுகாத்து பின்னர் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட போது திரும்பவும் சுரூபம் வைக்கப்பட்டது. 2010ல் பங்குத்தந்தையாக ...

15

**தொகுப்பு**
**பேராசிரியர். எஸ்.ஜே. யோகராசா**

# திரு இருதயநாதர் ஆலயம், கிருலப்பனை ஆன்மீக எழுச்சித் திருப்பயணம் 2018

ஒரு மாதகால நீடிய பயணம். பயணம் இறைவனுடன் என்றால் பாலைவனப்பயணம் கூட பூங்காவனப்பாதை தான். ஆம். “ஆண்டவரே, பேசும். உம் அடியான் கேட்கிறேன்.” என்ற மகுடவாக்கின் கீழ் கிளேரீசியன் துறவற சபையினரால் வழிநடத்தப்பட்டதே ஆன்மீக எழுச்சித்திருப்பயணம் 2018 ஆகும்.

நுகேகொட புனித சூசையப்பர் ஆலயத்தை பங்காகக்கொண்டு, அதன் உப பங்காக விளங்குவதே நமது திரு இருதயநாதர் ஆலயமாகும். ஆலய வரலாற்றில் இவ்வாறானதொரு ஞானஒடுக்கம் நடைபெற்றது முதன்முறை என்பது குறிப்பிடத்தக்க விடயம். 2018 தைமாதம் 28ம் திகதி முதல் மாசி மாதம் 25ம் திகதி வரை இவ் ஆன்மீக எழுச்சித்திருப்பயணம் பயணித்தது. தவக்காலத்திற்கு முன்னதாகவே ஒரு மனமாற்றம் அவசியம் எனக்கருதி நல்லாயனாம் வதிவிடத்தந்தை பிரதீப்குமார் அவர்களின் உள்ளத்தில் உதித்த கனவின் நனவே இவ் ஆன்மீக எழுச்சித்திருப்பயணம். கனவினை நனவாக்க இறைவனின் அருளால் அனுப்பப்பட்டவர்கள் தான் கிளேரீசியன் துறவற சபையினர்.

தை மாதம் 28ம் திகதி காலை அருட்பணி அல்பர்ட் ஜே அருள்ராஜா CMF தலைமையில் அருட்பணி சுரேந்திரகுமார் CMF மற்றும் அருட்பணி தனுஷ்க CMF அடிகளார்களின் ஒன்றிப்பில் ஆரம்பத் திருவழிபாட்டுடன் ஆன்மீக எழுச்சித்திருப்பயணத்திற்கான கொடியேற்றப்பட்டு பயணம் இனிதே ஆரம்பமானது. அன்று தொடக்கம் ஐந்து வட்டாரங்களுக்குமான இல்லத்தரிசிப்பு, வட்டாரக் கூட்டங்கள் மற்றும் வட்டாரத் திருப்பலிகள் யாவும் இடம்பெற்றன. இதற்காக கிளேரீசியன் துறவறசபையைச் சேர்ந்த அருட்தந்தையர்களான அருட்பணி ரூபன் CMF, அருட்பணி தேவசீலன் CMF, அருட்பணி ரொஹான் CMF அடிகளார்களும் எம்மோடு இணைந்து தமது பங்களிப்பினை வழங்கினர்,

பங்கு மட்டத்தில் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவருக்குமான விஷேட செயற்பாடுகள் இடம்பெற்றன. மறைமாணவர்களுக்காக விஷேட பயிற்சிப்பட்டறை அருட்பணி மில்வெர் அடிகளாரின் கிளசிகா குழுவினால் (Clasika team) நடாத்தப்பட்டது. இதன்போது மாணவர்களின் தன்னம்பின்கை, சுய ஆற்றல், குழு ஒற்றுமை என்பன தெளிவாக உணரப்பட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை. அத்துடன் இளைஞர்களுக்கான கருத்தமர்வு அருட்பணி சுரேந்திரகுமார் அடிகளாரினால் நடாத்தப்பட்டது. இளைஞர்கள் பங்கின் முதுகெலும்பு என்பதை ஆழமாக வலியுறுத்தி கருத்தமர்வு நடாத்தப்-பட்டது. அடுத்த நிகழ்வாக திருமணமான தம்பதிகள் மற்றும் பெற்றோருக்கான கருத்தமர்வு அருட்பணி ஸ்டீபன் அடிகளாரால் முன்னெடுக்கப்பட்டது. “குடும்பம் இறைவனின் இல்லம்” என்றதோடு பெற்றோரினால் ஒழுங்கு செய்யப்பட்ட திருப்பலியின் போது திருமண வார்த்தைப்பாடு புதுப்பிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். அதுமட்டுமன்றி “பங்களிக்கும் திருச்சபை” என்ற தலைப்பில் அருட்பணி ஜோய் மரியரட்ணம் அடிகளாரால் ஒரு சிறிய கருத்தமர்வு இடம்பெற்றது.

மேலும் ஆலயத்தில் இயங்கும் பக்தி சபைகளான மரியாயின் சேனை மற்றும் கிதுதன புபுதுவ ஆகியவற்றுக்கான கருத்தமர்வு அருட்பணி பிரதீப் குமாரினால் நடாத்தப்பட்டது. ஏனைய அனைத்து சபைகளுக்கான கருத்தமர்வு செத்சரன நிறுவனத்தின் பணிப்பாளரான அருட்பணி ராமநாயக்க அடிகளாரால் வழிநடத்தப்பட்டது.

ஆன்மீக எழுச்சித்திருப்பயணத்தின் இறுதி வாரத்தில் மறைமாணவர்களால் 7 அருளடையாளங்களும் அடங்கிய அருளடையாள கண்காட்சி நடாத்தப்பட்டது. அதில் போட்டி முறையில் முதல் மூன்று இடங்களுக்குமான பரிசில்களும் வழங்கப்பட்டன. இதன்மூலம் மறை-மாணவர்களின் காட்சிப்படுத்தல் திறன் மற்றும் அதனை ஒப்புவிக்கும் ஆற்றல் வெளிப்படுத்தப்பட்டமை குறிப்பி-டத்தக்க விடயம். அதுமட்டுமல்லாமல் அவ்வாரத்தில் அருளடையாளங்கள் தொடர்பான கருத்தமர்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டு அருட்பணி ரொயின்ஸ்டன் அடிகளாரால் வழிநடத்தப்பட்டது. இதன்போது பங்கு மக்களிடம் அருளடையாளங்கள்தொடர்பானகேள்வி-களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. மேலும் இறுதியாக ஒப்புரவு அருளடையாளம் வழங்குதலும், விஷேட மன ஆற்றுப்படுத்தல் வழிபாடும் அருட்பணி அன்ரனி பெர்னான்டோ அடிகளாரால் நடாத்தப்பட்டது.

அதன்பின் பங்கின் ஐந்தாண்டு திட்டம் கிளரீசிய துறவறசபையின் இலங்கை பிரதேச தலைவர் அருட்பணி ரெக்ஸ் கொன்ஸ்டடைன் மற்றும் அருட்பணி ஜோய் மரியரட்ணம் அடிகளார்களின் தலைமையில் முதலாவது ஒருநாள் அமர்வு நடைபெற்றது. இது பங்கின் வளர்ச்சிக்கு புத்துயிர் அளிக்கும் நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்க விடயம். இதன்போது ஐந்தாண்டிற்கான இலக்கு தயாரிக்கப்பட்டு ஆன்மீகம், அருளடையாள வாழ்வு, பங்கு வாழ்வு, குடும்பவாழ்வு மற்றும் சமூக வாழ்வு என்ற தலைப்புக்களின் கீழ் நோக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அதற்கமைவான வேலைத்திட்டங்களும் முன்மொழியப்பட்டன. இறுதியாக மாசி 25ம் திகதி ஆன்மீக எழுச்சித்திருப்பயணத்தின் உச்சக்கட்ட இறுதி திருப்பலி மறைபரப்பு செயற்பாட்டிற்கான கொழும்புப் பேராயரின் பிரதிநிதி வணக்கத்திற்குரிய அருட்பணி தயா வெலிகடாராச்சி அடிகளார் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியில் புதிய மாணவர் பதவியேற்பும், வாக்குறுதி புதுப்பித்தலும் மற்றும் ஆலய அபிவிருத்தி சபையினரின் வாக்குறுதி புதுப்பித்தலும் இடம் பெற்றது. திருப்பலியின் பின் வட்டாரங்களினால் கலை நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்-பட்டு மேடையேற்றப்பட்டதோடு அருட்பணி ரெக்ஸ் கொண்ஸ்டடைன் அடிகளார் சிறப்புரை ஆற்றினார். ஆலய குடும்பங்களின் தகவல் படிவங்கள் அடங்கிய கோவைகள் அனைத்தும் மீண்டும் அருட்பணி அருள்ராஜா அடிகளாரால் அருட்பணி பிரதீப் குமார் அடிகளாரிடம் கையளிக்கப்பட்டது. அதன் பின் அருட்பணி பிரதீப் குமார் அடிகளாரின் நன்றியுரையினைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதன்பின் இவ்வாறான ஒரு ஞானஒடுக்கம் நடைபெற்றது என வரலாறு எடுத்துரைக்கும் முகமாக ஆலய உட்சுவரில் தயாரிக்கப்பட்ட நினைவே-டானது அருட்பணி ரெக்ஸ் கொண்ஸ்டடைன் அடிகளாரின் கரங்களினால் திறந்துவைக்கப்பட்டது. அதன்பின் ஆன்மீக எழுச்சித்திருப்பயணத்தின் முதல்நாள் ஏற்றப்பட்ட கொடி கீழிறக்கப்பட்டு அன்றைய தினம் புதிதாக பதவியேற்ற மாணவர் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதியாக சகோதர உணவுப்பகிர்தலுடன் ஆன்மீக எழுச்சித்திருப்-பயணம் இனிதே நிறைவுற்றது. இது முடிவு அல்ல மாறாக ஆரம்பம் என்பது நாம் அறிந்ததே. ஆகவே இவ்வாறனதொரு நிகழ்விற்காக உழைத்த அனைத்து அருட்தந்தையர்கள் உட்பட பங்குமக்கள் அனைவருக்கும் கோடானகோடி நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

**தகவல் : செல்வி. சகானா, கிருலப்பனை பங்கு.**

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்





அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்



### திருமண சேவைகள்

- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்